தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

விலை 30 ரூபா • தீபம் 179 • 24.03.2019



ஞானம் ஐஸ்கிறீம்

திருமண நாள் மற்றும் பிறந்த நாள் பூப்புனித நீராட்டு விழாக்களுக்கும் ஏனைய விழாக்களுக்கும் ஓடர் மூலம் வழங்கப்படும். கோடை காலத்தை குளிர்மையாக்கிட குடும்பத்துடன் சென்று மகிழ்ந்திட ஞானம் ஐஸ்கிறீம்.

இதோ புதுப் பொலிவுடன் பசுமைப் பூங்காவில் ஞானம் ஐஸ்கிறீம்.

டிப்போ சந்தி அருகில் கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
தொலைபேசி இல: 0775230064


## சூழ்ச்சி வலையில் மக்கள் போராட்டம்





## திருக்கேதீஸ்வரமும் மடுமாதாவும்



## அடுத்தடுத்து வீழ்ந்த விமானங்கள் புலிகள் கையாண்ட தந்திரம்


Yarl Ahi Ice Cream

யாழ் அகி ஐஸ்கிறீம்

திருமண நாள் மற்றும் பிறந்தநாள் பூப்புனித நீராட்டு விழாக்களுக்கும் ஏனைய விழாக்களுக்கும் வாகன வசதியுடன் வழங்கப்படும். மேலதிக விவரங்களை அறிந்திட www..yarl.com ஐ பார்வையிடவும்

இல. 46, கனகபுரம் வீதி, கிளிநொச்சி
No.46, Kanakapuram Road, Kilinochchi.
T.P : 021 791 7585 / 077 023 2328





# வன்மை அழியும் மென்மை வாழும்



நன்கு மூப்படைந்து , சாகப்போகிற நேரத்தில், ஒரு சந்நியாசி, தன் சீடர்களுக்கு வாழ்க்கை தத்துவம் ஒன்றை புரியவைக்க நினைத்தார். எல்லோரையும் அழைத்து உட்கார வைத்து, அவர்களுக்கு தன் பொக்கை வாயை திறந்து காண்பித்தார். அவ்வளவுதான்! வாழ்க்கைத் தத்துவம் இதுதான்' என்று சொல்லிவிட்டு, சீடர்களைப் போகும்படி சொல்லிட்டார். சீடர்களுக்கு ஒன்றும் புரியவில்லை, ஒரே ஒரு சீடன் மட்டும் வாய்க்குள் அப்படியென்ன வாழ்க்கைத் தத்துவம் இருக்கப் போகிறது என்று குழம்பியபடி, மெதுவாக குருவை எழுப்பி அவன் குழப்பத்தைச் சொன்னான்.. .. 'என் வாய்குள் என்ன இருந்தது?' என்று அவர் கேட்டார்

'நாக்கும் உள்நாக்கும் இருந்தது!'

'பல் இருந்ததா?'

'இல்லை.'

"அதுதான் வாழ்க்கை.. வன்மையானது அழியும், மென்மையானது வாழும்"

என்று விளக்கம் கூறி முடித்தார் அந்தத் துறவி.

## 5 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்




# விடை தெரியுமா?



1. மீன் பிடிக்கத் தெரியாதாம். வலை பின்னுவானாம். அவன் யார்?
2. உணவை எடுப்பான் உண்ண மாட்டான். அவன் யார்?
3. காலில் தண்ணீர் குடிப்பான். தலையில் முட்டை இடுவான். அவன் யார்?
4. நடந்தவன் நின்றான். கத்தியை எடுத்து தலையைச் சீவினேன். மறுபடியும் நடந்தான். அவன் யார்?
5. ஓடையில் ஓடாத நீர் , ஒருவரும் குடிக்காத நீர். அது என்ன?

விடைகள்
1. சிலந்தி 2. அகப்பை 3. தென்னை
4. பென்சில் 5. கானல்நீர்




## அறிந்துகொள்வோம்

உணவு நன்கு ஜீரணித்த பின்னர் அளவோடு உண்டால், உடம்பிற்கு எந்த மருந்தும் தேவையில்லை. அதாவது காலை 8 மணிக்கு சிற்றுண்டி அருந்தினால், பகல் 12 மணிக்கு பசி எடுக்க வேண்டும். பசி எடுத்தால்தான், காலை உண்ட சிற்றுண்டி ஜீரணித்துள்ளது என்று பொருள். முன் உண்ட உணவு ஜீரணித்து விட்டால், பின் வேண்டிய அளவே அறிந்து உண்ண வேண்டும். குறைந்த அளவு இன்னதென்று அறிந்து உண்பவனிடம் இன்பம் நிலைத்து நிற்கும். அதுபோல் மிகப் பெரிதாய் உண்பவனிடம் நோய் நிலைத்து நிற்கும்.

## வினாவும் விடையும்

1. கப்பலுக்கு அபாயம் நேராமல், பாரமேற்றும் அளவைக் காட்டும் கோடு எப் பெயரால் அறியப்படும்?
2. ஓர் ஈயத்துண்டும், ஓர் இறகும் எந்த நிலையில் ஒரே வேகத்தில் விழும்?
3. ஒரு பொருள் ஏன் கறுப்பாகத் தெரிகின்றது?
4. வெடிமருந்து என்பது என்ன?
5. மின்சார பல்பில் ஏன் காற்று அகற்றப்படுகின்றது?

**விடைகள்**

1. ஃபிலிம்சோல் கோடு
2. இரண்டும் வெற்றிடத்தில் போடப்பட்டால்
3. எல்லா நிறங்களும் ஈர்க்கப் பட்டு, எந்த நிறமுமே பிரதி பலிக்காததால்
4. வெடி உப்பு, கந்தகம், நீர் என்பவற்றின் கலவை.
5. உலோக இழைகளில் ஒக்சைட் உண்டாகாமல் இருப்பதற்காக

## நிலா நிலா



நிலா நிலா ஓடிவா
நில்லாமல் ஓடிவா
பலகாலம் இப்படிப்
பாடிப் பயனில்லையே

மலைமேல் ஏறிநீ
வருவாய் என்றே எண்ணினோம்
மல்லி கைப்பூக் கொண்டுநீ
தருவாய் என்றும் பாடினோம்

எத்த னைநாள் பாடியும்
ஏனோ நீயும் வரவில்லை
சத்தம் போட்டுப் பாடியும்
சற்றும் நெருங்கி வரவில்லை

உன்னை விரும்பி அழைத்துமே
ஓடி நீ வராததால்
விண்க லத்தில் ஏறியே
விரைவில் வருவோம் உன்னிடம்.



முகிலைத் துளைத்த புலிகள் – 03

# அடுத்தடுத்து வீழ்ந்த விமானங்கள் புலிகள் கையாண்ட தந்திரம்

விமானப் பறப்புக்கு புலிகள் தற்காலிக ஓய்வைக் கொடுத்தனர் என்றும் ஆனால் வெற்றிகரமான கட்டமைப்பு ஒன்றை நிறுவினர் என்றும் கடந்த வாரம் கூறியிருந்தோம். புலிகள் வெற்றிகரமாகக் கட்டமைத்த கட்டமைப்பு விமான எதிர்ப்புப் பிரிவு.

அது 1995 ஆம் ஆண்டு – மூன்றாம் கட்ட ஈழப் போரின் தொடக்க காலப்பகுதி. சந்திரிகா வுடனான சமாதானப் பேச்சு முறிந்ததைத் தொடர்ந்து சண்டை தொடங்கி சில நாட்களே ஆகியிருந்தன. இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்காகப் பெரும் நகர்வு ஒன்றுக்கு தயாராகிக் கொண்டிருந்தது. குறுகிய சமாதான காலப் பகுதியைப் புலிகள் நன்றாகப் பயன்படுத்தினர். தேவையான ஆயுதங்களை இறக்கியிருந்தனர். அவ்வாறு வந்த ஆயுதங்களுக்குள் விமான எதிர்ப்பு ஆயுதமும் ஒன்று.

யாழ்ப்பாணத்தில் பலாலி உள்ளிட்ட வலி. வடக்கு பிரதேசத்தில் கணிசமான பகுதி இராணுவத்தின் பிடியில் இருந்தது. இதேபோல தீவகப் பகுதிகளும் இராணுவத்திடமே இருந்தன. இந்தப் பகுதிகளில் நிலைகொண்டிருந்த இராணுவத்துக்கு திருகோணமலையிலிருந்தே தேவையான பொருட்கள் ஆயுதங்கள் வந்து கொண்டிருந்தன. ஆளணிகளும் துருப்புக் காவி கப்பல்கள் மூலமே வந்தன. ஆனால் கப்பல்கள் மூலம் பயணிப்பது என்பது இராணுவத்துக்கு பெரும் சவாலாக இருந்தது. காரணம் கடற்புலிகள்.

இரண்டாம் கட்ட ஈழப் போரில் புலிகளின் மிகப் பெரும் வெற்றியில் கடற்புலிகள் பிரதான பங்கு வகித்திருந்தனர். அவ்வளவும் ஏன் மூன்றாம் கட்ட ஈழப்போரே திருமலை துறைமுகத்தில் தரித்து நின்ற ரணவிரு, சூரயா என்ற இரு கப்பல் தகர்ப்புடனே (19 ஏப்ரல் 1995) தொடங்கியிருந்தது. இதனால் கப்பல் பயணம் என்பதை நினைக்கவே இராணுவத்துக்கும் அரசாங்கத்துக்கும் குலைநடுங்கியது. ஆனால், யாழ்ப்பாணத்துக்கான போர் நடவடிக்கைகளில் தீவிரமாக இருந்த இராணுவத்துக்கு இது பெரும் தலையிடியாக மாறியது.

போர் நடவடிக்கையில் தீவிரமாக இருந்த இராணுவம் கடல் பயணத்தைத் தவிர்த்து விட்டு, வான் மார்க்கத்தை நம்பியது. அதை விட அவர்களுக்கு வேறு தெரிவும் இருக்கவில்லை. இதனால் படைகள், அதிகாரிகளை விமானங்களில் அனுப்புவதே சிறந்தது என்ற முடிவுக்கு வந்தது அரசாங்கம். புலிகளும் இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்திற்காகவே காத்திருந்தார்கள் – புலிகள் விரித்த வலையில் விழுவதற்காக விமானங்கள் பறந்தன.

1995 ஏப்ரல் 29 ஆம் நாள் – மூன்றாம் கட்ட ஈழப்போர் தொடங்கி 10 நாட்களே ஆகியிருந்தன. அவ்ரோ விமானம் படை அதிகாரிகள், படையினரை சுமந்து கொண்டு பலாலிக்குப் பறந்தது. இந்தத் தருணத்திற்காகத்தானே காத்திருந்தார்கள் புலிகள். சத்தம் சந்தடியின்றி அலுவலை முடிப்பதுதானே புலிகளின் பாணி. வெற்றிகரமாக தாக்குதலை முடித்திருந்தனர் புலிகள். அதன் பலன் புத்தூர் நவக்கிரியில் கிடைத்தது. இந்தச் சம்பவத்தில் 38 இராணுவத்தினர் பலியாகினர்.

ஆனால், தொழில்நுட்பக் கோளாறால் விமானம் வீழ்ந்தது என செய்தி வாசித்தன அரச ஊடகங்கள். புலிகளின் உத்தியோகபூர்வ வானொலியான புலிகளின் குரலும் அதே செய்தியைத்தான் வாசித்தது. வல்லைவெளியில் வைத்து விமானத்தை சுட்டதை மக்கள் கண்டிருந்தனர். இந்தச் செய்தி தீயாய் பரவியபோதும் புலிகள் தரப்பில் இருந்து பலத்த மௌனமே நிலவியது. காரணம் புரியாமல் தவித்தவர்களுக்கு புலிகளின் தந்திரம் புரியவில்லை.

அவ்ரோ விமானம் வீழ்ந்தது புலிகளின் கட்டுப்பாட்டுக்குள், இதனால் விமானத்தை ஆராய்வதற்கான வழி அரசுக்கோ அல்லது இராணுவத்துக்கோ இருக்கவில்லை. புலிகளிடம் விமான எதிர்ப்பு ஆயுதம் இருக்கும் என்பதை அரசு நினைத்தும் பார்க்காததாலும் புலிகள் சாதித்த கள்ள மௌனமும் அரசாங்கத்துக்கும் ஒரு நம்பிக்கையைக் கொடுத்தது. இதனால் அடுத்தநாளும் ஒரு விமானத்தை அனுப்பியது. அதிகாரிகள், படையினர் என 54 பேருடன் வந்த விமானத்தைப் புலிகளின் விமான எதிர்ப்பு ஆயுதம் பதம் பார்த்தது. கச்சிதமான குறி விமானம் தப்பவில்லை. ஆனால் இம்முறை விமானம் வீழ்ந்தது இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் அரசாங்கம் விழித்துக்கொண்டது. புலிகளின் கள்ளமௌனத்தால் ஒரு விமானத்தையும் 54 படையினரையும் இழந்து விட்டோமே என விழித்துக் கொண்டது. மறுநாள்தான் மக்களுக்கு புலிகளின் தந்திரம் புரிந்தது.

**அவ்ரோ விமானம் வீழ்ந்தது புலிகளின் கட்டுப்பாட்டுக்குள், இதனால் விமானத்தை ஆராய்வதற்கான வழி அரசுக்கோ அல்லது இராணுவத்துக்கோ இருக்கவில்லை. புலிகளிடம் விமான எதிர்ப்பு ஆயுதம் இருக்கும் என்பதை அரசு நினைத்தும் பார்க்காததாலும் புலிகள் சாதித்த கள்ள மௌனமும் அரசாங்கத்துக்கும் ஒரு நம்பிக்கையைக் கொடுத்தது.**

நவக்கிரியில் வீழ்ந்த விமானத்தை தாமே சுட்டு வீழ்த்தினர் என புலிகள் உரிமை கோரியிருந்தால் மறுநாள் விமானத்தையும் படையினரையும் அரசாங்கம் அனுப்பியிருக்காது. உஷாராகி முன்னமே விமான எதிர்ப்பு ஆயுதங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கும். எனவே அடுத்த விமானத்தை வீழ்த்துவதற்கு புலிகளுக்கு அதை விட வலிமையானஆயுதம் தேவைப்பட்டிருக்கும். இது பெரும் செலவாகவும் அமைந்திருக்கும். ஆனால் புலிகள் கையாண்ட தந்திரத்தால் இரண்டாவது விமானத்தையும் 54 படையினரையும் இராணுவம் இழந்தது.

இந்த இரு சம்பவங்களுக்கும் பிறகு யாழ்ப்பாணத்துக்கு விமானங்கள் எதையும் அரசு அனுப்பவில்லை. விமான எதிர்ப்பு ஆயுதங்களுக்கு எதிரான ஆயுதங்கள் பொருத்தப்பட்ட பின்னரே விமானங்கள் யாழ்ப்பாணத்தின் வான் வழியில் பறக்கத் தொடங்கின.

வான்படைக் கட்டமைப்பின் விமான எதிர்ப்புப் பிரிவு புலிகள் நிறுவிய முதல் சந்தர்ப்பம் இதுதான். ஆனால் அப்போது இந்தப் பிரிவு பெரிதாக இருக்கவில்லை. இதற்கென சிறப்பு பயிற்சிகளையும் வெளிநாடுகளில் பெறவில்லை. இந்த இரு விமானங்களையும் சுட்டு வீழ்த்தியவர் ஒருவரே. தலைவர் பிரபாகரனின் நம்பிக்கையான தளபதிகளில் ஒருவர் – புலிகளில் இலக்கை துல்லியமாக சுடுவதில் வல்லவர்கள் என்ற பட்டியலை தயாரித்தால் அதில் முதல் வரிசையில் கட்டாயம் இவரின் பெயர் இருக்கும்.

அவர் யார்? அவருக்கும் வான் புலிகளுக்கும் என்ன தொடர்பு என்பதை அடுத்த வாரம் பார்ப்போம்...!

மு.திருநாவுக்கரசு

# திருக்கேதீஸ்வரமும் மடுமாதாவும் தமிழரின் ஒற்றுமை அடையாளம்



இலங்கைத் தீவில் நூற்றாண்டிற்கும் மேலாய் நிகழ்ந்து வரும் தமிழின எதிர்ப்பு யுத்தம் பல்பரிமாணத் தன்மை வாய்ந்தது. சட்டங்களினாலும், நிர்வாக ஏற்பாடுகளினாலும் அரசியல் நடவடிக்கைகளினாலும், இனப்படுகொலை, கலவரங்களினாலும், சிங்களக் குடியேற்றங்களினாலும், பொலிஸ்-இராணுவ நடவடிக்கைகளினாலும், இராணுவ ரீதியான பாரிய இனப்படுகொலை நடவடிக்கைகளினாலும் ஒருபுறம் இனஅழிப்பு முன்னெடுக்கப்படுகிறது.

இதேவேளை தமிழ் பேசும் மக்களிடையே காணப்படக்கூடிய மத மற்றும் சாதி முரண்பாடுகளைப் பயன்படுத்தி அவர்கள் மத்தியில் மோதல்களை உருவாக்குவதன் மூலமும், பிரித்தாளும் தந்திரத்தைப் பிரயோகிப்பதன் மூலமும் இன அழிப்பு முன்னெடுக்கப்படுகிறது. தமிழ் பேசும் மக்கள் மத்தியில் காணப்படக்கூடிய எந்தொரு முரண்பாட்டையும் தனக்குச் சாதகமான வகையில் கையாள்வது எதிரியின் தொழிலாகும். இதனை இராஜதந்திர நெறிமுறையில் பிரித்தாளும் தந்திரம் என்று கூறுவர்.

இந்துக்களுக்கும் – முஸ்லிம்களுக்கும் இடையே காணப்பட்ட இடைவெளியைப் பயன்படுத்தி இரு சமூகங்களுக்கும் இடையே பெரும் பகையை வளர்ப்பதில் பிரேமதாஸ அரசாங்கம் 1990களின் முற்பகுதியில் பெரு வெற்றியீட்டியது. இதில் அன்றைய பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ண தலையாய பாத்திரம் வகித்தார் எனத் தெரியவருகிறது. இதில் ஏற்பட்ட விரும்பத்தகாத விபரீதங்களை இந்துக்களும் – முஸ்லிம்களும் கடந்தாக வேண்டிய வரலாற்றுக் கட்டாயம் இரு தரப்பினருக்கும் உண்டு. அதற்காக முதலில் இந்துக்கள் தரப்பில் இருந்து நேசக்கரம் பெரிதாக நீள வேண்டியதும் அவசியம்.

தற்போது இந்துக்களுக்கும் – கிறிஸ்தவர்களுக்கும் இடையே மத பூசல்களை ஏற்படுத்தும் வகையில் கவலைக்கிடமான விடயங்கள் அரங்கேறத் தொடங்கியுள்ளன. இந்துக்களுக்கும் – கிறிஸ்தவர்களுக்கும் இடையே ஒருபோதும் அடிப்படையான பகைமை இருந்ததில்லை. ஆங்காங்கே அரிதாக சில பூசல்கள் இருந்தாலும் அவை பகைமைத் தன்மைமிக்கவையாக ஒருபோதும் இருக்கவில்லை. முரண்பாடுகள் தென்படும் போது பதவியில் இருக்கக்கூடிய ஒடுக்குமுறை புரியும் ஆட்சியாளர்கள் அதனை தூபமிட்டு வளர்ப்பார்கள் அல்லது பின்னணியாகவும் இருப்பார்கள். இது விடயத்தில் இரு தரப்பினரும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டியது அவசியம்.

> **வடக்கு – கிழக்குத் தழுவிய தமிழ் மண்ணில் இந்துக்களுக்கும் – கிறிஸ்தவ தமிழர்களுக்கும் இடையேயான உறவு பாலுக்குள் கலந்த சீனி போல் நல்நிலையில் இருந்தது. கிறிஸ்தவ வேதாகம நூலான பைபிளை முதலில் தமிழில் மொழி பெயர்த்தவர் சைவத்துடனும், தமிழுடனும் தன்னை அடையாளப்படுத்திய ஆறுமுக நாவலர் என்பது கவனத்திற்குரியது.**

பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் தெற்கில் கிறிஸ்தவ – பௌத்த முரண்பாடுகள் பெரிதாக எழுந்த போதிலும் தமிழ் மண்ணில் அப்படி எந்தவித பகைமையையும் இந்துக்களுக்கும் – கிறிஸ்தவர்களுக்கும் இடையே காணமுடியாது. இலங்கையில் நடைபெற்ற முதலாவது இனக்கலவரம் 1883ஆம் ஆண்டு கிறிஸ்தவர்களுக்கு எதிராக பௌத்தர்கள் மேற்கொண்ட கொட்டாஞ்சேனைக் கலவரமாகும். இதில் இரண்டு சிங்கள கிறிஸ்தவ பொது மக்களும், ஒரு பொலிஸாரும் கொல்லப்பட்டனர். ஆனால் இக்கால கட்டத்தில் வடக்கு – கிழக்குத் தழுவிய தமிழ் மண்ணில் இந்துக்களுக்கும் – கிறிஸ்தவ தமிழர்களுக்கும் இடையேயான உறவு பாலுக்குள் கலந்த சீனி போல் நல்நிலையில் இருந்தது.

கிறிஸ்தவ வேதாகம நூலான பைபிளை முதலில் தமிழில் மொழி பெயர்த்தவர் சைவத்துடனும், தமிழுடனும் தன்னை அடை யாளப் படுத்திய ஆறுமுக நாவலர் என்பது கவனத்திற்குரியது. அரசாங்க உத்தியோகத்தில் கண்ணாக இருந்த சைவத் தமிழர்கள் உத்தியோகத் திற்கான கல்வியை கிறிஸ்தவ மிஷனரிக் கல்லூரிகளில் பெறும் பாரம்பரியம் தமிழ் மக்கள் மத்தியில் உருவாகியிருந்தது. உத்தியோகம், ஆங்கிலக் கல்வி, கிறிஸ்தவ மிஷனரிகள் என்பன ஒன்றிணைந்தவாறு தமிழ் மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்திருந்தன. இந்நிலையில் தமிழ்ச் சைவர்கள் மத்தியில் கிறிஸ்தவ எதிர்ப்பு உருவாகுவதற்கான புறநிலைச் சூழல் சிறிதும் இருக்கவில்லை.




தற்போது கண் முன்னால் காணப்படும் ஒரு வரலாற்று உதா ரணத்தை இங்கு குறிப்பிடுவது மிகப் பொருத்தமானது. மானிப்பாயில் மருதடி விநாயகர் ஆலயம் உண்டு. இந்த ஆலயம் ஒரு மருத மரத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்தி ருந்தது. 19ஆம் நூற்றாண்டில் இந்த ஆலயத்திற்கு நேர்முன்னால் வெறும் 10 மீற்றர் தொலைவில் தென்னிந்திய திருச்சபை ஒரு தேவாலயத்தைக் கட்டியது. இந்நிலையில் இந்து பிள்ளையார் கோவிலும், கிறிஸ்தவ தேவாலயமும் எதிரும் புதிருமான நிலையில் காணப்பட்டன. ஆனாலும் இந்துக்களும் – கிறிஸ்தவர்களும் இங்கு மோதலில் ஈடுபடவில்லை. கிழக்கு வாசலைக் கொண்டிருந்த விநாயகர் கோவிலில் மருத மரத்தடியில் கிழக்கே பார்த்தவாறு இருந்த விநாயக தெய்வச்சிலை ஒருநாள் அதிகாலை மேற்கே பார்த்தவாறு காட்சியளித்தது.

அதைத் தொடர்ந்து கோவில் வாசலை மேற்கே திருப்பி இன்றுவரை அது மேற்கு வாசலாகவே உள்ளது. இதன் மூலம் இரண்டு மத பிரிவிற்கும் இடையே சண்டை ஏற்பட முடியாத ஒரு சமரசத்தை மேற்கொள்வதற்கான ஒரு வாய்ப்பாக இது கையாளப்பட்டது. இந்த இடத்தில் பெரும்பான்மை இனமான இந்துக்கள் மதப்பொறையை இதன் அடிப்படையில் பெரிதும் முன்னெடுக்கும் நிலை உருவானது. குறிப்பாக குடா நாட்டில் மிகப்பெருமளவில் இந்துக்கள் வாழும் சூழலிலேயே கிறிஸ்தவ தேவாலயங்கள் உள்ளன. இங்கு இந்துக்கள் கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு வழிபடச் செல்லும் பாரம்பரியம் வளர்ச்சியடைந்திருப்பதைக் காணலாம். ஒரு கிறிஸ்தவ தேவாலயமாவது தாக்கப்பட்டது கிடையாது. மாறாக பயபக்தியுடன் அவை பேணப்படும் நிலையே உண்டு.

குடா நாட்டில் இளவாலையில் கிறிஸ்தவ உயர்சாதியினருக்கும், கிறிஸ்தவ ஒடுக்கப்பட்ட சாதியினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலின் விளைவாக இரண்டு சாதிப்பிரிவினருக்கும் தனித்தனியே இரண்டு கிறிஸ்தவ தேவாலயங்கள் உருவாகின. இங்கு ஒரு மதத்திற்குள் சாதியால் சண்டை நடந்ததே தவிர இரு சமய பிரிவுகளுக்கு இடையேயான சண்டை நிகழ வில்லை. அதே போல இந்துக் கோவில்களுக்குள் ளும் சாதிச் சண்டைகள் நடந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிங்கள – பௌத் தர்கள் மத்தியில் குறிப்பாக டொனமூர் அரசியல் யாப்பைத் தொடர்ந்து கிறிஸ்தவம் பெரும் சவாலுக்கு உள்ளாகியது. இங்கு உயர்சாதி சிங்களவர்கள் ஆட்சியாளர்களின் மதமான ஆங்கிலிக்கன் கிறிஸ்தவத்தை பெரிதும் தழுவியிருந்தனர். ஆனால் டொனமூர் யாப்பின் மூலம் உருவான அனைவருக்கும் வாக்குரிமை என்ற ஏற்பாட்டின் கீழ் பெரும்பான்மையினரான பௌத்தர்களின் தயவில் தங்கி நிற்கவேண்டி அவசியம் தலைவர்களுக்கு ஏற்பட்டது. இந்நிலையில் ஆங்கிலிக்கன் கிறிஸ்தவ சிங்களத் தலைவர்கள் அடியோடு பௌத்தத்திற்கு மாறும் போக்கு உருவானது.

(05 ஆம் பக்கம் பார்க்க..)

## இது ஜெனீவா காலம் அடுத்து மக்கள் காலம்

ஜெனீவாப் படையெடுப்பு அமோகமாக நடைபெற்றிருக்கிறது. சகல தரப்பும் திருவிழா ஒன்றை நோக்கிப் போவதான உணர்வோடும் பொய்யோ புரட்டோ எதையாவது சொல்லி தமக்கு எதிரானவர் என்று கருதுபவரை கருத்தியல் ரீதியாக வீழ்த்துகின்ற முனைப்பிலேயே ஜெனீவாவை நோக்கிப் போயிருக்கின்றனரே ஒழிய. தாம் எதிர் நோக்கும் அல்லது தமக்கிருக்கும் ஜெனீவா மாநாட்டுடனான பிரச்சினையைத் தீர்க்கின்ற எண்ணத்தோடு அவர்கள் சென்றதாக இல்லை என்பதை அங்கிருந்து வெளிவரும் பன்முக செய்திகள் எமக்கு உணர்த்துகின்றன.

காயப்பட்டவர்கள் இன்னும் வலியோடுதான் இருக்கிறார்கள். காயப்பட்டவரின் வலிக்கு ஒத்தடம் கொடுக்கக்கூட அவர்களால் முடியவில்லை. காயத்தை ஏற்படுத்தியவர்கள் தாம் இல்லை என்று கருத்தியல் ரீதியாக நிரூபிப்பதிலேயே அவர்கள் கவனம் இருப்பது வேதனையைத் தருகிறது. நாங்கள் காயப்பட்டவர்கள் என்று சொல்லி வடுக்களை ஆதாரமாகக் காட்டுகிறோம். அது தம்மால் ஏற்படுத்தப்பட்டதல்ல என்று அவர்கள் வாதிடுகிறார்கள். அதுதான் இன்றைய அரசியல்கள நிலை.

பொது மன்றமான ஐ.நாவும் இலங்கையின் போர் குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் மீறல்களுக்கு நீதியான தீர்வை நோக்கி நகருமாறு இலங்கையை வற்புறுத்துகிறது. இன்னும் சுய அரசியல் இலாபங்களை மனதில் கொண்டும் போர்க் குற்றவாளிகளைக் காப்பாற்றவதில் மட்டும் கவனம் செலுத்துகிறது இலங்கை அரசு. இந்த ஜெனீவா மாநாட்டுத் தீர்வும் இலங்கையின் அடுத்த ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிக்கக்கூடிய அரசியல் பின்னணியைக் கொண்டிருக்கிறது. இதுவும் கடந்தமுறை போன்று வெறுமனே கடும் காட்டத்துடன் நிறைவடையும் சாத்தியம் உள்ளது.

எனவே இதிலும் தமிழ் மக்களது பிரச்சினையைத் தீர்க்கவல்ல எந்த யோசனைகளும் முன்வைக்கப்படாது இழுத்தடிப்புச் செய்யப்படலாம். தமிழ்த் தலைமையும் வேறு வழியின்றி தமிழ் மக்களுக்குப் புதிதாக எதையாவது சாட்டுப் போக்காகச் சொல்லி அடுத்த தேர்தலை நோக்கி நகரக்கூடும். இன்று ஜெனீவாவில் இலங்கைக்கு சார்பாக தீர்மானம் நிறைவேறுகிறது என்றால் அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூளைசாலியான சுமந்திரனின் பங்களிப்பு அதிகம் இருக்கும். எனவே தமிழ் மக்கள் அடுத்த தலைமையை தீர்மானிப்பதில் தமிழ் மக்கள் தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டிய கட்டம் இது.

# திருக்கேதீஸ்வரமும்...

(20 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

குறிப்பாக பண்டாரநாயக்க குடும்பம் ஆங்கிலிக்கன் கிறிஸ்தவத்தில் இருந்து பௌத்தத்திற்கு மாறிய போது பண்டாரநாயக்கவை டொனமூர் பௌத்தன் என அழைத்தனர். இது பெரும்பான்மையான சிங்களத் தலைவர்கள் அனைவருக்கும் பொருந்தும்.

இப்பின்னணியிற்தான ஆங்கிலிக்கன் கிறிஸ்தவ மதத்தில் இருந்து மதம் மாறும் போக்கை தடுப்பதற்கு ஓர் உபாயமாக சிறுபான்மையினருக்கான பாதுகாப்பு என்ற 29வது சரத்தை சோல்பரி தனது யாப்பில் உருவாக்கியதாக ஒரு கருத்து உண்டு. உண்மையில் சிங்கள - பௌத்தர்களிடமிருந்து ஆங்கிலிக்கன் கிறிஸ்தவர்களை பாதுகாப்பதற்கான ஓர் உளவியல் அரசியல் ஏற்பாட்டை சோல்பரி மேற்கொண்ட போதிலும் அது தெளிவாகத் தோல்வியில் முடிந்தது.

ஆனால் தமிழ் மக்கள் தரப்பில் நிலைமை அவ்வாறு இருக்கவில்லை. குறிப்பாக 30 ஆண்டுகளாக தமிழ் மக்களுக்கு தொடர்ந்து தலைவராக கிறிஸ்தவரான திரு.எஸ்.ஜே. வி. செல்வநாயகம் காணப்பட்டார். அக்காலத்தில் சந்தனப் பொட்டுடன் மேடைகளில் காட்சியளித்த ஜி.ஜி. பொன்னம்பலத்தை நிராகரித்து கிறிஸ்தவரான செல்வநாயகத்தை தனிப்பெரும் தலைவராக்கி 20 ஆண்டுகளாக அவரைத் தமிழ் மக்கள் ஏகத் தலைவனாகப் பேணினர். இது வெறும் தனிப்பட்ட மனிதன் சார்ந்த விடயமல்ல. முழுத் தமிழ் மக்களினதும் மனநிலை சார்ந்த விடயம் செல்வநாயகத்திற்கு முன் 1930 களின் முற்பகுதியில் தமிழ் மக்களின் தலைவராகக் காட்சியளித்த தென்னிந்திய திருச்சபை கிறிஸ்தவரான ஹண்டிப் பேரின்பநாயகம் கிறிஸ்தவராக இருந்த போதிலும் அநேகமாக வெள்ளிக்கிழமைகளில் வேட்டி அணிந்தவாறு மேற்சட்டை அணியாமல் மருதடி விநாயகர் கோவிலுக்குச் சென்று வழிபடுவது வழக்கம். இங்கு ஒரே வேளையில் அவர் கிறிஸ்தவனாகவும், வழிபாட்டில் அவர் ஒரு இந்துவாகவும் வாழ்ந்துள்ளார் என்ற உண்மை பலருக்கும் வியப்பைத் தரவல்லது.

சிங்களத் தரப்பில் கிறிஸ்தவத்தைப் பாதுகாத்து வருவது சோல்பரியின் 29வது சரத்தல்ல. இங்கு ஒரு விசித்திரமான வரலாற்று உண்மை கவனத்திற்குரியது. உயர்சாதியினரான ஆங்கிலிக்கன் கிறிஸ்தவர்கள் அரசியல் நலனுக்காக மீண்டும் பௌத்தத்திற்கு மதம் மாறிய போது அரசியல் அதிகாரத்திற்கு வரமுடியாத சாதித் தடையைக் கொண்டிருந்த சிங்கள 'கரவ' சாதியினர் மத்தியில் காணப்படும் ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் மீண்டும் பௌத்தத்திற்கு மாறவில்லை. போர்த்துக்கீச அடியைக் கொண்ட பெரேரா, சில்வா, பெர்னான்டோ, சொய்ஸா போன்ற ரோமன் கத்தோலிக்கப் பெயர்களைக் கொண்ட 'கரவ' சாதியினர் தொடர்ந்தும் கிறிஸ்தவர்களாக இருக்கும் நிலையே புறநிலை யதார்த்தமாய் அமைந்தது. அதாவது மீண்டும் பௌத்தத்திற்கு மதம் மாறினாலும் அவர்கள் அரசியல் அதிகாரத்திற்கு வரமுடியாத சாதித்தடை சிங்களச் சமூகத்தில் பலமாக இருந்ததால் அத்தகைய சமூகத் தட்டைக் கொண்ட மக்கள் மீண்டும் பௌத்தத்துக்கு மதம் மாறாதிருக்கும் நிலையே காணப்பட்டது.

சுதந்திரத்தின் பின் படிப்படியாக, குறிப்பாக பண்டாரநாயக்காவின் தலைமையிலான இரண்டாவது பௌத்த மறுமலர்ச்சியின் பின்னணியில் சிங்கள மக்கள் மத்தியில் உள்ள அனைத்து கிறிஸ்தவ பிரிவினரும் முழுயாக அரசியல் வலுவை இழந்துவிட்டனர். பண்டாரநாயக்க 1959ஆம் ஆண்டு வெளிநாடு செல்ல நேர்ந்த போது அவர் தனக்கு அடுத்து கட்சியின் தலைவராக இருந்த கரவ சாதியைச் சேர்ந்த சி.பி.டி.சில்வாவை பதில் பிரதமராக நியமிக்காமல் அதுவும் தனது கட்சிக்காரர் அல்லாத பாஷா பெரமுனக் கட்சியின் தலைவரான கொய்கம சாதியைச் சேர்ந்த டபுள்யூ. தகநாயக்கவை பதில் பிரதமராக நியமித்தார் என்பது சிங்கள மக்கள் மத்தியில் இருந்த சாதி அரசியலின் பலத்தைக் காட்டி நிற்கின்றது. தமிழ் மண்ணில் நிலைமை இதற்கு முற்றிலும் மாறாக அமைந்திருப்பதை காணலாம்.

அரசியல் தலைவரான செல்வநாயகம் மட்டுமன்றி அறிவியல் அரங்கில் வண. தனியாகம் அடிகளார் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு பொறுத்து ஒரு தலையாயத் தூணாகத் தமிழ் மக்கள் மத்தியில் மதிக்கப்படுகிறார். மேலும் கத்தோலிக்க திருச்சபை தமிழ்ப் பண்பாட்டை தன்னகத்தே இணைக்கும் இயல்பை வெளிப்படுத்தி உள்ளது. இந்துக்கள் அணியும் சந்தனப் பொட்டு அணிவதை மதத்திற்கு அப்பால் ஒரு பண்பாட்டு அம்சமாக அவர்கள் ஏற்றுப் பின்பற்றுகின்றனர். அவ்வாறே கும்பம் வைத்தலையும் மதத்திற்கு அப்பாலான பண்பாட்டு விடயமாக ஏற்று பின்பற்றுகின்றனர். மேலும் தைப் பொங்கலை மதத்திற்கு அப்பால் தமிழரின் பண்பாட்டு விழாவாக கத்தோலிக்கர்கள் ஏற்று தாமும் அதன் வழி ஓரளவு செயற்படுகின்றனர். இவையெல்லாம் மத நல்லுறவை வளர்ப்பதற்கான கட்டியங்களாகும்.

2002ஆம் ஆண்டு வன்னியில் விடுதலைப் புலி களின் ஒரு தொகையினர் தைப்பொங்கல் அன்று பால் பொங்கலுக்குப் பதிலாக கோழிப் பொங்கல் பொங்கிக் கொண்டாடினர். இதில் பல நூற்றுக்கணக் கான விடுதலைப் புலிகள் போராளிகளும் மற்றும் பொதுமக்களும் அடங்குவர். ஆனால் இதைக் கண்டு சைவர்கள் கொதிப்படைந்ததைவிட ஒரு கிறிஸ்தவ மதகுரு பெரிதும் கொதிப்படைந்து இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கோரி விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்திற்கு கடிதம் எழுதினார்.

உடனடியாக அக்கடிதத்திற்கு மதிப்பளிக்கப்பட்டு அந்தக் கோழிப் பொங்கலோடு சம்பந்தப்பட்ட அனைத்துப் பொறுப்பாளர்களுக்கும் தண்டனை விதிக்கப்பட்டு அவர்களின் பொறுப்பாளர் பதவிகளும், கூடவே வண்டி வாகனங்களும் பறிக்கப்பட்டன. இங்கு சைவத்தின் புனிதத்தை பாதிக்கக்கூடாது என்று கோரி முன்னின்று செயற்பட்டவர் ஒரு கிறிஸ்தவ மதகுரு என்பதும் அதற்குத் தலைமைப் பீடம் மதிப்பளித்து உடனடியாக நடவடிக்கையில் ஈடுபட்டதும் பெரிதும் கவனத்திற்குரிய விடயங்களாகும்.

கிறிஸ்தவர்களுக்கும், இந்துக்களுக்கும் இடையே நல்லுறவு மிகச் சிறந்த முன்னுதாரணத்துடன் தமிழ் மண்ணில் காணப்படுகிறது. இதனை மேலும் வளர்க்க வேண்டுமே தவிர இதில் காயம் ஏற்பட இரு தரப்பினரும் இடமளிக்கக்கூடாது. இலங்கையில் பாடல் பெற்றத் தலங்களாக திருக்கேதீஸ்வரமும், திருக்கோணஸ்வரமும் உண்டு. மேலும் வரலாற்றுத் தொன்மை வாய்ந்த நகுலேஸ்வரமும் உண்டு. கிறிஸ்துவிற்கு முற்பட்ட 1000ஆம் ஆண்டை எட்டக்கூடிய பெருங்கற் பண்பாட்டு வழிபாட்டு முறையை கொண்டிருக்கும் செல்வச் சன்னதி முருகன் கோவில் உண்டு.

இவை யுத்த காலத்தில் ஓரளவு நலிவுற்றுள்ளன. இவ்வாலயங்களை வெறுமனே மத வழிபாட்டோடு மட்டும் அடையாளங் காணாமல் வரலாற்றுத் தொன்மை, மற்றும் பண்பாட்டு மூலம் என்பவற்றோடு எல்லாம் இணைத்துப் பார்க்க வேண்டிய ஓர் அறிவியல் வரலாற்று அணுகுமுறையும் அவசியம். செல்வச் சன்னதி முருகன் கோவிலில் 2000க்கும் மேற்பட்ட ஆண்டிற்குரிய பெருங்கற் பண்பாட்டின் குரலை அங்கு காணலாம். வழிபாட்டு முறையிலும், பூசை வைத்தலிலும் இவை தெளிவாகத் துலங்கும். வழமையாக கோவில்களில் உண்டியல்கள் நிரம்புவதுண்டு. ஆனால் செல்வச் சன்னதியில் உண்டியல் நிரம்பாது மாறாக பக்தர்களின் வயிறுதான் நிரம்பும். இவையெல்லாம் மிகவும் ரசனைக்குரிய வரலாற்று படிமங்களாக உள்ளன. கிழக்கில் காணப்படும் வழிபாடுகளிலும் இத்தகைய பெருங்கற் பண்பாட்டு தொடர்ச்சிகளைக் காணலாம்.

மன்னார் மாவட்டத்தில் மடுத் தேவாலயமும், திருக்கேதீஸ்வரமும் காணப்படுகின்றன. இவை இரண்டிற்குமென வரலாற்று, மற்றும் சமூகச் சிறப்புக்கள் உண்டு. மடுத் தேவாலயத்திற்கு இந்துக்கள் வழிபடச் செல்வது வழக்கம். ஒருவகையில் இந்துக்கள் மடுமாதாவை ஓர் இந்து அம்மன் போல மனதார நினைத்து வழிபடும் நிலையும் இங்கு கவனத்திற்குரியது. இவ்வகையில் மடுத் தேவாலயத்தின் முக்கியத்துவத்தையும், பாடல் பெற்ற திருக்கேதீஸ்வரர் ஆலயத்தின் முக்கியத்துவத்தையும் இணைத்து இங்கு மத நல்லுறவிற்கு வழி தேட வேண்டுமே தவிர முரண்பாடுகளுக்கு இதனை மையமாக்கிக் கொள்ளக் கூடாது. இதுவிடயத்தில் அரசியல் தலைவர்களும், இருதரப்பு மதகுருக்களும் மற்றும் மதத் தலைவர்களும், அறிஞர்களும், ஊடகவியலாளர்களும் ஆக்கபூர்வமான வகையில் நல்லுறவை மேலும் வலுவாக்குவதற்காக உழைக்க வேண்டியது அவசியம்.



# சூழ்ச்சி வலையில் மக்கள் போராட்டம்

சாணக்கியன்

கடந்த 19 ஆம் திகதி கிழக்கை மையமாகக் கொண்டு தமிழர் தாயக மண்ணில் அரசிடமும் உலக சமூகத்திடமும் நீதி கேட்டு பெரும் போராட்டம் நடத்தப்பட்டது. பணிமுடக்கம் கடை யடைப்பு எனஅரசுக்கெதிராக அண்மையில் தமிழ் மக்கள் மற்றும் மனித உரிமைகள் ஆர்வலர்கள் நடத்திய இத்தகைய சாத்வீகப் போராட்டம் இரண்டாவது தடவையாக நடத்தப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் முன்னெடுக்கப்பட்ட முன்னர் வட மாகாணத்திலும், பின்னர் கிழக்கு மாகாணத்திலும் நடைபெற்றுள் ளன. இந்த இரண்டு போராட்டங்களும் ஒரே கோரிக்கையை முன்வைத்த போதிலும் ஏன் இருவேறு நாள்களில் நடத்தப்பட்டன? இரண்டை யும் ஒருங்கிணைத்து ஒரே நாளில் நடத்தி இணைப்பையும், பிணைப்பையும் வெளி உலகுக்கு தெரிவித்திருந்தால் அது ஓர் வலிமையான அரசியல் தீர்மானமாக அனைத்துலகம் எடுத்துக் கொண்டிருக் கும் அல்லவா? இதற்கு வழிவகுக்கும் வகையில் நாம் செயற்படவில்லை என்பதுதான் எமது ஆதங்கம் என்கிறார் ஓர் அரசியல் ஆய்வாளர்.

தமிழ் மக்களது பேராட்டங்கள் மென்மேலும் கேள்விக்குறியான நிலையிலேயே காணப்படுகிறது. தமிழ்த் தேசியத்தை மழுங்கடிக்கப்படுவதற்கான செயற்பாடுகளை எதிரி முன்னெடுப்பதைவிட எம்மவர்களே அதிகம் முன்னெடுக்கிறார்கள். அத்தகைய செயற்பாடுகளும் எதிரியின் போக்கை வலுப்படுத்துவதாக இருப்பது வேதனைக்குரியதே. எம்மை வழிநடத்துபவர்கள் என்று தம்மை அடையாளப்படுத்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள்ளேயும் பலவித முரண்பாடுகளும், பலவித மாறுபட்ட கருத்துகளும் இருந்துவருகின்ற நிலையில் அவற்றைத் தீர்க்காது மேலும் அடுத்த கட்டங்களை நோக்கி அவர்கள் நகர்வதென்பது சாத்தியமான விடயமா? என்ற கேள்வியும் எம்முள் எழாமலில்லை.

பொதுவாகவே சகல வழிகளிலும் துண்டாடப்படும் ஒரு மாகாணமாக கிழக்கு மாகாணம் காணப்படுகிறது. அரசின் பிரித்தாளும் இராஜதந்திரத்துக்கு உட்பட்டும், முஸ்லிம் மக்களது தனித்தியங்கும் செயற்பாட்டுக்கும் அரச சார்புப் போக்குக்கும் உட்பட்டும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் செயற்பாட்டுக்கும், தேர்தல் களச் செயற்பாட்டை நோக்கிய நடவடிக்கைக்கு உட்பட்டும், தனிச் சிங்கள – பௌத்த நடவடிக்கைக்கு உட்பட்டும் இருக்கின்ற கிழக்கு மாகாணத்தை மென்மேலும் வடக்கோடு இணையவிடாது எல்லாச் சக்திகளும் கண்காணித்துக் கொண்டிருக்கின்றன. தமிழ் மக்களுக்கான தலைமை தாங்களே என்று மார்தட்டிக் கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சிலரும் வடக்கு – கிழக்கு இணைந்துவிடாது பார்த்துக் கொள்வதில் குறியாக இருக்கின்றனர் என்பதை அவர்களின் கடந்தகாலச் செயற்பாடுகள் உணர்த்துகின்றன.

அதுமட்டுமல்ல யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஜெனிவா மாநாட்டை குறிவைத்து நடத்தப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டமும் இணைந்து நடத்தப்படவில்லை. போராட்டத்தில் ஈடுபட்டவர்களது இலக்கும் எதிர்பார்ப்பும் தமிழினத்துக்கு இழைக்கப்பட் அநீதிக்கு எதிராக நீதி கோருவதாகவே அமைந்தது. குறிக்கோள் ஒன்றாக இருந்தபோதும், மனதளவில் இணைந்திருந்தபோதும் உடல்களால் இணையமுடியாதிருந்ததற்குக் காரணம் எதுவாகத்தானிருக்கலாம்?

தமிழரசுக் கட்சி ஆரம்பித்த காலத்தில் சாதி, சமயம் என்று பாராது அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டே – பின் தொடர்ந்த காலத்தில் ஒன்றிணைந்தால் வலிமை உண்டென்று உணரப்பட்டதனால்தான் தமிழர் கூட்டணியை உருவாக்கினர். அக்காலத்தில் மலையகமும் கூட்டணியில் இணைந்திருந்தாலும் பின்னர் அவர்கள் பல காரணங்களைக் காட்டி தனி வழி சென்றுவிட்டனர். எந்தச் சந்தர்ப்பத்திலும், எல்லாச் சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்கள் ஒன்றிணையக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக அனைத்துத் தரப்பினரும் இருந்து வந்திருக்கின்றனர்.

இந்தியாவாக இருந்தாலும், அமெரிக்காவாக இருந்தாலும், பிந்தி வந்த சீன அரசியலாக இருந்தாலும் இலங்கையின் உள்நாட்டு அரசியல் மாற்றங்களையும் இந்த மாற்றங்களைத் தீர்மானிக்கின்ற சகதிகளையும் தெளிவாக இனங்கண்டு கொண்டும், அந்தச் சக்திகளை கையாளக் கூடிய விதத்தில் தங்கள் காய்களை நகர்த்துகின்றனர்.

இனியும் தமிழ் மக்கள் தமது இறைமை பற்றியும், உரிமை பற்றியும் பேசுவவதற்கு அதிகாரம் கொண்டவர்களாக மாறவேண்டும். அதிகாரத்தை கையிலெடுப்பதற்கு அரசியலில் தீர்மானிக்கக் கூடிய சக்தியாகத் தம்மை மேம்படுத்த வேண்டும். எனவே வடக்கு – கிழக்கை இணைத்த செயற்பாட்டுகளால் மட்டுமே அத்தகைய வளர்ச்சியை நாம் பெற்றுக்கொள்ள முடியும். நாம் அரசியல் விவகாரங்களை முன்னெடுக்க வேண்டும். அதிகாரத்தைக் கையிலெடுக்கக் கூடியவர்களாகவும் மத்தியில் வரவிருக்கும் அரசோடு அபிவிருத்தி பற்றியும் எமது உரிமை பற்றியும் பேரம் பேசுவதற்கும் ஜனநாயக ரீதியாக வரவிருக்கின்ற தேர்தல்களை நாம் சரிவரப் பயன்படுத்த வேண்டும். அது மாத்திரமல்ல அந்த வாக்குகளும் ஒரு இலக்கை நோக்கிக் குவிக்கப்படுவதாகவும் இருக்க வேண்டும்.

எனவே வடக்கும் கிழக்கும் இரு வேறு தளங்களைக் கொண்ட அரசியல் செயற்பாடுகளைக் கொண்டிராமல், எம்மை பாவிக்கும் எதிரணியினரின் மாய வலைக்குள் சிக்காது எதிர்காலச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். தற்போது இருக்கும் தலைமைகளில் நம்பிக்கையில்லாதிருந்தால் அதைக் கூட மாற்றியமைப்பதற்கு நாம் முயற்சிக்கலாம். தற்போது காணப்படும் அரசியல் சூழ்சிகளில் இருந்து விடுபடவும், பலமானதொரு தமிழ்த் தேசியத்தைக் கட்டி எழுப்பவும் வடக்கு – கிழக்கு இணைவும் பிணைப்பும் முக்கியம்.

கடந்த காலத்தில் நடைபெற்ற கவனயீர்ப்பு போராட்டங்களும், ஹர்த்தால்களும் இதை நன்கு உணர்த்தியிருக்கின்றன. வடக்கிலே ஹர்த்தால் அறிவிக்கப்பட்டது. அன்று கிழக்கிலே அது சரியாக ஒருங்கிணைக்கப்படாத காரணத்தால் வடக்கின் அளவுக்குக் கிழக்கில் அதன் பலன்களைப் பெற முடியவில்லை. கிழக்கில் ஹர்த்தால் அறிவிக்கப்பட்ட தினமான கடந்த 19.03.2019 அன்று கிழக்குக்கு ஆதரவாக வடக்கிலே மக்கள் ஹர்த்தாலை கடைப்பிடிக்க ஆயத்தமாக இருந்தனர். ஆனால் அதைச் சரியாக ஒருங்கிணைக்க உரியவர்கள் அல்லது அதை முன்னெடுக்க வேண்டியவர்கள் சரியாகத் தொழிற்படவில்லை. இதனால் மக்கள் ஒருவித குழப்பத்தில் நின்றனர். ஒரு பகுதியினர் ஹர்த்தாலை கடைப்பிடிக்க மறு பகுதியினர் குழப்பநிலையிலே இருந்து செய்வதா விடுவதா? என்றிருந்தனர். இது அவர்களின் குற்றமல்ல.

எமக்கு இயைவான அல்லது எமது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய தலைமைகளின் பற்றாக்குறையையே இந்நிகழ்வுகள் சுட்டி நிற்கின்றன. புலிகளின் ஆயுதம் மௌனிக்கப்பட்ட பின்னர் அதுவரை வாய்பொத்திப் பேச்சற்ற இருந்த பலர் பேசத்தொடங்கி இருப்பதுவும் எமக்கு ஏற்பட்ட சாபக்கேடே. அரசியல் சூனியங்கள் பெருமளவில் அரசியல் கட்சிக்குள் புகுந்துகொண்டனர். அரசியல் பேசத் தொடங்கிவிட்டனர். அதிலும் பலர் சந்தர்ப்பவாத அரசியலையே தமது தாரக மந்திரமாகக் கொண்டிருக்கின்றனர்.

வடக்கும் கிழக்கும் தம்மை நிலைநிறுத்தத் தேவையான அடிப்படை அம்சங்களான காணி, மொழி, சுய நிர்ணயம், கலை, கலாசாரம், பண்பாடு என்ற எல்லாத் தளங்களிலும் விடயங்களைத் தக்க வைத்துக் கொள்ள அல்லது அத்தகைய விடயங்களில் பறிபோனதாக நம்பப்படுபவற்றை மீளப் பெற்றுக் கொள்ள சதா போரடி வரும் சூழ்நிலையில் பொதுவான நிகழ்ச்சி நிரல்களுக்குள் ஒன்றிணைவதே மிகவும் அவசியம். உடனடியாக அரசியல் சார்பற்றதாரு மக்கள் பொது மன்றம் ஒன்று அமைக்கப்பட்டு அதன் மூலம் ஒன்றிணைந்த போராட்டங்களை முன்னெடுக்கலாம். அரசியல், சாதி, மத,மொழி என்பவற்றுக்கு அப்பால் அச் சட்டகங்களைஉடைத்தெறிந்து தேசிய செயற்பாடுகளை வலியுறுத்தும்வகையில் ஒரு ஆரோக்கியமான பொது வரைபு ஒன்று முன்மொழியப்பட வேண்டும்.

சூழ்ச்சிக்காரார்களால் சட்ட ரீதியாகப் பிரிக்கப் பட்ட வடக்கு – கிழக்கை உடனடியாகச் சட்ட ரீதியாக ஒன்றிணைக்க முடியாவிட்டாலும் மானசீகமான ஒன்றிணைவைச் சாத்தியப்படுத்துவது இன்றியமையாத விடயமாகும். வடக்கிலும் கிழக்கிலும் இலைமறை காய்களாக இருக்கும் சமூகச் செயற்பாட்டாளர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களை வெளிக்கொணர்வதன் மூலமே இத்தகைய விடயங்கள் சாத்தியப்படும். முயற்சிப்போமா?



# உங்களுக்கு... அவளின் அலறல் கேட்கிறதா?

**ஆண்** வாரிசு சிங்கக் குட்டி என்று மார்தட்டிக் கொண்ட தந்தையரே... அவன் அன்னையை, தங்கையை, ஆசிரியையை, தோழியை சமமாகப் பாவிப்பதை உறுதி செய்ய என்ன செய்தீர்கள்? முன்னுதாரணமாக இருந்தீர்களா? இல்லை... மகனே நான்தான் பிற்போக்குத்தனமாக இருந்துவிட்டேன். நீ பெண்ணை மதி என்று சொல்லிக் கொடுத்திருக்கிறீர்களா? மகன்களை நேர்வழியில் வளர்க்காமல் அவனின் தவறுகளை மறைக்க அதிகார பலத்தை பயன்படுத்துவது எல்லாம் எவ்வளவு இழிவானது என உணர முடிகிறதா? இதில் எதுவுமே செய்யவில்லை என்றால் உங்களுக்கு... அவளது அலறலாவது கேட்கிறதா?

இதோ இப்போதும்கூட பொள்ளாச்சி சம்பவத்தில் அந்தப் பெண்ணின் கதறலைக் கேட்டும் அவளது அலறலைக் கேட்டும்கூட அவளுக்கு ஏன் ஆண் சகவாசம்?! அவள் ஏன் அவனுடன் தனியாகச் சென்றாள்?! என்றெல்லாம் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். நிர்பயாவுக்குக் கேட்ட அதே கேள்வியைத்தான் இன்றும் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்.

உங்களிடம் அவள் கேட்கும் கேள்விக்கு என்ன பதில் வைத்திருக்கிறீர்கள். "உன்னை நம்பித்தானே வந்தேன்..."என்ற அவளது அவலச் சத்தத்தில் இருந்து... கலாசாரக் காவலர்களே...! அதற்கு உங்களிடம் பதில் இருக்கிறதா?

மனிதர்களுக்கு மட்டுமே சொந்தமான சில உணர்வுகள் இருக்கின்றன. அதில் ஒன்றுதான் நம்பிக்கை. உன்னை நம்பி வந்த பெண்ணை நீ இப்படி சீரழிப்பாய் என்றால்..! உன்னை நான் துரோகி என்றழைக்கவா?, சிறுமி என்று பாராமல்கூட பலாத்காரம் செய்வாய் என்றால் உன்னை நான் அரக்கன் என்று அழைக்கவா? இவையெல்லாம் மென்மையாக இருக்கின்றன என்றதையே நான் உணருகிறேன், என்றால்... அதனால்தான், அவளை அப்படி நிர்வாணமாக்கிப் படம் எடுத்து வியாபாரம் செய்யும் உன்னை நான் பாலியல் பயங்கரவாதி என்று அழைக்கிறேன். பாலியல் பயங்கரவாதிகளே..! அந்த அலறல் உங்களுக்குக் கேட்கிறதா?

பெண்ணின் மாண்பைக் குறைக்கும் ஆண்களைப் பற்றியும், அவளை அடிமையாக்கும், ஆதிக்கம் செலுத்தும், அடக்குமுறை செய்யும், பண்டமாகப் பார்க்கும் ஆண்களைப் பற்றியும் எழுத வேண்டும் . ஆனால் அவர்களை குற்றவாளியாக மட்டுமே பார்க்கக் கூடாது, எழுதுவது எல்லாம் அறிவுரையாக அமைந்துவிடக்கூடாது. அதேவேளையில் அந்த எழுத்து குற்றமுள்ள நெஞ்சங்களைப் பதறவைக்க வேண்டும் என்ற ஒற்றைப்புள்ளியில் தொடங்கப்பட்ட எழுத்துகள்தான் இவை...

ஆனால், பெண்ணுக்கு இவ்வளவு கொடூரங்களைச் செய்யும் உங்களை ஒரு கணமாவது குற்றவாளியாக்காமல், என்னால் எப்படித்தான் கடந்து செல்ல முடியும் என்று நீங்களே சொல்லுங்களேன்? ஆண்களுக்காக அவள் அப்படித்தான் இருக்க வேண்டுமா?!

மன்னித்து விடுங்கள். இந்தமுறை உங்களை நான் குற்றவாளியாக மட்டுமே பார்க்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் இம்முறை எனக்கு அவளது அலறல் தெளிவாகக் கேட்டுக்கொண்டே இருக்கிறது.

அவள் நண்பனுடன் சினிமாவுக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்தாள், 6 பேர் சேர்ந்து வன்புணர்ந்தீர்கள். அவள் பள்ளிக்குச் சென்றாள், அவளைப் பேத்தி என்றுகூடப் பார்க்காமல், நினைக்காமல் காமவெறியாட்டம் ஆடி முட்புதரில் வீசினீர்கள். அவள் கிராமப்புறத்திலிருந்து படித்துவிட்டு கணினி கம்பெனியில் வேலை செய்ய வந்திருந்தாள். அவளைக் குதறிக் கொன்றுவிட்டீர்கள். அவள் சிரித்து விளையாடிக் கொண்டிருந்தாள், வீட்டுக்குள் கூட்டிச் சென்று பலாத்காரம் செய்து எரித்துக் கொன்றீர்கள். அவள் குதிரை மேய்த்துக் கொண்டுதான் இருந்தாள், அவளைக் கோயில் கருவறையில் சிதைத்துக் கொன்றீர்கள், அவள் ஆன்மிகம் நாடித்தான் வந்தாள். ஆனால் சாமியார் என்ற போர்வையில் சல்லாபம் செய்தீர்கள். அவளும் அது இயல்பென ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு அவளுக்கு மூளைச்சலவை செய்தீர்கள்.

அவள் உங்களால் தாழ்த்தப்பட்ட சாதியில் பிறந்து விட்டாள். அதற்காகவே அவளது தலையை துண்டித்தீர்கள். அவள் காதலை ஏற்கவில்லை என்றுதான் சொன்னாள். அதனாலேயே ஆவேசப்பட்டு அசிற் வீசினீர்கள். அவள் காதலிக்க முடியாது என்றாள் வகுப்பறைக்குள் சென்று குத்திக் கொன்றீர்கள். அவள் மலம் கழிக்க கொல்லைக்குச் சென்றாள். அங்கேகூட அவளை கூட்டுப் பலாத்காரம் செய்தீர்கள். அவளுக்கு அப்போது மாதவிடாய் காலம். ஆனால், உங்கள் காமத்துக்கு அது தெரியவில்லை, அவளை விடாமல் துன்புறுத்தினீர்கள். காமுகர்களே... எனக்குக் கேட்பதுபோல் அந்த அலறல் சத்தம் உங்களுக்கும் கேட்கிறதா?

அவள் பூட்டிய அறைக்குள் பலாத்காரம் செய்யப்பட்டாள். அவள் தப்பு ஏதும் அதிலில்லை. கெடுத்து விட்டார்களே என்று உச்சு கொட்டாதீர்கள். கெட்டுப்போக அவள் ஒன்றும் உணவுப் பதார்த்தம் இல்லை. அவள் உடல் படமாக்கப்பட்டதற்காக அவள் வெட்கப்பட வேண்டியதில்லை. ஆனால், அந்தப் பயங்கரவாதத்தை உங்கள் ரேட்டிங்குக்காக வெளியிட்டீர்களே. ஒருவேளை ஒரு கெட்ட கனவாக அவள் அதை மறந்திருக்கக்கூடும். மீண்டும் அவளது நினைவைக் கிளறி துடிக்கச் செய்யும் ஊடக, சமூகவலைத்தள நண்பர்களே.. அவளது அலறல் சத்தம் உங்களுக்காவது கேட்கிறதா?

பெண் பிள்ளைக்கு மட்டும் இப்படித்தான் நிற்க வேண்டும், இப்படித்தான் நடக்க வேண்டும், இவ்வளவு சத்தமாகப் பேசக்கூடாது, இவ்வளவு இறுக்கமான ஆடை கூடாது, இரவில் வெளியில் செல்லக்கூடாது என்றெல்லாம் இரவல் வாங்கிக் கற்பிதங்கள் சொன்னீர்களே என்றைக்காவது மகனே! நீ பெண்ணை அடிமைப்படுத்தாதே, பெண்ணை மாண்போடு நடத்து, அவளும் நீயும் தனித்தனி. ஆனால் சரிசமம். அவளது முடிவுகள் முக்கியமானவை, அவளது உணர்வுகள் மதிப்பிற்குரியவை, அவளது சுதந்திரம் உன் கட்டுக்குள் இல்லை என்று சொல்லிக் கொடுத்திருக்கிறீர்களா? மகன்களை ஆண்மை தவறாமல் வளர்க்கத் தெரியாதவர்களே... உங்களுக்கு அவளது அலறல் கேட்கிறதா?

அவள் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறாள். ஆனால் அவளது அலறல் நம்மில் யாருக்குமே கேட்கவில்லை. அதனால்தான் அந்த பயங்கரவாதம் வெவ்வேறு பெண்களுக்கு வெவ்வேறு வடிவங்களில் நீண்டுகொண்டே இருக்கிறது. உங்களை எல்லாம் அவதார புருஷர்களாக இருக்கச் சொல்லவில்லை. அவளை அலற விடாமல் வைத்திருங்கள் போதும். இல்லாவிட்டால் அந்த அலறல் உங்கள் சவப்பெட்டிக்குள் இருந்தும், சிதைக்கருகில் இருந்தும் கொள்ளிக் கட்டையிலிருந்தும் கேட்டுக்கொண்டே இருக்கும்.

“இந்த சமூகத்தில் ஆண் பிள்ளைகளை ஒழுக்கமாக வளர்த்து விடுவோம். பெண் பிள்ளைகள் பத்திரமாக இருந்து விடுவார்கள்” என்கிறார் ஓர் ஊடகவியலாளர். இது எனக்குத் திருக்குறள் போல் ஒலிக்கிறது. பாலியல் பயங்கரவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க தண்டனைகளைக் கடுமையாக்குவதைவிட இது மிகவும் எளிதானது சிறப்பானது. பாலினப் பாகுபாடு குறைந்துகொண்டுதான் வருகிறது. ஆனால் பாலினப் பாகுபாட்டைப் பற்றி பேசுபவர்கள் அதை சமமாகப் பாவிக்கிறார்களா, என்ற கேள்வியும் எனக்கு இருக்கிறது?

ஒரு பக்கம் சுமை அதிகமாகவும் ஒரு பக்கம் குறைவாகவும் இருக்கிறது என்றே தோன்றுகிறது. அதனால்தான் பாதிக்கப்பட்டவர்களே காவல் நிலையம், நீதிமன்றம், ஊடகம், சமூகம் என எல்லா இடங்களிலும் பதில் சொல்லிக் கொண்டு மேலும் பாதிப்புக்கு உள்ளாகிக் கொண்டும் இருக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்கள் உண்மையை உரக்கச் சொல்ல வேண்டும்தான். ஆனால் இது தொடர்கதையாக இருக்க வேண்டுமா, என்ன?

பாலின பேதத்தை ஒரு பாரம்பரியம் போல் இன்னும் சிலர் கடைபிடித்துக் கொண்டிருக்கின்றனர். 20 வயது இளம் பெண்கள் இருவர் வெளியில் சென்றால் துணைக்கு 5 வயது சிறுவனை அனுப்பி வைக்கின்றனர். சாண் பிள்ளையென்றாலும் ஆண் பிள்ளை என்கின்றனர். எனவே மாற்றம் வீட்டிலிருந்தே ஏற்பட வேண்டும். ஏற்படுத்தப்பட வேண்டும். என் மகனுக்கு 6 வயது. மகளுக்கு ஒரு வயது. இப்போதிருந்தே என் மகனுக்குப் பாலின சமத்துவத்தை சொல்லிக் கொடுக்கிறோம். தங்கையை, தோழியை போடி.. வாடி என்று பேசக் கூடாது என்று சொல்லியிருக்கிறோம். இது ஆண் வேலை, இது பெண் வேலை என வீட்டில் வேலையில் பேதமில்லை எனக் கூறியிருக்கிறோம்.

பள்ளியில் உடன் படிப்பவர்கள் செய்யும் தவறில் ஆண் செய்தால் ஏற்றுக் கொள்ளக்கூடியது பெண் செய்தால் தண்டனைக்குரியது என்று எதுவும் இல்லை என சொல்லியிருக்கிறோம். 6 வயதுக்கு எந்த அளவில் பாலின சமத்துவத்தை கற்றுக் கொடுக்க முடியுமோ அவ்வளவு சொல்லி வருகிறோம். அவன் வளர வளர வயதுக்கேற்ப இந்த ஒழுக்கப் பாடம் தொடரும். அவன் தவறு செய்யும் ஆணாகவும், அவன் செய்யும் தவறுக்கு முட்டுக்கொடுக்கும் தகப்பனாக நான் இல்லாமலும் இருக்கும் அளவுக்கு சேர்ந்தே வளர்கிறோம்” என்று சமூகப் போராளி ஒருவர் சொல்லி முடித்தபோது அந்த அலறல் சத்தம் எதிர்காலத்தில் கேட்காது என்ற நம்பிக்கை ஏற்பட்டது.



# பிரபஞ்சத்தில் நாம் பயணிக்கும் தூரம் எவ்வளவு?

ஒரு குறிப்பிட்ட இடத்திற்குத்தான் செல்லப் போகிறோம் என்பதை உறுதி செய்யாது, என்றாவது பயணம் மேற்கொண்டிருக்கிறீர்களா? அனைத்திற்கும் எல்லை வகுத்துப் பார்க்கும் பகுத்தறிவு எனும் அறிவைக் கடந்து சென்றால், எல்லை என்ற ஒன்று இல்லவே இல்லை என்பது புலப்படும்.

இயற்பியல் கோட்பாடுகளும், குவாண்டம் எனும் வரையறையற்ற சாத்தியங்களுக்கு ஆதரவளிக்கும் இந்த நேரத்தில், மனித இனம் உண்மையில் எந்த அளவிலான முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது என்பதை பார்ப்போம்.

**வினாக்கள்:**

முதலில், சில பொதுவான வினாக்களை முன்வைக்கிறேன் நான் யார்?

நான் உண்மையாகவே ஏன் இவற்றையெல்லாம் செய்கின்றேன்?

இதன் அந்தம் என்ன? ஆதியில் எதுவுமில்லையெனில், ஒட்டுமொத்தமும் எப்படி உருவானது? (அ) யார் உருவாக்கினார்கள்? உருவாக்கியது இறைவன் என்றால், அந்த இறை எவ்வாறு மற்றும் எதனால் உண்டானது? எல்லையற்ற பிரபஞ்சமாக கருதப்படும் இடத்தில், நான் மனிதன், பிறகு தமிழன், (உற்றுநோக்கின் தங்கள் பெயருடன் நிற்கும்) எனும் அடையாளங்கள் உண்மையில் எதற்கு? கலாசாரம் எனும் சொல்லும் தமிழில் பண்பாடு எனும் சொல்லும் ஒன்றென்பதும் தெரியாது, எதைக் காத்துக்கொண்டிருக்கிறேன்?

அப் குவார்க், டவுண் குவார்க் (Up Quark, Down Quark_ இற்கு அடுத்தடுத்து என்னதான் உள்ளது? ஏன் பறவைகளின் அசைவுகள் நம் காலக் கணக்கீடுகளோடு ஒப்பிட்டால், படபடக்கின்றன? காலமும், வேகமும் இயைந்த ஒன்றா? அல்லது வேறு வேறா? ஈர்ப்புவிசை என்று ஒன்று உண்டெனில், எதிர்ப்புவிசை (Anti-Gravity) எனும் ஒன்றும் உண்டல்லவா? இரு விசைகளும் சமநிலை அடைய விடாமல் தடுக்கும் விசை எது?(சமநிலை பெற்றால் இயக்கம் நின்று விடும் என்று நினைக்கிறேன்). இவ்வாறு, இக்கட்டுரை முழுக்க வினாக்கள் மட்டுமே கொண்டு நிரப்பிட இயலும் அல்லவா?

**நம் அண்டத்தின் அளவு**

1 ஒளி ஆண்டு – ஒளியால் ஒரு ஆண்டு காலத்தில் பயணிக்க முடிந்த தூரம். ஒளியானது தோராயமாக ஓர் ஆண்டில் 9.5 ட்ரில்லியன் கிலோ மீற்றர் பயணிக்கும்.

சரி, நாம் கொண்ட தலைப்பிற்கு வருவோம். தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் அதீதமாக வளர்ந்துவிட்ட இந்தக் காலகட்டத்திலும், மேற் கூறிய எந்த வினாக்களுக்கும் தெளிவான விடை இல்லை என்பது உண்மையே. நம்மிடம் இருக்கும் அறிவியல் கோட்பாடுகள் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றைக் கொண்டு நம்மால் இந்த அண்டவெளியில் எவ்வளவு தூரம் பயணிக்க முடியும்? நவீன அறிவியலின்படி நாம் சுருள் வடி வமைப்பைக் கொண்ட பால்வெளி அண்டத்தின் ஏறத்தாழ இடைப் பகுதி யில் இருக்கிறோம் (சூரியகுடும்பத்தில் வியாழன் கோள் போல) நம் அண்டத் தின் அளவு சராசரியாக 1,00,000 ஒளி ஆண்டுகளை தாண்டும்.

அது கோடிக்கணக்கான விண்மீன்களையும், வாயு மேகங்களையும், இருள் பொருளையும், கருந்துளைகளையும், நியூட்ரன் விண்மீன்களையும், கோள்களையும் மற்றும் அண்டத்தின் நடுப்பகுதியில் மிகப்பிரம்மாண்டமான ஒரு கருந்துளையையும் கொண்டுள்ளது. தொலைவிலிருந்து காண நமது அண்டம் மிகவும் அடர்த்தி உள்ளதாக தெரிந்தாலும், உண்மையில் பெரும்பாலும் அது வெற்றிடத்தையே கொண்டுள்ளது.

வியப்பினை ஒருபடி அதிகப் படுத்துவோம். இந்த லோக்கல் குறூ ப் அண்டத் தொகுதியானது, நூ ற்றுக்கணக்கான அண்டத்தொகுதி களைக் கொண்ட 'லனியாக்கியா விண்மீன் பெருந்திரள்' (Laniakea Super Cluster) என்பதற்குள் இருப்பதாகும். இன்று நம்மால் அறிய முடிந்த பிரபஞ்சத்தில் இதுபோன்று மில்லியன் கணக்கில் விண்மீன் பெருந்திரள்கள் உள்ளன.

இப்போது, நம்மிடம் உள்ள இயற்பியல் அறிவுடன், விண்வெளி யில் அதீத வேகத்தில் பயணம் செய்யும் தொழில்நுட்பத்தையும் பெற்றுவிட்டோம் என்று வைத்துக் கொள்வோம். அந்த ஓடத்தில் நம்மால் எவ்வளவு தூரம் பயணித்துவிட முடியும்? நாம் இதுவரை அறிந்திட்ட பிரபஞ்சத்தில் நம் 'லோக்கல் குறூப்' 0.0000000001% மட்டும்தான். அதாவது, நாம் நூறாயிரம் கோடிகளில் ஒரு சிறு துரும்பின் எல்லையை அடைவதே மிகப்பெரிய விடயமாகும். நம்மால் ஒருபோதும் அடையவே முடியாத பகுதிகள்தாம் இப்பிரபஞ்சத்தில் 100%– 0.0000000001%

ஏன் நம்மால் அடையவே முடியாது என்றால், 'ஒன்றுமில்லாத நிலை' எனும் இயற்கைதான் அதற்கு காரணம். ஒன்றுமில்லாத நிலை அல்லது வெற்றிடம் என்று அழைக்கப்படும் இடம், உண்மையில் வெறுமனே இல்லை. அது தனக்குத்தானே ஒரு உள் ஆற்றலைக் கொண்டுள்ளது. அவற்றைத்தான், 'குவாண்டம் பிளக்சுவேஷன்ஸ்' என்கிறோம்.

அவற்றை நுணுக்கமாக பார்த்தால், அதில் துகள்களும் எதிர்த்துகள்களும் எப்பொழுதுமே உருவாவதும் மறைவதுமாக இருக்கின்றன. கடந்த காலத்தில் 13.8 பில்லியன் ஆண்டுகள் பின்னோக்கிப் போவோம். அங்கே, பெரு வெடிப்பு (BIG - Bang) நடந்ததற்கு பின், 'கொஸ்மிக் இன்ஃ பிலேஷன்' எனும் நிகழ்வின்போது, நாம் அறிந்திருக்கும் இந்த பிரபஞ்சம், ஓரிரு நொடிகளிலேயே, ஒரு சிறிய அணு அளவிலிருந்து ட்ரில்லியன் கணக்கான கிலோ மீற்றர்கள் வரை விரிவடைந்தது. இந்த விரிவடைதல், மிக வேகமாகவும், மிகப்பிரமாண்டமான முறையிலும் ஏற்பட்டபோது, அதனுள் குவாண்டம் பிளக்சுவேஷன்ஸும் விரிவடைந்தது. விரிவடைதலால், அணுக்களிடையே இருந்த தூரங்கள், அண்டங்களுக்கு இடையிலிருக்கும் தூரங்களாயின. ஈர்ப்பு விசையின் வரையறை ஒரு குறிப்பிட்ட அளவுகோல் பருமனில் செயல்பட, ஆங்காங்கே அடர்த்தியானவை, நம் அண்டத்தொகுதிகள் போல ஆயின.

நமக்கு தெரிந்த ஒரு செய்தி என்னவென்றால், நம் 'லோக்கல் குறூப்' ஆனது ஈர்ப்புவிசையால் பிணைக்கப்பட் டுள்ளது என்பதுதான். சரி, அப்போது நாம், நமது லோக்கல் குறூப்பிலிருந்து மற்ற குறூப்பிற்கு செல்ல என்னதான் தடை?

இங்குதான் இருள் பொருள் அதை கடினமாக்குகிறது. இந்த பிரபஞ்ச விரிவடைதலுக்கு காரணமாகவும், அதனை துரிதப்படுத்தும் வேலையினையும், இருள்பொருள் தான் செய்கிறது. அது ஏன் அவ்வாறு செய்கிறது அல்லது இருள்பொருள் என்பது உண்மையில் என்ன என்பது நமக்கு தெரியாது. ஆனால் அதன் தாக்கத்தினை நன்றாக உணர மட்டுமே முடியும்.

நமது அடுத்த அண்டத்தொகுதி ஏற்கனவே பல மில்லியன் ஒளியாண்டுகள் தாண்டி உள்ளன. ஆனால், அவையனைத்தும் நாம் ஒருபோதும் எட்டவே முடியாத அளவு வேகத்தில் நம்மை விட்டுத்தள்ளிச் சென்றுகொண்டிருக்கின்றன. நாம் இந்த லோக்கல் குறூப்பிலிருந்து சென்று, இன்டெர்கேலக்டிக் வெளியில், முழுக்க இருளில் பயணிக்கலாம். ஆனால், நாம் எந்த பகுதியையும் எப்போதுமே அடையமுடியாது. அது ஒரு முடிவில்லா பயணமாகிவிடும்.

நாம் இங்கே தனியாக இருக்கும் நேரத்தில், கொஞ்சம் கொஞ்சமாக நமது லோக்கல் குறூ ப்-பும் சுருங்கிக்கொண்டே வரும்.


அண்டங்கள் ஒன்றோடொன்று இணைந்து, இன்னும் சில பில்லியன் ஆண்டுகளில் ஒரு மிகப்பெரிய பேரண்டத்தை உருவாக்கும். அதனை மில்க்ட்ராமேடா என்று அழைக்கலாம். (ஏனெனில், பால்வெளி அண்டமும், அன்ரோமேடா அண்டமும் இணைந்து விடுதலால்) இன்னும் நிலைமையை சற்று கடினமாக்கப்போவது எதுவென்றால், ஒவ்வோர் அண்டமும் வெகுதொலைவிலும், மற்றும் அவை தொடர்ந்து விலகிச்சென்று கொண்டே இருப்பதால், அவற்றிலிருந்து வெளிவந்து பயணிக்கும் எந்தவொரு ஃபோட்டான் துகள்களும் நம்மை அடையும் முன்னரே, அந்த அலைவரிசைகளால் மாறி மாறி, சிதைந்து, நம்மால் அவற்றை கண்டறிய முடியாத ஒன்றாகவே மறைந்துவிடும். இது நடக்குமேயானால், நமது லோக்கல் குறூப்பிற்கு வெளியே இருந்து எந்த ஒரு தகவலும் நமக்கு கிட்டாது.

பிரபஞ்சம் கொஞ்சம் கொஞ்சமாக நம் பார்வையிலிருந்து மறையத் தொடங்கியிருக்கும். ஒரு காலத்தில், எப்பொழுதும், எங்கு நோக்கினும் வெறும் வெற்றிடமும், இருளும் மட்டுமே தோன்றும். அந்த காலக்கட்டத்தில் உள்ள மனிதர்கள், மில்க்ட்ரோமேடா எனும் ஒரே ஒரு அண்டம்தான் உள்ளது என்று நினைத்தாலும் வியப்பதற்கில்லை. அவர்களால் ஒரு போதும் பெருவெடிப்பு பற்றி அறிந்துகொள்ளவே முடியாது. எங்கு நோக்கினும் அவர்கள் காண்பது வெறும் இருளாகத்தான் இருக்கும். நமக்கு தற்போது தெரிந்திருப்பது கூட, அவர்களுக்கு தெரிந்திருக்குமா என்பதும் ஐயமே! அவர்கள் பிரபஞ்சம் என்பது எல்லையற்ற ஒன்றென்பதை மறந்து எல்லைகளைக் கொண்ட தங்கள் அண்டத்தினை பிரபஞ்சமாக கருதுவர்.

இருப்பினும், நாம் விண்மீன்களுக்கிடையில் பயணிக்க எப்போதும் முயன்று கொண்டிருக்கிறோம். நம் தலைமுறைதான் மிகச்சரியான காலத்தின் தருணத்தில் உள்ளோம். நம்மால், நமது எதிர்காலத்தை மட்டுமன்றி, நம் தொலைவிலிருக்கும் கடந்த காலத்தையும் காண முடியும். □

# தொற்று நோய்களின் உலகம்! 13

வி.ராமசுப்பிரமணியன்,
தொற்றுநோய் சிறப்பு மருத்துவர்.



காசநோயை 'சமூகநோய்' என்றே சொல்லலாம். மருத்துவத் துறைக்கு பெரும் சவாலாக இருப்பது இந்த நோய்தான். காரணம், ஒரு காசநோயாளி தன்னை அறியாமல் பத்து முதல் பதினைந்து பேருக்கு அந்த நோயைப் பரப்புகிறார். நம்நாட்டில் நிலவுகிற சுற்றுச்சூழல் அக்கறையின்ன்மை, சுகாதார விழிப்பு உணர்வின்மை காரணமாகக் காசநோய் உலகைப் பெரிதும் ஆட்டுவித்துக் கொண்டிருக்கிறது. தினமும் பாதிப்பின் வீரியம் அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது.

காசநோயைக் கண்டறியும் மேண்டாக்ஸ், ரீபி கோல்ட் சோதனைகள் பற்றிப் பார்த்தோம். பொதுவான எந்த ஒரு சோதனையின் மூலமும் ஒருவருக்குக் காசநோய் வந்திருக்கிறது என்பதை உறுதிப்படுத்தவோ, வரவில்லை என்று மறுக்கவோ முடியாது என்றும் சொன்னேன். இந்த இரண்டு சோதனைகளுமே, காச நோய்க் கிருமிகளை உடல் சந்தித்திருக் கிறதா என்பதைக் கண்டறி வதற்கானவை. அவ்வளவுதான். ஆனால், இவற்றில் இன்னொரு முக்கிய விஷயம் இருக்கிறது.

ஐந்து வயதுக்கும் குறைவான குழந்தைகள், எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டவர்கள், 'சிலிக்கோசிஸ்' (Silicosis) நோய்த்தாக்கம் இருப்பவர்கள், சிறுநீரகப் பாதிப்பு இருப்பவர்களுக்கெல்லாம் காசநோய் வர வாய்ப்பு அதிகம். 'சிலிக்கோசிஸ்' என்பது, சிமெண்ட் தொழிற்சாலை, கண்ணாடித் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களுக்கு நுரையீரலில் ஏற்படும் நோய். இவர்களுக்கெல்லாம் மேண்டாக்ஸ், ரீபி கோல்ட் சோதனைகளில் 'பொசிட்டிவ்' என்று வந்தால் 'அலேர்ட்' ஆகவேண்டும்.

காசநோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம். வரமால் தடுக்க, குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு 'கீமோபிராபிலாக்சிஸ்' (Chemoprophylaxis) சிகிச்சையை எடுத்துக் கொள்ள வேண்டும். காசநோய்க்குத் தரப்படும் கூட்டு மருந்துகளில் ஒன்றான 'INrhida]pL' (Isoniazid) மாத்திரையை மட்டும் இவர்கள் ஆறு மாதங்கள் சாப்பிட வேண்டும்.

இது, தடுப்புச் சிகிச்சை.

**சரி, ஒரு சாதாரண நபருக்குக் காசநோய் இருப்பதை 100 வீதம் எப்படி உறுதி செய்வது?**

ஒருவருக்கு உடல் எடை கணிசமாகக் குறைந்து, காய்ச்சல், இருமலுடன் சளியில் இரத்தம் கலந்து வருவதாக வைத்துக் கொள்வோம். அவருக்கு நுரையீரலில் காசநோய் இருக்க வாய்ப்புள்ளது. அவரது சளியில் இருந்து கிருமியை எடுத்து, மைக்ரோஸ்கோப் (Microscope) என்ற நுண்ணோக்கியின் மூலம் அது காச நோயை உருவாக்கும் 'மைகோபக்றீரியம் டியூபர்குளோசிஸ்' (Mycobacterium Tuberculosis) கிருமிதானா என்று சோதிக்க வேண்டும். இந்தச் சோதனைக்கு அசிட் பாஸ்ட் பேசில்லஸ் டெஸ்ட் (Acid-Fast Bacillus (AFB) Testing) என்று பெயர்.

இது ரொபர்ட் கொக் கண்டுபிடித்த சோதனைமுறை. ஆனால், இந்தச் சோதனையின் மூலம் கூட 70 வீதம்தான் நோயை உறுதிப்படுத்த முடியும். 'ஸ்பூட்டம் கல்ச்சர்' (Sputum Culture) என இன்னொரு சோதனை முறை இருக்கிறது. பாதிக்கப்பட்டவரின் சளியில் இருந்து ஒரு கிருமியை எடுத்து வளர்த்து அது காசநோய்க் கிருமிதான் என்று உறுதி செய்வது.

இதுவும் ரொபர்ட் கொக் செய்ததுதான். இந்த முறைப்படி, நோயைக் கண்டறிய 4 முதல் 6 வாரங்கள் ஆகலாம். கிருமி, நன்கு வளர்ந்தபிறகுதான் உறுதி செய்யமுடியும். முன்பு, சொலிட் மீடியா (Solid Media) என்ற முறையில் இந்தச் சோதனை செய்யப்பட்டு வந்தது. கடினமான ஒரு பொருளில் கிருமியை விட்டு வளர்ப்பார்கள். இப்போது லிக்விட் மீடியா (Liquid Media) முறை வந்துவிட்டது. இந்த முறைப்படி 2 முதல் 4 வாரங்களுக்குள்ளாகவே நோயை உறுதி செய்துவிடமுடியும்.

இந்த 'கல்ச்சர்' முறை தான் 100 வீதம் நோயை உறுதிப்படுத்தும் சோதனை. ஆனால், இந்த முறையிலும்கூட, நோயை உறுதி செய்ய அதிகபட்சம் ஒருமாதம் காத்திருக்க வேண்டியிருக்கிறது. அதற்குள் பாதிக்கப்பட்டவர், பத்து பேருக்கு நோயைப் பரப்பி விட்டு விடுவார்.

உடனே கண்டுபிடிக்க வழியே இல்லையா என்றால், இருக்கிறது. நான்கு வருடங்களுக்கு முன்பு ஒரு சோதனை முறை வந்திருக்கிறது. அதை, என்.ஏ.ஏ.டி (NAAT) டெஸ்ட் என்று சொல்வோம். அதாவது, 'நியூக்ளிக் அசிட் அம்ப்ளிஃபிகேஷன் டெஸ்ட்' (Nucleic Acid Amplification Test). இந்த டெஸ்ட் பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்.




# செவ்வாயில் முதல் காலடி வைப்பது யார்?

உலகின் முன்னணி விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான நாசா தற்போது இரண்டு வருடங்களுக்குள் மனிதர்கள் நிலவில் மீண்டும் தரையிறங்க வைக்கும் திட்டத்தில் இருக்கிறது. அதற்கான பணிகள் தற்பொழுது வேகமெடுத்திருக்கின்றன. கடந்த முறை போல இல்லாமல் இந்த முறை அங்கே சில காலம் தங்கியிருந்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன. அதற்கடுத்தபடியாக செவ்வாய்க் கிரகத்தில் அடுத்த 2030 ஆம் ஆண்டுக்குள் மனிதர்களைத் தரையிறங்க வைக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் நாசாவின் தலைவரான ஜிம் பிரைடென்ஸ்டையின் (Jim Bridenstine) அண்மையில் Science Friday என்ற றேடியோ நிகழ்ச்சியில் விருந்தினராகக் கலந்துகொண்டார். அதில் 'நிலவில் அடுத்ததாகக் கால் வைப்பது ஒரு பெண்ணாக இருக்கலாம். அங்கே மட்டுமல்ல செவ்வாய்க் கிரகத்திலும் கூட பெண்கள் முதலில் கால் பதிக்கக் கூடும்" எனத் தெரிவித்திருக்கிறார்.

**'நிலவில் அடுத்ததாகக் கால் வைப்பது ஒரு பெண்ணாக இருக்கலாம். அங்கே மட்டுமல்ல செவ்வாய்க் கிரகத்திலும் கூட பெண்கள் முதலில் கால் பதிக்கக் கூடும்" எனத் தெரிவித்திருக் கிறார்.**

விண்வெளி ஆராய்ச்சி தொடர்பான நிகழ்வுகளில் பெண்களின் பங்களிப்பை அதிகப்படுத்த நாசா முடிவு செய்திருக்கிறது. சில நாள்களுக்கு முன்னால் கூட முற்றிலுமாக பெண்கள் மட்டுமே இணைந்து சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு வெளியே சென்று பணிகளை மேற்கொண்டனர் என்று நாசா அறிவித்திருந்தது. அதன்படி இரண்டு விண்வெளி வீராங்கனைகள் இந்த மாத இறுதியில் அந்த சாதனையை நிகழ்த்தியுள்ளனர்.



## சொல்லேர் உழவு - 23

கவிஞர் மகுடேசுவரன்

# “இதற்குப் பெண்பால் என்ன?”

நான் மிகுதியாக எதிர்கொண்ட ஐய வினாக்களில் ஒன்று “இதற்குப் பெண்பால் என்ன ?' என்பதுதான். பால் பகுப்பில் ஆண்பாலும் பெண்பாலும் தலையாயவை என்பதனால் எவ்வோர் ஆண்பாற்கும் உரிய பெண்பாற்பெயர் இருந்தே தீரும் என்பது நம் நம்பிக்கை. ஆணும் பெண்ணும் கலந்த நிலையில் இருக்கும் பால் ஆண்பாலா? பெண்பாலா? என்பதும் ஓர் ஐயம். அது மட்டுமின்றி ஒவ்வோர் ஆண்பாற்கும் பெண்பால் தேடினால் பலவற்றுக்கு இல்லை. அதனை முன்வைத்து இது ஆணாதிக்கக் குமுகாயம் (சமுதாயம்), மொழியே ஆணாதிக்க மொழிதான் என்று இளநிலைக் குதியாளர்கள் குதியாளம் போடுவதைப் பார்க்கின்றோம்.

இன்றைக்கு நமக்குக் கிடைத்த வாய்ப்புகள் வல்லமைகள் முன்னேற்றங்கள் முற்போக்கினங்கள் ஆகியவற்றைக்கொண்டு ஈராயிரம் ஆண்டுகட்கு முந்திய குமுகாயத்தினை மதிப்பீடு செய்வது அறிவுடைமை ஆகாது. அக்காலத்துத் தேவையும் கருத்தும் பாதுகாப்பும் போக்குவரத்தும் இருப்பும் இன்மையும் இன்றுள்ளவற்றோடு எவ்வகையானும் பொருத்தப்பாடுகள் உடையவையல்ல. அன்றைய மொழிப்பாடுகளில் பாற்செயல்களே வெவ்வேறாக இருந்திருப்பின் எங்ஙனம் இருபாற்சொற்கள் தோன்றி வழங்கலாகும் ? மேலும் இன்றைய கருத்தியல்கள் இறுதியானவையும் முடிவானவையுமாம் என்று உறுதி கூறலாகுமா ? பெருவழிநடையில் நாம் நிற்குமிடம் சிறுபுள்ளி.

ஒரு சொல் எப்படித் தோன்றும் ? முதலில் தொடக்க நிலையில் ஏதேனும் ஒன்றைக் குறிக்கத் தோன்றும். அது ஆணை நோக்கித் தோன்றினால் அங்கே முதற்சொல் ஆண்பாலாக இருக்கும். பெண்ணை முன்வைத்துத் தோன்றினால் பெண்பாலாக இருக்கும். அதன் பிறகு அதன் எதிர்பாற்குரிய சொல் தோன்றலாம். தோன்றாமலே விளங்கினாலும் பிழை காண்பதற்கில்லை. அன்றிருந்த நிலையில் மன்னன் என்பவன்தான் குடிகாக்க முனைமுகத்து நிற்க வேண்டும். மன்னனுக்குப் பெண்பால் என்ன என்றால் விடையில்லை.

புலவன் என்ற சொல் ஆண்பாற்சொல். அதற்குப் பெண்பால் என்ன ? புலவி என்று சொல்ல இயலாது. காதலவரிடையே ஊடல் முதிர்கின்ற அந்தப் பொன்னான நேரத்திற்குப் 'புலவி' என்று பெயர். 'புலவி நுணுக்கம்' என்றே திருக்குறளில் ஓர் அதிகாரம் வகுக்கப்பட்டிருக்கிறது. அதனால் புலவன் என்பதற்குப் பெண்பால் 'புலவி' என்றால் பொருத்தப்பாடு தோன்றவில்லை. ஆண்பாலோடு நிற்கும் பெயர்களில் பெண்பால் தோற்றங்கள் ஏற்பட்டபோது நம் மூத்தோர் முன்னொட்டாகவே “பெண்பால்” என்று சேர்த்துக்கொண்டனர். பெண்பாற்புலவர் என்று கூறியமைந்தனர். ஔவையார் “பெண்பாற்புலவர்”. பெரும்புலவர்கள் கோலோச்சிய அக்காலத்திலேயே இப்படிச் சொல்வது வழக்காக இருந்தது. நண்பன் என்ற சொல்லுக்கு நண்பி என்பது தவறு. 'பெண்பால் நண்பர்' என்றே சொல்ல வேண்டும்.

ஆண்பாற்கும் பெண்பாற்கும் தனித்தனி விகுதிகள் இருக்கின்றன. விகுதி என்பது ஒரு சொல்லின் பின்னொட்டு. இறுதிப்பகுதி. ஒருவன் என்பதில் ஒரு என்பது ஒருமையை, ஒற்றைத்தன்மையைக் குறிக்கிறது. அன் என்பது பின்னொட்டாகச் சேர்ந்த விகுதி. இங்கே அன் என்பது ஆண்பால் விகுதி. ஒருவன் என்னும்போது ஓர் ஆணைக் குறிக்கிறது. ஒருவன் என்பதற்குப் பெண்பால் ஒருத்தி. ஒருவள் என்று சிலர் பிழையாக எழுதுகின்றனர். அள் என்பதும் பெண்பால் விகுதிதான். ஆனால், எல்லாவிடங்களிலும் அள் விகுதி வருவதில்லை. குறவன் குறத்தி, உழவன் உழத்தி, ஒருவன் ஒருத்தி- இப்படித்தான் வரவேண்டும்.

அன், ஆன் ஆண்பால் விகுதிகள் என்றால் அள், ஆள் பெண்பால் விகுதிகள்.

மணமகன் மணமகள், வெறுங்கையன் வெறுங்கையள், பிறன் பிறள், அவன் அவள் என்னுமிடங்களில் அன், அள் விகுதிகள் இருபாற்கும் முறையே வருகின்றன. அடியான் அடியாள், ஆண்டான் ஆண்டாள் ஆகிய இடங்களில் ஆன் ஆள் விகுதிகள் இருபாற்கும் வருகின்றன.

தோழன் தோழி, அரசன் அரசி, கூனன் கூனி, குமரன் குமரி, கிழவன் கிழவி, காதலன் காதலி ஆகிய இடங்களில் இ என்ற விகுதி பெண்பாற்கு வந்தது. காதலி, காதலள், காதலாள் என்று பலவாறும் சொல்லத் தகுந்த இடங்களும் இருக்கின்றன. ஐகார விகுதி பெறும் பெண்பாற்பெயர்களும் இருக்கின்றன. ஆசிரியன் ஆசிரியை, ஐயன் ஐயை.

ஆண்பால் பெண்பால் சொற்கள் இவ்வாறு இணையாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. தொடர்பே இல்லாமலும் இருக்கலாம். ஆண் என்பதற்குப் பெண் என்பதே தொடர்பில்லாத சொல்தானே ? அடூஉ மகடூஉ என்பன முறையே ஆண் பெண்ணைக் குறிக்கும் தூய தமிழ் வழக்காகும். தந்தை தாய், பாணன் பாடினி. கன்னிக்குக் காளை என்பது ஆண்பால்.

ஆன்றோன், சான்றோன், அண்ணல், செம்மல், அமைச்சன் போன்ற சொற்களுக்குப் பெண்பால் இல்லை. பேதை பெதும்பை அரிவை தெரிவை போன்ற சொற்களுக்கு ஆண்பால் இல்லை.

---

# அதிக மேக்கப் காதலை கூடப் பிரிக்கும்...!

முகத்திற்கு அதிக அளவில் ஒப்பனை செய்து முகப்பருக்களை மறைத்தார் என கூறி ஐரோப்பா பெண் ஒருவரை அவரது காதலர் பிரிந்து சென்றார்.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண் பிரபல மருத்துவ விவாத வலைதளத்தில் இதுகுறித்து பதிவு ஒன்றை இட்டுள்ளார். இவரது பதிவின்படி இந்த இளம்பெண் 20-வயது உடையவர் எனவும், சமீபத்தில் காதலுருடன் சென்ற டேட்டிங்கின் பின்னர் அவரை பிரிந்தார் எனவும் தெரிகிறது.

குறிப்பிட்ட அந்த டேட்டின் முன்பு வரை இவரது முகத்தை சரியாக பார்க்காத இவரது வாழ்க்கை பகிர்வாளர், இந்த டேட்டிங் பின்பு சற்று கூர்ந்தே கவனித்து விட்டார் போலும். முகத்தில் அதிக அளவு முகப்பருக்களை கொண்டுள்ள இளம்பெண், தனது பருக்களை அதிக அளவு ஒப்பனை செய்து மறைத்து வந்துள்ளார். இந்நிலையில் தங்களது 16-வது டேட்டிங் தினத்திற்கு பின்பு அவரது வாழ்க்கை துணைவர் இதனை காரணம் காட்டி பிரிந்து சென்றுள்ளார்.

மேலும் அதிக அளவு ஒப்பனை செய்து ஆண்களை கைக்குள் போட்டுக்கொள்ளும் வேலையை நீ பார்த்து வருகிறாய் என இளம்பெண்ணை பார்த்து கூறியுள்ளார். இதனால் வேதனையடைந்த இந்த இளம்பெண், தனது பதிவில் தான் ஏன் அதிக அளவு ஒப்பனை செய்ததாக தெரிவித்துள்ளார்.

தனது முகத்தில் இருக்கும் முகப்பருக்கள் தன்னை வலிமையற்றவளாய் மாற்றி விடுவதாகவும், தன் முகத்தில் இருக்கும் பருக்களை பார்க்க முடியாமல்தான் அதிக அளவில் முகத்திற்கு ஒப்பனை செய்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிட்டத்தட்ட 15 டேட்டிங் வரை பிரச்சினை ஏதும் வராத இந்த ஜோடிகளுக்குள், குறிப்பிட்ட டேட்டிங் அன்று ஒப்பனை இல்லாமல் தன் காதலர் முன் இந்த இளம்பெண் சென்று நின்றதே தற்போது பிரச்சினையாய் அமைந்துள்ளது.

இந்த விஷயத்தில் எனது தவறு ஏதும் இல்லை என நான் உணர்ந்துக்கொண்ட போதிலும், அதனை அவருக்கு புரிய வைக்க முடியாமல் போனதே எனக்கு மிகுந்த வருத்தம் அளிக்கிறது என அந்த இளம்பெண் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

ஆண்கள் என்றாலும் சரி, பெண்கள் என்றாலும் சரி... முகப் பருக்கள் என்பது இயல்பான ஒன்று. வயது கூட அவர்களது உடலில் ஏற்படும் மாற்றங்களில் இதுவும் ஒன்று என்பதை புரிந்துகொள்ளாத என் காதலர் என்னை புரிந்து ஏற்றுக்கொண்டால் நிச்சயம் மகிழ்ச்சியடைவேன் என அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# ஆதரவற்றோரை கொன்று குவித்த இராணுவ ஆட்சியாளர்கள்

## கொரியாவின் கதை #18

தென்கொரியாவின் அடித்தளத்தை வலுவாக அமைத்ததில் பார்க் சுங் ஹீயின் பங்கு முக்கியமானது. 1917 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதி பிறந்தவர். ஜப்பானின் அடிமையாக கொரியா இருந்த சமயத்தில் பிறந்தவர். இவருடைய சின்ன வயதில் நெப்போலியனை ஹீரோவாக கொண்டு வளர்ந்தவர்.

இளம் வயதிலேயே ஜப்பான் நாட்டின் நவீனத்துவ முன்னேற்றத்தில் மனதைப் பறிகொடுத்தவர். டாயேகு நகரில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் படித்துத் தேறி ஆசிரியராக பணியாற்றினார். இந்தச் சமயத்தில்தான் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே இரண்டாவது யுத்தம் தொடங்கியது.

உடனே, ஜப்பான் இராணுவ அக்கடமியில் சேர்ந்தார். அந்தச் சமயத்தில் அவருடைய இராணுவ இலட்சியங்களை அறிந்த ஜப்பான் இராணுவ பயிற்றுவிப்பாளர் அவருக்கு உதவினார். தனது பெயரை டகாகி மஸாவோ என்ற ஜப்பானிய பெயராக மாற்றிக்கொண்டார் பார்க். 1942 ஆம் ஆண்டு இராணுவ பயிற்சியில் முதலிடத்தில் தேறி ஜப்பான் மன்னரிடம் தங்கப்பதக்கத்தை பெற்றார். அதைத் தொடர்ந்து, ஜப்பான் ஏகாதிபத்திய இராணுவப் பயிற்சி கழகத்தில் உயர் பயிற்சிக்காக சேர்ந்தார்.

1944 ஆம் ஆண்டு மூன்றாம் வகுப்பில் தேறிய அவர், ஜப்பான் இராணுவத்தில் சேர்ந்து, இரண்டாம் உலகப்போரின் இறுதிக் காலகட்டத்தில் பணியாற்றினார். அப்போது மீண்டும் அவருடைய பெயரை ஒகமோட்டோ மினோரு என்று மாற்றிக் கொண்டார். கொரியாவில் ஜப்பானுக்கு எதிராக சண்டையிட்டு வந்த கொரில்லா போராளிகள் குறித்து உளவறியும் வேலையில் அவர் ஈடுபட்டிருந்தார். அதாவது ஜப்பான் இராணுவத்துக்கு கைக்கூலியாக வேலை செய்தார்.

இரண்டாம் உலகயுத்தம் முடிந்தவுடன் கொரியாவுக்கு திரும்பினார். கொரியா இராணுவ பயிற்சி கழகத்திலும் பயிற்சி பெற்று 2 ஆம் வகுப்பில் தேர்ச்சிபெற்றார். அப்போதுதான் அமெரிக்க இராணுவத்தின் கீழ் தென்கொரியா உருவாக்கப்பட்டது. அமெரிக்க இராணுவத்தில் அதிகாரியாக பணியாற்றினார்.

சிங்மேன் ரீ தலைமையில் அமைந்த புதிய அரசு, பார்க் ஒரு கம்யூனிஸ்ட் என்று சந்தேகித்து 1948 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கைதுசெய்தது. விசாரணைக்கு பின்னர் அவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. கொரிய இராணுவத்தின் உயர் அதிகாரிகள் பலர் அவருடைய தண்டனைக்கு எதிர்ப்பு தெரிவித்ததால் அந்த தண்டனை நிறுத்தப்பட்டது. அதன்பிறகு, அவர் சம்பளமில்லாத இராணுவ சேவையில் ஈடுபடுத்தப்பட்டார். 1950 ஆம் ஆண்டு கொரிய யுத்தம் தொடங்கியவுடன் தென்கொரிய இராணுவத்தில் மேஜராக பதவி ஏற்றார்.


இராணுவ ஆட்சியாளர் பார்க் மற்றும் குடும்பத்தினர்

பயக் சன்-யுப் என்பவர் அவருக்கு உதவிசெய்தார். அதன்பிறகு லெப். கேணல், கேணல் என்று யுத்தத்தின்போதே அடுத்தடுத்து பதவி உயர்வுபெற்றார். கேணலாக இருந்த சமயத்தில் இராணுவ தலைமையகத்தின் உளவுப்பிரிவு உதவி இயக்குனராகவும் பதவி வகித்தார். கொரியா யுத்தம் முடிந்தவுடன் தென்கொரிய இராணுவத்தின் பிரிகேடியராக உயர்ந்தார். போர் நிறுத்த உடன்படிக்கை கையெழுத்தானதும்,

> “தெருக்களில் பிச்சையெடுத்த, சாலையோரங்களை குடியிருப்பாகக் கொண்ட சிறுவர்களையும் ஆதரவற்றவர்களையும் கைது செய்து அவர்களுக்கு வேலை கொடுக்க உத்தரவிட்டதுதான் என்று கூறுவோர் இருக்கிறார்கள். ஆனால், பிச்சையெடுத்த, ஆதரவற்ற சிறுவர்களையும் முதிரயோரையும் மொத்தமாகக் கொன்று குவித்ததார் இப்போது பல ஆதாரங்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.”

அமெரிக்காவில் உள்ள போர்ட் ஸில் என்ற இடத்தில் ஆறுமாத பயிற்சிக்காகத் தெரிவானார்.

பயிற்சி முடித்து திரும்பிய பார்க் படுவேகமாக தென்கொரிய இராணுவத்தில் முக்கிய பதவிகளை அடுத்தடுத்து பெற்றார். 1960 ஆம் ஆண்டு இராணுவத்தில் முக்கியமான தளபதிகளில் ஒருவரானார். 1960 ஆம் ஆண்டு ஜனாதிபதி சிங்மேன் ரீக்கு எதிராக மாணவர்களும் பொதுமக்களும் நடத்திய போராட்டம் காரணமாக அவர் நாட்டைவிட்டு ஓடினார். அதைத் தொடர்ந்து நடைபெற்ற தேர்தலில் யுன் போ-சியோன் ஜனாதிபதியாகவும், சாங் மியோன் பிரதமராகவும் தெரிவானார். ஆனால் அந்த அரசு தொடக்கத்திலிருந்தே குழப்பத்தில் தவித்தது. ஐந்து மாதங்களில் மூன்று முறை அமைச்சரவையை மாற்றினார் பிரதமர் சாங் மியோன்.

இந்தக் குழப்பத்தில் மக்கள் செய்வதறியாது திகைத்தனர். நிர்வாகச் சீர்கேடும் ஊழலும் பெருகின. தினமும் மக்கள் போராட்டம் தொடர்ந்தது. பொலிஸ் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லாமல் போயிற்று. ஆளும் அரசு மக்கள் ஆதரவை இழந்துவிட்டது. இந்தச் சமயத்தில்தான் மேஜர் ஜெனரலாக இருந்த பார்க் இராணுவ புரட்சி குழுவை உருவாக்கினார். சில மாதங்களில் ஓய்வில் செல்லவிருக்கும் நிலையில் அந்தக் குழுவின் திட்டங்களை விரைவுபடுத்தினார். 1961 ஆம் ஆண்டு மே 16 ஆம் தேதி ஆட்சியை இராணுவம் கைப்பற்றியது.

இராணுவ அதிகாரிகளால் உருவாக்கப்பட்ட புதிய நிர்வாகம் பார்க்கை ஆதரித்தது. தளபதி சாங் தலைமையில்தான் அந்த நிர்வாகம் அமைய வேண்டும். ஆனால், பார்க்கை அதிகாரிகள் ஆதரித்ததால் சாங் கைது செய்யப்பட்டார். இராணுவத்தின் இந்த நடவடிக்கையை மக்கள் ஆதரித்தனர். ஜனாதிபதியாக இருந்த யுன் இராணுவத்தை ஆதரித்தார். புதிய இராணுவ அரசின் நடவடிக்கைகளில் அமெரிக்க படையோ, கொரிய இராணுவத்தின் வேறு தளபதிகளோ தலையிடக்கூடாது என்று யுன் உத்தரவிட்டார்.

பார்க் ஜப்பானிய இராணுவ பயிற்சி பெற்றிருந்ததால் தென்கொரியா மக்களையும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு வாழ பயிற்றுவிக்க முடிவெடுத்தார். பொறுப்பேற்றவுடன் அவர் செய்த முதல் காரியம், தெருக்களில் பிச்சையெடுத்த, சாலையோரங்களை குடியிருப்பாகக் கொண்ட சிறுவர்களையும் ஆதரவற்றவர்களையும் கைது செய்து அவர்களுக்கு வேலை கொடுக்க உத்தரவிட்டதுதான் என்று கூறுவோர் இருக்கிறார்கள்.

ஆனால், பிச்சையெடுத்த, ஆதரவற்ற சிறுவர்களையும் முதிரயோரையும் மொத்தமாகக் கொன்று குவித்ததார் இப்போது பல ஆதாரங்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

இதையடுத்து தென்கொரியா தெருக்களே சுத்தமடைந்தன என்று அமெரிக்க எழுத்தாளர் ஒருவர் கூறுகிறார்.

பார்க்கின் நிர்வாகத்தை வளர்ச்சிக்கான சர்வாதிகாரம் என்று தென்கொரிய வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். நாம் முயற்சி செய்தால் எல்லாமும் முடியும். முதலில் நம்மால் முடியும் என்று நம்ப வேண்டும் என்பதே பார்க் நிர்வாகத்தின் மையக் கருத்தாக இருந்தது. 1961 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 19 ஆம் திகதி கொரியா உளவுத்துறை உருவாக்கப்பட்டது. தனது அரசுக்கு எதிராக யாரும் எதிர்ப்புரட்சியில் ஈடுபட்டுவிடக்கூடாது என்பதற்காக பார்க் இதை உருவாக்கினார்.

பார்க்கின் நிர்வாகத்துக்கு ஜனாதிபதி யுன் ஆதரவாக இருந்தாலும், 1962 ஆம் ஆண்டு மார்ச் 24 ஆம் திகதி ராஜினாமா செய்தார். இதையடுத்து, இடைக்கால ஜனாதிபதியாக தன்னை அறிவித்துக்கொண்டார் பார்க். ஆனால், மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தை ஏற்படுத்தும்படி கென்னடி தலைமையிலான அமெரிக்க அரசு பார்க்கை நிர்பந்தம் செய்தது.


இதையடுத்து, பார்க் தனது தலைமையில் ஜனநாயக குடியரசுக் கட்சியை உருவாக்கினார். 1963 ஆம் ஆண்டு தேர்தலை நடத்தினார். அந்தத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி யுன்னை மிகச்சிறிய வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்தார். மீண்டும் 1967 ஆம் ஆண்டு நடந்த தேர்தலிலும் யுன் போட்டியிட்டார். அதிலும் பார்க் வெற்றிபெற்றார்.

## பின்வாங்கும் அயோக்யா

விஷால் நடித்துள்ள 'அயோக்யா' படத்தின் வெளியீடு பிற்போடப்பட்டுள்ளது. இதனை ஏ.ஆர்.முருகதாஸிடம் உதவியாளராகப் பணியாற்றிய வெங்கட் மோகன் இயக்கியுள்ளார். படப்பிடிப்பு முடிவடைந்து, இறுதிகட்டப் பணிகள் மும்முரமாக நடக்கின்றன.

சில நாட்களுக்கு முன்பு வெளியான படத்தின் டீஸருக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. ஏப்ரல் 19 ஆம் திகதி 'அயோக்யா' வெளியாகும் என படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்தது. ஆனால், இன்னும் ஒரு பாடல் படமாக்கப்படவில்லை.

பாடலுக்கான நடிகை தேர்வில் சிக்கல், விஷாலின் நிச்சயதார்த்தம் என்பவற்றால் பாடல் காட்சியை படமாக்க முடியவில்லை. இதனால் வெளியீட்டுத் திகதி தள்ளிப் போகிறது. இதனால், மே 10 ஆம் திகதி படத்தை வெளியிட திட்டமிடுகிறது படக்குழு.





## ஆசை... ஆசை... பேராசை

தமிழின் முன்னணி நடிகை நயன்தாராவுக்கு, எவ்வளவு சம்பளமும் கொடுக்க, தயாரிப்பாளர்களும் இயக்குநர்களும் தயாராக உள்ளனர். அதனால், அதிக சம்பளம் வாங்கும் நடிகையாக நயன்தாரா தான் இருக்கிறார்.

நாயகர்களுக்கு இணையான கதாபாத்திரங்களில் நடித்து வரும் இவருக்கு, கதாபாத்திரத்தில் மட்டுமல்ல, சம்பள விடயத்திலும், நாயகர்களை விட அதிகமாக வாங்க வேண்டும் என்பதே அவரது ஆசையாம்.

நயன்தாரா தற்போது, ஒரு திரைப்படத்துக்காக 5 கோடி இந்திய ரூபா சம்பளமாக வாக்குகிறாராம். இதுவே, ஒரு திரைப்படத்துக்கு 50 கோடி இந்திய ரூபா சம்பளமாக வாங்க வேண்டும் என்பது தான் அவரது நீண்ட நாள் ஆசையாம்.

## இது தம்பதியரின் படம்

திருமணத்துக்குப் பிறகு ஆர்யா – சயிஷா இணைந்து 'டெடி' படத்தில் நடிக்கின்றனர்.

'கஜினிகாந்த்' படத்தில் நடித்தபோது ஆர்யா – சயிஷா இடையே காதல் மலர்ந்தது. கடந்த காதலர் தினத்தன்று இதை ருவிட்டரில் உறுதிப்படுத்தினார் ஆர்யா. இவர்களின் திருமணம் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது.

இந்நிலையில், திருமணத்துப் பிறகு ஆர்யா – சயிஷா இருவரும் ஒரு படத்தில் ஜோடியாக நடிக்க ஒப்பந்தமாகியுள்ளனர். 'டெடி' என்று பெயரிடப்பட்டுள்ள இந்தப் படத்தை, சக்தி சௌந்தர்ராஜன் இயக்குகிறார்.




## காப்பான் இரகசியம்...!

கே.வி.ஆனந்த் இயக்கத்தில் உருவாகிவரும் படம் 'காப்பான்'. சூர்யா நடித்துள்ள இந்தப் படத்தில், மோகன்லால், பொமன் இரானி, ஆர்யா ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்துள்ளனர். நாயகியாக சாயிஷா நடித்துள்ளார்.

இப்படத்தில் மோகன்லால் இந்தியாவின் பிரதமராகவும், அவரின் பாதுகாப்பு உயர் அதிகாரியாக சூர்யாவும் நடிக்கின்றனர் என ஏற்கெனவே செய்திகள் வெளியாகின. ஆனால், இதுகுறித்து படக்குழு மறுக்கவோ, உறுதிப்படுத்தவோ இல்லை.

அண்மையில் நேர்காணல் ஒன்றில் ரசிகர் ஒருவர் காப்பான் படம் குறித்து கருத்துத் தெரிவிக்குமாறு கேட்டார். இதற்குப் பதிலளித்த சூர்யா ஊடகங்களில் வெளியான தகவல் உண்மை என்று கூறினார். மேலும் ஒகஸ்ட் 15 ஆம் திகதி படம் திரைக்கு வரும் எனத் தெரிவித்தார்.



## தெலுங்கிலும் கனா

அருண்ராஜா காமராஜ், இயக்குநராக அறிமுகமான படம் 'கனா'. பெண்கள் கிரிக்கெட்டை மையமாக வைத்து எடுக்கப்பட்ட இந்தப் படத்தில், நாயகியாக ஐஸ்வர்யா ராஜேஷ் நடித்தார். அவருடைய அப்பாவாக சத்யராஜ் நடித்தார்.

'எஸ்கே புரொடக்ஷன்ஸ்' சார்பில் சிவகார்த்திகேயன் முதன்முதலாகத் தயாரித்த படம் இது. படம், மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றது.

இந்நிலையில், இப் படத்தைத் தெலுங்கில் மீளுருவாக்கவுள்ளனர். தெலுங்கிலும் ஐஸ்வர்யா ராஜேஷே நாயகியாக நடிக்கிறார். பிமநேனி சீனிவாச ராவ் இயக்கும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு, ஏப்ரலில் தொடங்குகிறது.



காஜல் அகர்வால் நடிக்கும் 'பாரிஸ் பாரிஸ்' திரைப்படம், பொலிவுட்டில் கங்கனா ரணாவத் நடித்து வெளியான 'குயின்' படத்தின் மீளுருவாக்கம். 'குயின்' படத்தில் கங்கனாவின் சம்பளம் 11 கோடி இந்திய ரூபா. 'பாரிஸ் பாரிஸ்' படத்தில் காஜலின் சம்பளம் 2 கோடி இந்திய ரூபா மட்டும்தானாம்!

அஜய் தேவ்கான் நடித்த 'சிங்கம்'தான் காஜலின் முதல் பொலிவுட் படம் என்று பலரும் நினைத்துக்கொண்டிருப்பர். ஆனால் இதற்கு முன்பு, 'க்யூன், ஹோ கயா நா' என்ற படத்தில் ஐஸ்வர்யா ராயுடன் ஒரு பாடலுக்கு காஜல் நடனமாடியிருக்கிறார்.



படப்பிடிப்பு இல்லாத நாள்களில், வீட்டில் சமைத்துச் சாப்பிடும் பழக்கமுடையவர். வடஇந்திய இனிப்பு வகைகளைப் பண்டிகை நாள்களில் தயாரித்து, அயலாருக்கு அளிக்கும் வழக்கம் இவருக்கு உண்டு.

இவர் தன் தங்கை நிஷா அகர்வாலுடன் சேர்ந்து 'மர்சாலா' என்ற பெயரில் நகைக்கடை ஒன்றை மும்பையில் நடத்தி வருகிறார். விரைவில் சென்னையிலும், ஹைதராபாத்திலும் இதன் கிளைகளைத் தொடங்கவிருக்கிறார்.

காஜல் தற்போது வைத்திருக்கும் கார் 43 லட்சம் இந்திய ரூபா மதிப்புள்ள வெள்ளை நிற ஆடி Q3.

காஜல் தன்னை ஃபிட்டாக வைத்திருக்க தினமும் கால் மணிநேரம் நீச்சல் பயிற்சி மேற்கொள்கிறார். அதிகாலை 5 மணிக்கு எழுந்து யோகா செய்யும் பழக்கமும் கொண்டவர்.

மும்பை கே.சி. கல்லூரியில் மார்க்கெட்டிங் அண்ட் அட்வர்டைசிங் பட்டப்படிப்பு முடித்தவுடன், லக்மே நிறுவனத்தில் சிறிது காலம் இன்ரர்ன்ஷிப் செய்து முடித்த காஜல், பின்னர் 2017 ஆம் ஆண்டு அந்நிறுவனம் நடத்திய அழகிப் போட்டியில் பட்டமும் வென்றார்.

காஜலின் நெருங்கிய தோழி தமன்னா. 10 ஆண்டுகளாகத் தொடர்கிறது இவர்களின் நட்பு. ஒருவருக்கொருவர் பரஸ்பரம் தங்கள் குடும்ப நிகழ்ச்சிகளில் தவறாமல் கலந்துகொள்வர்.

பிரெட்ரிக் டக்ளஸ்

லாயத்திலிருந்து குதிரையை வெளியே கொண்டுவரும்போது பராமரிப்பாளர்களின் மீது சுமத்தப்படும் பல்வேறு குற்றச் சாட்டுக்களை லாயத்தின் வாசலருகே நின்று கேட்பதே வேதனையானது. 'குதிரை சரியாகக் கவனிக்கப்படவில்லை. சரியாக உணவு தரப்படவில்லை. போதுமான அளவு தேய்த்துக் குளிப்பாட்டப்படவில்லை. உணவு மிக நனைந்து போயிருந்தது. அல்லது வறண்டு போயிருந்தது. சீக்கிரமாகவே உணவு வழங்கப்பட்டுவிட்டது அல்லது தாமதமாக வைக்கப்பட்டது. சூடாக இருந்தது அல்லது ஆறிப்போய்க் கிடந்தது. தானியங்கள் நிறைய இல்லாமல் வெறும் வைக்கோலாக இருந்தது அல்லது வைக்கோல் இல்லாமல் வெறும் தானியமாகப் போய்விட்டது. மூத்த பர்னி கூட இதைச் சரியாகக் கவனிக்காமல் துளியும் பொறுப்பில்லாமல் மகனிடம் விட்டுவிட்டான்."

இந்தக் குற்றச்சாட்டுகள் எவற்றிற்கும், அவை எத்தனை அபாண்டமானவையாக இருந்தாலும் அடிமை ஒரு வார்த்தை பதில் சொல்லக்கூடாது. அடிமையின் எதிர்ப்பை கேணல் லொய்ட்டால் சகித்துக் கொள்ள முடியாது. அவர் பேசிக் கொண்டிருக்கும்போது அடிமை நின்றுகொண்டு நடுங்கிக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். அப்படித்தான் நடக்கும். ஐம்பது அல்லது அறுபது வயதான மூத்த பர்னியை அவருடைய சொட்டைத் தலையின் மீது இருக்கும் துணியை அகற்றி விட்டு குளிர்ந்த ஈரத் தரையில் மண்டியிட வைத்து துணியில்லாத மண்படிந்த அவரது முதுகில் ஒரே சமயத்தில் முப்பதிற்கும் மேற்பட்ட கசையடிகளை கேணல் கொடுப்பதை நான் பார்த்திருக்கிறேன்.

கேணல் லொய்ட்டுக்கு எட்வேர்ட், மர்ரே, டானியல் என்று மூன்று மகன்களும் வின்டர், நிக்கல்சன், லொன்டெஸ் என்று மூன்று மருமகன்களும் இருந்தார்கள். அனைவரும் பெரிய வீட்டில் இருந்தார்கள். இவர்கள் எல்லோருமே மூத்த பர்னியிலிருந்து, குதிரை வண்டிக்காரர் வில்லியம் வில்க்ஸ் வரை எந்தவொரு அடிமையையும் தாங்கள் விரும்பும்போது சவுக்கால் அடித்துத் துன்புறுத்தி ரசிக்கலாம். வேலைக்காரன் ஒருவனை வின்டர் தன் சவுக்கின் நுனி தொடும் தூரத்தில் நிறுத்தி விளாசும் ஒவ்வொரு விளாசலிலும் அவனது முதுகுச் சதை பிய்த்தெறியப்படுவதை நான் பார்த்துண்டு.

லொய்ட்டின் செல்வச் செழிப்பை விவரிப்பதென்பது முடியாத காரியம். பத்துப் பதினைந்து வீட்டு வேலைக்காரர்களை வைத்திருந்தான். ஆயிரம் அடிமைகள் இருந்தார்கள் என்று சொல்லப்படுவதுண்டு. அந்த அனுமானம் உண்மைதானென்று நான் நினைக்கிறேன். அவனிடம் நிறைய அடிமைகள் இருந்ததால் அவர்களில் பலரைப் பார்க்கும்போது அவனுக்கு அடையாளம் தெரியாது. வெளியே இருந்த பண்ணைகளின் அடிமைகள் எல்லோரும் லொய்ட்டை அறிந்தவர்கள் கிடையாது. இதுபற்றி ஒரு சம்பவம் சொல்லப்படுவதுண்டு. அவன் ஒருநாள் வழக்கம்போல குதிரையில் சவாரி செல்லும் வழியில் ஒரு கறுப்பனைச் சந்தித்தான். தென்பகுதியில் பொது இடங்களில் கறுப்பின மனிதர்களிடம் உரையாடுவது போல அவனிடமும் பேசத் தொடங்கியிருக்கிறான்.

'தம்பி நீ யாருடைய அடிமை'

'நான் கேணல் லொய்ட்டுக்கு சொந்தமானவன்' என்றான் அடிமை.

'கேணல் லொய்ட் உன்னை நன்றாகக் கவனித்துக் கொள்கிறாரா' என்று கேட்டவுடனே, 'இல்லை', என்று பதில் வந்தது.

'உன்னிடம் கடுமையாக வேலை வாங்குகிறாரா', என்றதும் ' ஆம்', என்று சொல்லியிருக்கிறான்.

பிறகு, 'சாப்பாடு சரியாகப் போடுகிறாரா...', என்று கேட்டதும் உண்மைதான்... உள்ளபடியே நல்ல சாப்பாடு போடுகிறார்', என்று பதில் சொல்லிவிட்டான்.

அந்த அடிமை எந்தப் பண்ணையைச் சேர்ந்தவன் என்று தெரிந்து கொண்டு கேணல் போய்விட்டான். தனது எஜமானனுடன்தான் இத்தனை நேரமும் பேசிக் கொண்டிருந்தோம் என்பது தெரியாமலேயே அடிமையும் தன் வேலையைப் பார்க்கப் போய்விட்டான். அதற்குப் பிறகு இரண்டு மூன்று வாரங்கள் வரை அந்த சம்பவத்தைப் பற்றி நினைக்கவோ, பேசவோ, கேட்கவோ இல்லை.


பிறகு ஒருநாள் திடீரென்று எஜமானனிடம் முறைதவறி நடந்து கொண்டதற்காக அவன் ஜியார்ஜியா அடிமை வியாபாரியிடம் விற்கப்பட்டுவிட்டதாக மேற்பார்வையாளன் வந்து அவனிடம் சொன்னான். அதேகணம் அவன் விலங்கிடப்பட்டான். மரணத்தை விட கருணையற்ற ஒரு கரத்தால், ஒரு சிறு எச்சரிக்கையும் இன்றி, அவன் அவனது குடும்பத்தாரிடம் இருந்தும் நண்பர்களிடம் இருந்தும் பறிக்கப்பட்டு எப்போதைக்குமாகப் பிரிக்கப்பட்டு விட்டான். பேச்சுவாக்கில் தொடர்ந்து கேட்கப்பட்ட சாதாரண கேள்விகளுக்கு சாதாரண உண்மைகளை சொன்ன தற்கான தண்டனை இதுதான்.

இப்படிப்பட்ட சம்பவங்களின் விளைவாக, அடிமைகள் தங்களது நிலைமை பற்றியோ எஜமானர்களின் நடத்தையைப் பற்றியோ விசாரிக்கப்படும்போது தாங்கள் திருப்தியுடன் இருப்பதாகவும், எஜமானர்கள் பரிவுடன் நடந்து கொள்கிறார்கள் என்றும் பதில் சொன்னார்கள். அடிமைகள் தங்களின் நிலைமையைக் குறித்து என்ன நினைக்கிறார்கள் என்று அறிந்து கொள்வதற்காக அடிமைகளிடையே தங்களது உளவாளிகளை அனுப்புவதுண்டு. அடிக்கடி நடக்கும் இவ்வாறான விடயங்கள் அடிமைகளிடையே 'அடங்கிய நாக்கு அறிவாளியின் அடையாளம்', என்கிற பழமொழியை பிரபலமாக்கியது.

உண்மையைச் சொல்லி அதன் பலன்களை அனுபவிப்பதைத் தவிர்ப்பதற்காக அதையே மறைத்தார்கள். அதன் மூலம் தாங்களும் மனித சமூகத்தின் அங்கம்தான் என்பதை நிரூபித்தார்கள். எஜமானர்களைக் குறித்து ஏதாவது சொல்வது என்றால் - குறிப்பாக அறிமுகமில்லாத எவரிடமாவது பேசும்போது, எஜமானர்களுக்கு சாதகமாகவே பேசுவார்கள். நான் அடிமையாக இருக்கும்போது என் எஜமானன் கருணை உள்ளவனா என்று என்று விசாரிக்கப்பட்ட போதெல்லாம் எதிர்மறையான பதிலை நான் எப்போதும் சொன்னதாக எனக்கு நினைவில்லை. அவ்வாறு சொல்லும்போது அப்பட்டமான பொய்யைச் சொல்கிறோம் என்று எண்ணியதுமில்லை. எங்களைச் சுற்றியிருந்த பிற எஜமானர்கள் காட்டும் கருணையின் அடிப்படையிலேயே என்னுடைய எஜமானனின் கருணையை நான் கணித்தேன் என்பதே அதற்குக் காரணமாக இருக்கலாம்.

மேலும் அடிமைகளும் மற்றவர்களைப் போன்றவர்கள்தான். துவேசத்தை மனதுக்குள்ளேயே மறைத்துக்கொள்கிறார்கள். பிறரைப் பற்றிக் கவலைப்படாமல் அவரவர் நன்மையிலேயே அக்கறை கொள்கிறார்கள். இவ்வாறான பாரபட்சத்தின் காரணமாகப் பலரும் தங்களின் எஜமானர்கள் பிற எஜமானர்களை விட நல்லவர்களே என்று எண்ணுகிறார்கள். அதுவும் சிலரது விடயத்தில் இது நேர்மறையாக இருக்கும்போது கூட இவ்வாறே சொல்கிறார்கள்.

(போர் நீளும்)



தொடர் 08

# ஓர் அடிமையின் விடுதலைப் போர்

**ஒருநாள் திடீரென்று எஜமானனிடம் முறைதவறி நடந்து கொண்டதற்காக அவன் ஜியார்ஜியா அடிமை வியாபாரியிடம் விற்கப்பட்டுவிட்டதாக மேற்பார்வையாளன் வந்து அவனிடம் சொன்னான். அதேகணம் அவன் விலங்கிடப்பட்டான். மரணத்தை விட கருணையற்ற ஒரு கரத்தால், ஒரு சிறு எச்சரிக்கையும் இன்றி, அவன் அவனது குடும்பத்தாரிடம் இருந்தும் நண்பர்களிடம் இருந்தும் பறிக்கப்பட்டு எப்போதைக்குமாகப் பிரிக்கப்பட்டு விட்டான்.**

முடிவுறா எண்ணிக்கையிலான காந்தங்களை ஒரே நேர்கோட்டில் வைச்சா... எதிர் துருவங்களைக் கவரும். அதன் இயல்பு என்னவாகும்?"

"....."

ஒரு காந்தத்தின் வடக்கு மறு காந்தத்தின் தெற்கை இழுக்கும். ஆனால் இழுபடும் காந்தத்தின் வடக்கே இடுத்துள்ள காந்தம் ஏற்கனவே இழுத்துக்கிட்டிருக்கும் இல்லையா...

நான் வெறுத்ததே இல்லை. ஒரு செக்கு மாட்டிற்கு இதைவிட அமர்க்களமாய் யார்தான் சூடு போட முடியும்?

இரவில் எனது விடுதி அறையில் புத்தகத்தைப் புரட்டியபோது மேலும் பல அதிர்ச்சிகள். முதலில் அது மாவட்ட மைய நூலகத்தின் முத்திரை பெற்றிருந்தது. பின் அதில் ஆயிஷா அடிக் கோடிட்டிருந்த முறை. ஆங்காங்கே காணப்பட்ட அடிக்குறிப்புகள். எல்லாமே அவளைக் குறித்த எனது எண்ணத்திற்கு மேலும் மேலும் ஆச்சரியக்

பேசிப் பேசிக் களைத்துப் பாடம் நடத்த வேண்டிய வகுப்பறையில் ஓய்வெடுப்பார்கள்.

ஆரம்பத்தில் இது எரிச்சலூட்டுவதாக இருந்தது. பிறகு மரத்துப்போனது.

இப்போது புதியவளாக இருந்தேன். அவர்களைப் பார்த்து எனக்கு அளவற்ற அருவருப்பு உண்டாகி இருந்தது. திடீரென்று மாணவியர் பக்கம் பேச்சுச் சென்றது. ரெஜினா ஒவ்வொரு பெண்ணாகக் கேலி செய்து கொண்டிருந்தாள். அவளது கொண்டை குலுங்க அவள் அதைச் செய்தாள். குதிரை மூஞ்சி, நரிவால், எலிவால் என்றெல்லாம் குழந்தைகளுக்குப் பெயர் வைத்திருந்தாள். அவளது அருவருப்பான வேடிக்கைகளை சரோஜினி ரசித்துக் கொண்டிருந்தாள்.

'ரெஜி...ரெஜிமா... கொன்னுட்டடி" என்ற ஆராதனைகள் வேறு.

பள்ளிக்கூடங்கள் பலிக்கூடங்கள் ஆகிவிட்டன. நானும் அவர்களது கூட்டத்தில் ஒருத் தியா? எல்லாமே முன் தயாரிக்கப்பட்டவை. ரெடிமேட் கேள்விகள். அவற்றிற்கு நோட்ஸ்களில் ரெடிமேட் பதில்கள். வகுப்பறையில் ஆசிரியர்கள் ஓய் வெடுக்கிறார்கள். வெறும் மனப்பாடம் செய்யும் இயந்திர மாய் 9 அதுவும் முக்கிய கேள்விகளுக்கு விடைகளை மட்டும்) மாணிவர்கள் உருமாற்றம் அடைந்துவிட்டனர்.

எல்லா மணவர்களுக்கும் எண்கள் தரப்பட்டுள்ளன. வகுப்பு, வரிசை எண், தேர்வு எண், பெறும் மதிப்பெண்கள், எங்கும் எண்கள் என எண்களே பள்ளிகளை ஆள்கின்றன. எல்லா ஆசிரியைகளுமே மாணவர்களின் அறிவை அவமானப்படுத்துகி றார்கள் என்பதைக் கண்டேன். அவர்களில் ஒருத்தியா நான்? என் மீதே எனக்கு வெறுப்பு உண்டாயிற்று. ஒரு பெண் ஒரேயொரு கேள்வியால் என்னை எப்படி யோசிக்க வைத்துவிட்டாள்?

"ஒரு கேஸ் இன்னிக்குப் பிடிபட்டுது... கேட்டியோ" என்று அங்கலாய்த்தபடி என்னிடம் வந்தாள் சுகுணா மிஸ். மேல் நிலைக்குக் கணக்கு நடத்துபவள். விடுதிக் காப்பாள யுவதிகளில் ஒருத்தி. எந்த உற்சாகமுமின்றி "என்ன" என்றேன்.

"விநோதமான கேஸ்... லெவன்த் வீட்டுக் கணக்கு திருத்திக் கிட்டிருந்தப்போ கஷ்டப்பட்டுப் பிடிச்சேன். பாதிப்பேர் நோட்ல ஒரே கையெழுத்து.- அதுவும் ஒரு லொஜிக்சம். முதல்ல கொப்பினு நெனைச்சேன். அப்புறம் ஒருத்தியப் பிடிச்சு செமத்தியாக் குடுத்தேன். உண்மையைக் கொட்டிட்டா..."

"கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்ந்தேன். அவள் என்னைக் காத்திருக்க வைத்தாள். நான் திடுக்கிட வேண்டுமென விரும்புபவள் போலிருந்தாள். "ம்... சொல்லு..." என்றேன்.

'நம்பமாட்ட ஒரு ரென்த் ஸ்டாண்டர்ட் படிக்கிற பெண் லெவன்துக்கு வீட்டுக் கணக்குப் போட்டுத் தந்திருக்கு.."

"ரென்த்தா..?" எழுந்து நின்றிருந்தேன்.




# ஆயிஷா

## ஒரு விஞ்ஞான நூலுக்கு அதன் ஆசிரியை எழுதிய முன்னுரை

மிஸ்"

"ஆமா அதுக்கென்ன?" என்றேன்.

"என் சந்தேகமே அங்கதான் இருக்கு. எல்லா காந்தங்களின் கவர்திறன் ஒன்றெனக் கொண்டால் அவை ஒட்டிக் கொள்ளத்தான் வாய்ப்பே இல்லையே... உட்புறமும் நகராமல் அப்படியேதானே இருக்கும்?"

"......"

"ஏன் நாம இந்தப் பிரபஞ்சம் முடிவுறா எண்ணிக்கையிலான காந்தங்களை நேர்கோட்டில் வைத்ததுபோல் அமைக்கப்பட்டதா வைச்சிக்கக்கூடாது? அந்தக் கோணத்தில் பூமிங்கற காந்தத்தை ஆரயலாம் இல்லையா?"

பதின்மூன்று வருடப் பள்ளி வாழ்க்கை பின் மூன்றாண்டு இயற்பியல் - பல்கலைக் கழகத்தில் இப்படியொரு கேள்வியை நான் கேட்டுக்கொண்டதாக நினைவில்லை. "எங்கோ படித்ததாக ஞாபகம்" என்றேன். ஏதாவது சொல்ல வேண்டுமே!

'The Truth of Magnets வெட்ரோட் ஸ்டூடண்ட் கிங்லீங் எழுதியது.... அருமையா இருக்கு... படிக்கிறீங்களா மிஸ்.."

இந்தப் புத்தகமெல்லாம் நீ படிக்கிறாயா? அவ்வளவுதான் - என் ஆயிஷா கிடைத்துவிட்டாள். அந்த அதிர்ச்சியில் இருந்து இன்றுவரை மீள முடியவில்லை. அறை வாங்கியவளைப்போல புத்தகத்தை வாங்கிக் கொண்டு சரசரவென ஆசிரியர் அறைக்கு நடந்தேன்.


இப்போதும் சொல்கிறேன் அந்த இடத்திலே ஆயிஷா என்னை முழுதாக வென்றுவிட்டாள். எப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்திலும் அதன்பின் அவளை

குறிகளைக் கூட்டிக் கொண்டே இருந்தன. ஆயிஷா ஒரு குழந்தை இல்லை. அவள் யாரோ ஒரு மனுஷிகூட இல்லை. வேறு ஏதோ ஒரு பிறவி. கடவுளே... நான் ஒரு நிமிடம் கூடத் தூங்கவில்லை.

விடுதியில் காலை வேளையில் அவள் வகுப்புப் பெண்களை அழைத்துப் பேசத் துடித்தேன். அவளைப் பற்றி அறிய வேண்டும். அத்தனை நாட்கள் அவளை அறியாது போனது ஒரு குற்ற உணர்வை ஏற்படுத்தியிருந்தது. புத்தகமோ என் அறையே கனத்துப்போகும்படி என்னைத் திடுக்கிட வைத்துக் கொண்டிருந்தது. வேலைகள் ஓடவில்லை. இத்தனைக்கும் எல்லாவற்றையும் படிக்கவில்லை. அப்பெண் அடிக்கோடிட்டிருந்த வரிகளையும் அவளது அடிக் குறிப்புகளையுமே படித்து விழி பிதுங்கிப் போயிருந்தேன்.

முதல்பாட வேளையில் வகுப்பேதும் இன்றி ஆசிரியர் ஓய்வறையில் அமர்ந்திருந்தேன். கையில் புத்தகம். ஓய்வறையில் ஆசிரியைகள் புதிய புடைவை டிசைன்களைப் பற்றி நீண்ட விவாதத்தில் ஈடுபட்டிருந்தார்கள். சரோஜினிக்கும், றெஜினா மிஸ்ஸ"க்கும் இதேதான் வேலை. இல்லையென்றால் நடிகைகளின் வித்தியாசங்கள், ஒருநாள் புருவம், மறுநாள் மச்சம் இப்படிப்

"இரவில் எனது விடுதி அறையில் புத்தகத்தைப் புரட்டியபோது மேலும் பல அதிர்ச்சிகள். முதலில் அது மாவட்ட மைய நூலகத்தின் முத்திரை பெற்றிருந்தது. பின் அதில் ஆயிஷா அடிக் கோடிட்டிருந்த முறை. ஆங்காங்கே காணப்பட்ட அடிக்குறிப்புகள். எல்லாமே அவளைக் குறித்த எனது எண்ணத்திற்கு மேலும் மேலும் ஆச்சரியக் குறிகளைக் கூட்டிக் கொண்டே இருந்தன."



# ஒரு நதியின் மரணம்!

பிரேசில் நாட்டில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு வாலே என்ற தனியார் இரும்புத் தாது சுரங்க நிறுவனத்துக்குச் சொந்தமான அணை உடைந்தது. இந்த அணையில் 12 மில்லியன் கன மீற்றர் சுரங்கக் கழிவுநீர் தேக்கி வைக்கப்பட்டிருந்தது. தற்போது இந்த அணை உடைந்துள்ள நிலையில் அப்பகுதியைச் சுற்றியிருந்த பதாதேஷா பூர்வகுடிகளின் கிராமங்கள், அவர்களுடைய வாழ்வாதாரமாக விளங்கிய பராவ்பேப் (Paraopeba) நதி மாசடைந்துள்ளது. பிரேசிலின் பெரிய நகரங்களில் ஒன்றான ப்ருமாஜீனோவில் (Brumadinho) வாலே நிறுவனத்துக்குச் சொந்தமான இரும்புத் தாது சுரங்கம் நிறுவனம் கடந்த 1942 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனம் அந்நாட்டின் மிகப் பெரிய சுரங்க நிறுவனங்களில் ஒன்று. இந்தச் சுரங்கத்திலிருந்து வெளியேறும் இரசாயனம் கலந்த கழிவுநீரைச் சேமித்து வைக்க அந்நிறுவனம் 1976-ம் ஆண்டு மணல் அணை ஒன்றைக் கட்டியது. இந்த அணைதான் தற்போது உடைந்துள்ளது. இதனால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் 150-க்கும் மேற்பட்டவர்கள் இறந்தனர்.



200-க்கும் மேற்பட்டவர்களைத் தேடும் பணி நடைபெற்று வருகிறது. பிரேசில் வரலாற்றிலேயே மிக மோசமான உயிரிழப்பையும் சுற்றுச்சூழல் பாதிப்பையும் இந்த அணை ஏற்படுத்தியுள்ளது. இந்த அணை ஏன் திடீரென உடைந்தது என்பதற்கான காரணங்கள் இன்னும் விசாரிக்கப்பட்டு வருகின்றன! இது தொடர்பாக வாலே நிறுவனம் சார்பாக யாரும் கைது செய்யப்படவில்லை.

இந்த இரசாயனக் கழிவுநீர் அங்கிருந்த பராவ்பேப் நதியில் கலந்து அந்நாட்டின் பதாதேஷா (Patax) பூர்வகுடிகளின் வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. ஐந்நூற்றுப் பத்து கிலோ மீட்டர் நீளம் கொண்ட இந்த நதி அந்நாட்டின் ஜீவநதிகளில் ஒன்று. இரசாயனக் கழிவு நீரில் அடித்துவரப்பட்ட சேறு, குப்பை கூளம், இரசாயனங்கள் ஆகியவை நதியின் தன்மையை மாற்றியுள்ளன.

பிரேசில் நாட்டின் மக்கள்தொகையில் எட்டு லட்சத்துக்கும் மேற்பட்ட பூர்வகுடிகள் வாழ்ந்து வருகிறார்கள். அந்நாட்டின் நிலப்பரப்பில் 13.8 சதவீதம் இவர்களது வாழ்நிலமாக உள்ளது. ஆனால், தற்போது புதியதாகப் பதவியேற்றுள்ள சயீர் பொல்சனாரூ தலைமையிலான அரசு அம்மக்களுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடுவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. அதேபோல் அந்நாட்டில் உள்ள பெரும்பாலான இரும்புத் தாது சுரங்கங்கள் பூர்வகுடிகளின் பகுதிகளில்தான் நிறுவப்பட்டுள்ளன. இதனால் தொடர்ந்து பூர்வகுடிகளின் வாழ்விடம் பாதிக்கப்படுகிறது. தங்களுக்கான புதிய வசிப்பிடம் அமைத்துத் தரக்கோரி அவர்கள் அரசிடம் வலியுறுத்தி வருகின்றனர். ஆனால், அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படாமல் உள்ளது.

இந்த உடைபட்ட அணை போல் அந்நாட்டில் சுரங்கக் கழிவுநீரைச் சேமிக்க இன்னும் 88 அணைகள் உள்ளன. இவை அனைத்தும் தனியார் நிறுவனங்களுக்குச் சொந்தமானவை. அவற்றில் இருபதுக்கும் மேற்பட்ட அணைகள் மிக மோசமான நிலையில் உள்ளன.

# வேண்டாமே உறிஞ்சுகுழல்



2050 இற்குள் நெகிழி உறிஞ்சுகுழல்கள் பயன்பாட்டை நாம் நிறுத்தாவிட்டால் "கடலுக்குள் மீன்களைவிட உறிஞ்சு குழல்களே அதிகமாக இருக்கும்" என்று ஒரு கணக்கீடு சொல்கிறது.

கோடை காலம் தொடங்கிவிட்டது. இளநீரும் பழரசங்களும் அதிகம் பருக வேண்டிய காலம் இது. இந்த முறை நீங்கள் பானங்களை அருந்தும் முறையில் சிறு மாற்றத்தை நிகழ்த்திப் பார்க்கலாமே. இனிமேல் இயற்கையான குளிர்பானங்களைச் செயற்கையான உறிஞ்சு குழலைக்கொண்டு தொண்டையைக் குளிர்வித்துக்கொள்ள வேண்டாம். அந்தக் குழல் இல்லாமலே இளநீரை ருசிக்கலாம்.

ஒருமுறை மட்டுமே பயன்படுத்தித் தூக்கி எறியப்பட்ட நெகிழி உறிஞ்சுகுழல்கள் வாய்க்கால்களையும், ஆறுகளையும் கடல்களையும் மாசுபடுத்தி வந்தது. இனி, அதற்கு இடமில்லை! மக்காத உறிஞ்சுகுழல்களா, மாசற்ற உயிர்ச்சூழலா? என்ற கேள்விக்கான பதில் நம் அனைவருக்குமே தெரியும் இல்லையா?

உலகம் முழுதும் உறிஞ்சுகுழல்களைத் தவிர்க்க வேண்டும் என்ற முழக்கம் பரவி வருகிறது. உலகத்தில் உள்ள மனிதர்கள் மொத்தம் 760 கோடி. வருடந்தோறும் ஒவ்வொரு மனிதரும் சராசரியாக 30 கிலோ நெகிழிக் குப்பையை உருவாக்குகிறார். இதில் உறிஞ்சுகுழல்களின் எடை மிக மிகச் சிறிதே. ஆனாலும், மாற்றத்தை நாம் அதிலிருந்துதான் ஆரம்பிக்க வேண்டும். ஒரு உறிஞ்சுகுழலில் தொடங்கும் மாற்றம் நம்மை ஒரு நெகிழியில்லா உலகத்தை நோக்கி நகர்த்தும்.

எனவே, இனிமேல் தலையைத் தூக்கி இளநீர் குடிப்போம், கண்ணாடிக் குவளைகளில் பழரசங்களைக் குடிப்போம். உடல் உபாதை அல்லது வேறு காரணத்துக்காக உறிஞ்சுகுழலின் தேவை இருக்கும் பட்சத்தில், காகித உறிஞ்சுகுழல்களைப் பயன்படுத்துவோம். காகித உறிஞ்சு குழல்கள் கடைகளில் கிடைக்கின்றன. நாம் வாங்கத் தயார் என்றால் உலோகம், மூங்கில் போன்ற பல முறை பயன்படுத்தக்கூடிய உறிஞ்சுகுழல்கள் இணையதளங்களில் கிடைக்கின்றன.

உங்கள் மேல் உள்ள கரிசனத்தில் கடைக்காரர் நெகிழி உறிஞ்சுகுழலைக் கொடுத்தால், பூமியின் மீது உள்ள கரிசனத்தால் அதை நீங்கள் மறுத்து விடுங்கள். வேண்டாம் என்று சொல்வதற்கு வெட்கப்படவோ ஐயப்படவோ தேவையில்லை.

# ஜெருசலேம் யாத்திரை...!

## பயண அனுபவம் -8

# ஆவணப்படுத்லுக்கு யூதர்கள் உதாரணம்

-ஏ.ஜே.ஞானேந்திரன்-



யூதப் படுகொலைகளை சித்தரிக்கும் ஓவியம்.

நாம் அருங்காட்சியகத்திற்குள் நுழைந்ததும் “பெயர்களின் கூடம்” (Hall of Names) எம்மை வரவேற்கிறது. இங்கே வரிசையாகக் காண்பிக்கப்பட்ட தொகையான யூதர்களின் புகைப் படங்களைப் பார்த்தோம். பாதிக்கப்பட்ட யூதர்களின் உறவினர்கள் கொடுத்த தகவல்கள், புகைப்படங்கள் அடிப்படையில் இங்கே இவர்களின் பெயர்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. இங்கு எவருமே தாமறிந்து பாதிக்கப்பட்ட ஒருவரது பெயரை தகுந்த ஆதாரங்களுடன் சமர்ப்பிக்க முடியும்.

இதுவைரையில் 30 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்களின் பெயர்கள் இணைக் கப்பட்டுள்ளன என நாம் அறிந்து கொண்டோம் இங்கே அவர்களின் படங்களைப் பார்த்தபோது, நாஸிகள் கைகளில் அகப்பட்டு இவர்கள் எப்படி



யாட் வாஷத்திலுள்ள தேவாலயம்

எப்படியெல்லாம் சித்திரவதைப்பட்டிருப்பார்கள் என்ற எண்ணம் மனதுள் ஓடியது. இங்கு வாசித்தறிந்த தகவலின்படி புதிய பல தகவல்களை அறியக் கிடைத்தன. 1984க்கும் 1985க்கும் இடையில் 11 இலட்சம் பக்கங்களாலான வாக்குமூலங்கள் கொண்ட ஒரு “மைக்ரோபிலிமை” (குறும்படம்) இவர்கள் உருவாக் கினார்கள். இந்த வழியில் பாதிக்கப்பட்டவர்களின் பெயர்களை சுலபமாகவும் வேகமாகவும் தேட முடிந்திருக்கின்றது.

எண்பதுகளில் ஆண்டுக்கு சராசரி 15,000 புதியவர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன. “இரும்புத் திரை” நீக்கப்பட்டு, மேற்கிலிருந்து முன்னாள் சோவியத் ஒன்றியம் பிரிக்கப்பட்ட பின்னர், வாக்குமூலப் பக்கங்கள் மடை திறந்தவெள்ளம்போல அதிகரிக்க ஆரம்பித்திருக்கின்றன. ஆண்டுக்கு 35,000 புதிய பெயர்களை சேகரிக்கும் அளவு, இவர்கள் பணி இந்தக் காலகட்டத்தில் தீவிரமடைந்தது. அடுத்த ஆண்டு இங்கு செல்பவருக்கு நிச்சயம் புதுப் புதுத் தகவல்கள் சேர்க்கப்பட்டிருப்பதைக் காணமுடியும் என்று நான் திடமாக நம்புகிறேன்.

**கலைகளின் சங்கமம்**

கலைக்காட்சியகம் (Art Museum) என்பது யாட் வாஷத்தின் இன்னொரு முக்கிய பிரிவு. இங்குள்ள ஓவியங்கள் யாவும் 'படுகொலை' நிகழ்ந்த சமயத்தில் பல யூதர்களால் வரையப்பட்டவை படுகொலையில் தப்பிக்காத பலரின் படங்களும் இருக்கின்றன. இங்குள்ள காட்சிக் கூடத்தில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கலைப்பொருள்கள் இருந்தாலும் எல்லாமே படுகொலையோடு சம்பந்தப்பட்டவைதான். அடுத்து வரும் கற்கை நிலையத்திலும் இதேபோன்ற விடயங்கள் நிறைய இருக்கின்றன.

இந்தப் படுகொலைகளின் விபரங்களை துல்லியமாக அறிய விரும்புவோர், இங்கு கணினிகள் மூலம் அறிந்து கொள்ளலாம். காதில் மாட்டிக்கொள்ளும் “இயர் போன்ஸ்” மூலமும் விடை தெரிந்துகொள்ளலாம். Visual Center என்றொரு பகுதியும் இருக்கின்றது யூதப் படுகொலை பற்றிய எல்லா ஆவணப் படங்களும் இருக்கின்றன. இந்த அருங்காட் சியகத்தின் சார்பில் பல இணைய வகுப்புகள் நடத்துகிறார்கள். உலகின் எந்தப் பகுதியில் இருப்பவர்களும் இதில் சேரலாம். யூதர்களின் சரித்திரத்தையும் ஜேர்மானியப் படுகொலை பற்றியும் எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டும் என்பதுதான் இதன் நோக்கம்.

நமது மண்ணிலும், நமது உறவுகள் பலர் இப்படித்தான் படுகொலை செய்யப்பட்டார்கள். இந்த யூதர்களுக்கு இழைத்த அநீதி போலத்தான், நம்மவர்களுக்கும் நம் மண்ணில் இழைக்கப்பட்டன. இதற்கான ஆவணங்கள், படங்கள் என்று சான்றுகளும் ஏராளமாக இருக்கின்றன. மறப்போம் மன்னிப்போம் என்று அரசு பிதற்றுகின்றது. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்ற பட்டியலில் எல்லாமே மூடி மறைக்கப்பட்டிருக்கின்றன. நியாயம் பிறக்காதா என்ற ஏக்கம் காலங்காலமாகத் தொடர்கின்றது.

**யூதர்களின் தேவாலயம்**

இந்த அருங்காட்சியத்தில் சினாகொக் (Synagogue ) என்று அழைக்கப்படும் யூதர்களின் தேவாலயமும் கூட்டுப் பிரார்த்தனைக்காக கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இங்குள்ள யூத கோவிலில் ஐரோப்பாவின் பல இடங்களில் அழிக்கப்பட்ட யூத கோவில்களிலிருந்து கொண்டுவரப்பட்ட பல வகையான பொருட்கள் இருக்கின்றன இழந்து விட்ட தமது அன்பு உறவுகளை நினைத்து இங்கு எவரும் பிரார்த்திக்கலாம்.

ஆங்கிலத்தில் சினாகொக் என்று அழைக்கப்படும் இவ்ர்களது தேவாலயம், ஹிப்ரூ மொழியில் beit `Knesset. (சமுதாயக் கூட்டம் என்பது இதன் பொருள்) என்றும் பழைமைவாத யூதர்களால் யிடிஷ் (Yiddish) மொழியில் Shul என்றும் அழைக்கப்படுகின்றது.

பொதுவாக யூதர்கள் தமது தேவாலயங்களை பிரார்த்தனைகளுக்கு மட்டுமல்ல, சமூகக் கூட்டங்கள் நடத்துவதற்கும். பிற சமூகப் பணிகள் செய்வதற்கும் பயன்படுத்துகின்றனர்.

தேவாலயத்தினுள் இருக்கும்போது, ஆணோ, பெண்ணோ தலையில் துணியோ தொப்பியோ அணிந்திருப்பர். ஆண்கள் அணியும் தொப்பி சிறிய வட்டவடிவிலான குல்லா போன்றிருக்கும். (முன்பே குறிப்பிட்டிருந்த அழும் சுவர் அருகே சென்ற சமயம் நாமும் வெள்ளை நிறத்திலான இந்தக் குல்லாவை அணிந்துகொண்டே சென்றோம்) இதற்கு இவர்கள் மொழியில் வைத்திருக்கும் பெயர் என்ன தெரியுமா? Yarmulke !.

பொதுவாக யூத தேவாலயங்களில் ஆண்கள், பெண்கள் சேர்ந்து உட்கார அனுமதியுண்டு. ஒவ்வொரு தேவாலயத்திலும் அலங்கார வேலைப்பாடுகளுடன் கூடிய ஆர்க்(Ark) ஒன்று இருக்கும். இந்து மதக் கோவில்களின் கருவறை என்று சொல்வார்களே. அது இதுதான். அங்குள்ள அழகான அலமாரியில் முன்பு இந்தக் கட்டுரையில் முன்பே குறிப்பிட்டிருந்த ரோறா (Torah) என்று அழைக்கப்படும் யூதர்களின் வேதநூல் வைக்கப்பட்டிருக்கும்.

**(பயணிப்போம்)**



சரித்திரக் காட்சிய சிற்பம்

# இந்த வார இராசி பலன்

## மார்ச் 24 முதல் மார்ச் 31 வரை

### மேஷம்:

செவ்வாய் ஆட்சியாக இருப்பதால் செல்வாக்கு உயரும். அரசியலில் இருப்பவர்களுக்கு அனுகூலமான நேரம். உங்கள் முயற்சிகள் வெற்றியடையும். சுக்கிரன் 10 இல் இருப்பதால் தொழில், வியாபாரம் சீராக இருக்கும். பங்குதாரர்களிடையே இருந்த பிரச்சினைகள் தீரும். சுய தொழிலில் இலாபம் அதிகரிக்கும். உயர்பதவியில் இருக்கும் நண்பர் உதவுவார். வாரக்கடைசியில் அவசர பயணங்கள் இருக்கும். தந்தையாரின் உடல்நலம் பாதிக்கப்படலாம்.

### ரிஷபம்:

சுக்கிரன் உங்களுக்கு சுபயோகத்தைத் தருவார். இல்லறம் இனிக்கும். பிள்ளைகள் உங்களைப் புரிந்துகொண்டு நடப்பார்கள். அடைவில் இருக்கும் நகைகளை மீட்பீர்கள். செவ்வாய் 12 இல் பலமாக இருப்பதால் இழுபறியாக இருந்த விடயங்கள் முடிவுக்கு வரும். சொத்து சம்பந்தமாக உங்களுக்கு சாதகமான நிலை ஏற்படும். வீண் வம்பு வழக்குகளில் சிக்கியிருந்தவர்கள் விடுதலை அடைவார்கள். நண்பர்களிடம் இருந்து சற்று விலகி இருப்பது நலம் தரும்.

### மிதுனம்:

ராகு, கேது இருவரும் உங்களுக்கு மனக்குழப்பத்தையும், வீண் செலவுகளையும் தருவார்கள். குருவின் பார்வை காரணமாக பிரச்சினைகளை சமாளித்து விடுவீர்கள். மகனின் திருமண விடயமாக உறவினர் மூலம் மகிழ்ச்சியான செய்தி வரும். செவ்வாய் ஆட்சியாக இருப்பதால் மருத்துவ சிகிச்சையில் இருப்பவர்கள் குணமடைவார்கள். கொடுக்கல், வாங்கலில் நின்றுபோன தொகை வசூலாகும். சுக்கிரனின் பார்வை காரணமாக பொன், பொருள் சேரும். எதிர்பார்த்த பெரிய நிறுவனத்தில் இருந்து வேலைக்கான அழைப்பு வரும்.

### கடகம்

ராசிநாதன் சந்திரன் சாதகமாக இருப்பதால் தெளிவாக முடிவெடுப்பீர்கள். தாயிடம் இருந்து உதவிகள் கிடைக்கும். ஆன்மிக சுற்றுலாப் பயணம் செல்வதற்கான வாய்ப்பு தேடி வரும். சுக்கிரன் சுபயோகத்தைத் தருவார். கன்னிப்பெண்கள் விரும்பிய இரு சக்கர வாகனங்கள் வாங்கி மகிழ்வீர்கள். கண் பார்வை குறைபாடு காரணமாக கண்ணாடி அணிய வேண்டி இருக்கும். வீடு கட்ட எதிர்பார்த்த அரசு அனுமதி கிடைக்கும்.

தொழில் லாபகரமாக நடக்கும். புதிய வியாபார வாய்ப்புக்கள் கிடைக்கும்.

### சிம்மம்

5 இல் சனி, கேது, குரு மூவரும் கூட்டு சேர்ந்து அமர்ந்துள்ளதால் சிந்தனைகள் அதிகரிக்கும். அடிக்கடி முடிவுகளை மாற்றிக்கொள்வீர்கள். சுப விடயமாக பயணங்கள், சந்திப்புக்கள், சந்தோஷங்கள் உண்டு. பிரசித்தி பெற்ற திருத்தலங்களுக்குச் சென்று தரிசிப்பீர்கள். சூரியனின் பார்வை காரணமாக செல்வாக்கு உயரும். சொன்ன வாக்கைக் காப்பாற்றுவீர்கள். அரசாங்க விஷயங்கள் அனுகூலமாக முடியும். இலாப ஸ்தான ராகு உங்களுக்கு வெற்றிகளைத் தருவார்.

### கன்னி

புதன் வக்கிரமாக இருப்பதால் இந்த வாரத்தில் புதிய ஒப்பந்தங்கள், பேச்சுகளை தவிர்க்கவும். சுக்கிரன் உங்களுக்கு பொன், பொருளைத் தருவார். பெண்களுக்கு தாய் வீட்டில் இருந்து உதவிகள் கிடைக்கும். பழைய வாகனத்தை மாற்றி புது வண்டி வாங்குவீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை இருக்கும். புதிய பொறுப்புக்களை கவனிக்க வேண்டி வரும். கல்வி வகையில் செலவுகள் உண்டாகும். கர்ப்பமாக இருப்பவர்கள் உரிய கவனத்துடன் இருப்பது அவசியம். தொழில் இலாபகரமாக நடக்கும். அகலக்கால் வைக்க வேண்டாம்.

### துலாம்

இராசிநாதன் சுக்கிரன் சுகஸ்தானத்தில் இருப்பதால் குடும்பத்தில் மகிழ்ச்சி, கணவன் மனைவிக்கிடையே நெருக்கம் கூடும். சொந்த பந்தங்களிடையே இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். அவர்கள் விரும்பி வந்து நேசக்கரம் நீட்டுவார்கள். வெளியூரில் வேலை செய்து கொண்டிருந்தவர்களுக்கு சொந்த ஊருக்கு மாற்றல் கிடைக்கும். புதன் 5இல் இருப்பதால் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெறுவீர்கள். பதவி உயர்வை எதிர்பார்த்தவர்களுக்கு இனிக்கும் செய்தி உண்டு.

### விருச்சிகம்

இராசிநாதன் செவ்வாய் ஆட்சி பலத்துடன் இருப்பதால் தொட்டது துலங்கும். சொத்து சம்பந்தமாக இருந்து வந்த குழப்பங்கள், பிரச்னைகள் தீரும். அடமானத்தில் இருக்கும் தங்க நகைகளை மீட்பீர்கள். வாக்கு ஸ்தானத்தில் கேது இருப்பதால் பேச்சில் நிதானம், கவனம் தேவை. அரசியல், பொதுப்பிரச்னைகளைப் பற்றி பேச வேண்டாம். சூரியன் 5ல் குரு பார்வையுடன் இருப்பதால் வீட்டில் சுபவிசேஷங்கள் கூடிவரும். மகளின் திருமண விஷயமாக உறவினரிடம் இருந்து நல்ல தகவல் கிடைக்கும்.

### தனுசு

7இல் ராகு இருப்பதால் எதிலும் நிதானம், கவனம் தேவை. அடிக்கடி உணர்ச்சி வசப்படுவீர்கள். ஆகையால் பிறர் விஷயங்களில் தலையிடாமல் இருப்பது நலம் தரும். குருவின் பார்வை காரணமாக வெளிநாட்டில் வேலை அமையும் யோகம் உள்ளது. மகளுக்கு பெரிய இடத்து சம்பந்தம் தேடி வரும். விருப்ப ஓய்வு பெற நினைப்பவர்கள் யோசித்து முடிவு செய்யவும். சூரியன் சாதகமாக இருப்பதால் அரசாங்க விஷயங்கள் அனுகூலமாக முடியும். வழக்கில் உங்களுக்கு சாதகமான தீர்ப்பு வரும்.

### மகரம்

சுக்கிரன் ராசியில் இருப்பதால் உற்சாகமாகச் செயல்படுவீர்கள். பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். மாமனாரின் மூலம் மகிழ்ச்சி, ஆதாயம் கிடைக்கும். செவ்வாயின் பார்வை காரணமாக சொத்து வாங்கும் யோகம் உண்டு. மருத்துவச் செலவுகள் பெருமளவு குறையும். உத்தியோக வகையில் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். நிர்வாகம் உங்கள் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும். ராகு 6ல் இருப்பதால் தடைப்பட்ட சுபவிசேஷங்கள் எதிர்பாராத வகையில் கூடிவரும்.

### கும்பம்

புதன் ராசியில் இருப்பதால் நிறை, குறைகள் உண்டு. கலைத்துறையில் இருப்பவர்களுக்கு நல்ல வாய்ப்புக்கள் கிடைக்கும். கல்வி வகையில் அலைச்சல், செலவுகள் இருக்கும். சூரியன் 2 இல் இருப்பதால் நிதானமில்லாத மனநிலை இருக்கும். சொந்த பந்தங்களின் குடும்ப விஷயங்களில் தலையிட வேண்டாம். செவ்வாயின் பார்வை காரணமாக வீடு கட்டுவதற்கான அரசு அனுமதி கைக்கு வரும். உத்தியோகத்தில் விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். தொழில் லாபகரமாக நடக்கும். கூட்டுத்தொழில் செய்பவர்கள் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது.

### மீனம்

நிறை, குறைகள் உள்ள வாரம். சூரியன் ராசியில் இருப்பதால் படபடப்பு, கோபதாபங்கள் வந்துபோகும். ராகு 4 இல் இருப்பதால் அலைச்சல், பயணங்கள் இருக்கும். பெண்களுக்கு வயிறு, கர்ப்பப்பை போன்றவற்றில் உபாதைகள் வரலாம். செவ்வாய் உங்களுக்கு சுபயோகத்தைத் தருவார். கொடுக்கல், வாங்கலில் நின்றுபோன பெரிய தொகை கைக்கு வரும். கட்டிட வேலை, இரும்பு சம்பந்தமான வேலை, மின்சார வேலை செய்பவர்கள் உரிய கவனத்துடன் இருப்பது நலம் தரும்.




# இதுவும் ஒரு காத்திருப்பு

மு. துலாபரணி
ஊடகக் கற்கைகள்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

'வீட்டில் அப்பா பெரியவரா? அம்மா பெரியவரா?' என்று சின்ன பிள்ளைகளிடம் கேட்டால் கூட 'அப்பாதான் பெரியவர்' என்பார்கள். காரணம்? ஆண்களை முதன்மைப்படுத்தும் ஆணாதிக்க சமூகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எம்மைச் சுற்றியுள்ள குடும்பங்களில் ஆண்களே முழுப்பொறுப்பையும் ஏற்கின்றனர். இங்கு ஆண்களே குடும்பத்தை பராமரிப்பவர்களாகவும், முதன்மையானவர்களாகவும் காணப்படுகின்றனர். ஆனால் எமது நாட்டில் ஏற்பட்ட நீண்ட கால யுத்தத்தின் விளைவாக கடந்த வருடத்தில் மாத்திரம் யாழ்ப்பாண மாவட்டத்தில் 35 ஆயிரத்து 307 பெண் தலைமை குடும்பங்கள் இருக்கின்றன. இந்த எண்ணிக்கை வருடந்தோறும் அதிகரித்துச் செல்வதையே காணமுடிகிறது.

ஆணுக்கு நிகரான உரிமைகளை வென்றெடுக்க பெண்கள் சமுதாயம் போராடி வரும் இச்சமூகத்தில், ஆண்களின் பொறுப்பை ஏற்று நடக்கும் எத்தனையோ குடும்பங்கள் எம் மத்தியில் காணப்படுவதை நாம் கண்டு கொள்வதில்லை. பெண்களின் சாதனைகள், அவர்களின் பிரச்சினைகளை பேசும் நாம் பெண் தலைமைக் குடும்பங்களை மறந்து விடுகிறோம். இன்று போரால் கணவனை இழந்த பெண்கள், பெற்றோரை இழந்த பெண்கள், அங்கவீனமுற்ற பெற்றோர் அல்லது கணவனை கொண்ட குடும்ப பெண்கள், கணவனை அல்லது குடும்பத்தை பிரிந்து வாழும் பெண்கள் மற்றும் கணவன் வெளிநாடுகளில் உள்ள பெண்கள் எனப் பலரும் இத்தலைமைத்துவ குடும்பத்துக்குள் அடங்குவர்.

மேலைத்தேய நாடுகளில் பெண் தலைமை குடும்பங்களின் எண்ணிக்கை அதிகளவில் காணப்படுவதோடு அவர்களுக்கான பாதுகாப்பும், சலுகைகளும், அங்கீகாரமும் அங்கே வழங்கப்படுகின்றன. ஆரம்பத்தில் பெண்களுக்கான அங்கீகாரத்தை தட்டிக் கேட்டவர்களும் அவர்களே. ஆனால் எமது நாட்டில் யுத்த சூழலுக்கு பின்னரே பெண் தலைமை குடும்பங்கள் அதிகரித்திருப்பது அடையாளங் காணப்பட்டிருக்கின்றது.

அண்மையில் இவ்வாறான பெண் தலைமை குடும்பத் தலைவிகளை சந்தித்துப் பேசினோம்.

இரண்டு பிள்ளைகளுடன் கணவனை யுத்தத்தில் பறிகொடுத்து விட்டு தன்னுடைய பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக இன்று கூலித் தொழில் புரியும் தாய் ஒருவர் கூறுகிறார். 'மனித இறப்பு இயற்கையானது. அதனை யாரும் தடுத்தல் இயலாது. எனது கணவர் விடுதலைப் போராட்டத்திலேயே உயிர் துறந்தார்" எனக் கூறும் போதும் அவரின் கண்கள் ஈரலித்துக் கொண்டன. அப்பெண்ணின் வறுமையை அவர் குடியிருக்கும் வீட்டை பார்த்தாலே புரிந்து கொள்ளலாம். பலத்த காற்று வீசினால் நாணல் புல்லைப் போன்று தரையில் படுத்துவிடும் நான்கு தூண்களுக்குள் நசிபட்டுக் கிடக்கும் மண் சுவர்கள். பகலில் சமையல் அறையாகி இரவில் படுக்கையறையாகும் சிறிய இடம். சுவரில் ஒட்டி விட்டால் போல் வாசலில் ஒரு கதவு.

யுத்தத்துக்கு முன்பு தான் குடியிருந்த சொந்தக் காணியை பெறுவதற்குக்கூட பெரும் அவலப்பட்டதாக அப்பெண் கூறியிருந்தார். இது அவருக்கு மட்டும் ஏற்பட்ட பிரச்சினையாகக் கருதக் கூடாது. பலர் எதிர்கொள்ளும் பிரச்சினையும் இதுவே. சொந்தக் காணிகளை மீளப்பெறுவதற்கு இன்றும் எம்மவர் பலர் வீதியில் இறங்கிப் போராடி வருகின்றனர். யுத்தத்தில் இடம்பெயர்ந்து சென்ற மக்களில் ஒரு பகுதியினர் தங்களது பிரதேசத்தில் மீளக்குடியேற்றப்பட்டிருந்தாலும் அதற்குப் பின்னால் அவர்கள் பட்ட அவலங்களும் அதற்காக அவர்கள் நடத்திய போராட்டங்களும், தியாகங்களும் சொல்வதற்கு வார்த்தையற்றவை.

"ரீவியில சொல்லுற செய்தியப் பாத்தா பிள்ளையள வெளில அனுப்பவே பயமா இருக்குதும்மா. அத்தனை மோசமாவும், பயமாவும் இருக்குதம்மா." என அவர் கூறிய வார்த்தைகள் மறைந்த வித்தியாவையும், ரெஜினாவையும் ஒரு கணம் எம் கண்முன்னே நிறுத்தியது.

"இன்று சமூகத்தில் அதிகரித்து வரும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு தீர்வு என்பதே இல்லை. ஒருபுறம் பாரதி கண்ட புதுமைப் பெண்கள் பலர் உருவாகி வர மறுபுறம் வெளியில் செல்ல அச்சப்பட்டு வீட்டுக்குள்ளேயே பலர் முடங்கிக் கிடக்கின்றனர்" என எண்ணினேன். இவ்வாறு எண்ணியபடி திரும்பியபோது ஒரு சிறுமி என்னைப் பார்த்து சிரித்தபடியிருந்தாள். அவளின் தாயைப் பார்க்க அவரும் பல கஷ்டங்களை சுமப்பவர் போலத் தோன்றினார். அவரிடம் கதைக்க ஆரம்பித்தேன்.

சகஜமாக பேசிய அவர் திடீரென வீட்டுக்குள் சென்று கையில் புகைப்படம் ஒன்றுடன் திரும்பி வந்தார். கடந்த பத்து வருடமாக தன்னுடைய கணவர் உயிரோடு இருக்கிறாரா? இல்லையா? என்பது கூடத் தெரியாத நிலையில் வாழ்ந்து வரும் அவர் தனது மூன்று பிள்ளைகளுடன் தனித்து வாழ்ந்து வருவதாகவும் கூறிக் கண்ணீர் விட்டு அழுதார். தன்னுடைய கணவன் இருக்கும் போது தனக்கு எவ்வித கஷ்டமும் தெரியவில்லை. இன்று தனி மரமாக நின்று இந்தப் புரிதலற்ற சமூகத்தில் வாழ்ந்து பிள்ளைகளையும் வளர்த்து அவர்களை எவ்வாறு கரைசேர்க்கப் போகிறேனோ? என்று கதறிய அவரைத் தேற்ற என்னிடம் வார்த்தைகள் இருக்கவில்லை.

தங்களின் உறவுகள் எங்காவது உயிரோடு இருப்பார் என்ற நம்பிக்கையில் இத்தனை வருட காலமாக வாழ்ந்து வரும் அவர்களைப்போன்று போன்று பல குடும்பங்கள் கடவுளை பிரார்த்தித்த வண்ணம் இலவு காத்த கிளியைப் போல காத்திருக்கிறார்கள். காணாமல் ஆக்கப்பட்டோர் நிலையம் அமைக்கப்பட்டு எவ்வித முன்னேற்றமும் எட்டப்படாத நிலையில் மனித உரிமைக்கான மாநாடு ஜெனிவாவில் நடக்கிறது. இம்முறையாவது எமக்கு சாதகமான முடிவு கிட்டாதா! என மனம் அங்கலாய்த்தபடி அவர் பேசினார்.

பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களில் நான் சந்தித்த பெண்கள் பலரும் தங்கள் வயதுக்கு மீறிய, ஆற்றலுக்கு அப்பாற்பட்ட சுமையை தலையில் சுமந்த வண்ணம் பயணிக்கின்றனர். மலையகத்துப் பெண்கள் தங்களின் அவலங்களை கொழுந்துக் கூடையில் சுமப்பது போன்று இவர்கள் அனைவரும் தமது வாழ்வாதாரத்துக்கே போராட வேண்டியுள்ளது. இவர்கள் பொருளாதார ரீதியாக பல இன்னல்களை சந்திக்கின்றனர். கடன் களை பெற்றுக் கொள்வதற்காகப் பல நிதி நிறுவனங்களில் மாட்டிக் கொள்கின்றனர். பல அநியாய வட்டியை அறவிடும் நுண்கடன் திட்டங்களினால் பாதிக்கப்படுபவர்களும் இவர்களே.

இவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் கிட்டுவதில்லை என்பதால் தமது வறுமையைப் போக்கக் குறைந்த சம்பளத்துக்கு வேலைகளுக்குச் செல்ல வேண்டிய துர்பாக்கிய நிலை அவர்களுடையது. இவ்வாறு உழைக்கும் பெண்கள் பலர் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகின்றனர். இவ்வாறு தொடர் துன்பங்களை சந்திக்கும் பெண்கள் சிலர் விபரீத முடிவுகளை எடுக்கின்றனர் என்பதை அண்மைக்கால தற்கொலை அதிகரிப்பு காட்டுகிறது.

இலங்கையில் இத்தகைய இடர்களுக்கு மத்தியில் வாழும் பெண்களுக்கு அரசாங்கம் பல செயல் திட்டங்களையும், உதவிகளையும் அறிவித்திருந்தாலும் அவை முற்றாகத் தங்களை வந்தடைவதாக இல்லை பல இடர்களை கடந்து தங்களது வாழ்வை ஒரு சுமைஎனக் கருதாது பயணிக்கும் இவர்களின் வாழ்வில் விடிவு கிட்டுமா? என்பதை சிந்தித்தபடி நடந்து கொண்டிருந்தேன். சூரியன் மறைந்து ஒளி குறைந்து இருள் சூழ்ந்ததைக் கூட உணராதபடி அவர்கள் வாழ்வின் இருள் எனது கண்களை மறைத்துக் கொண்டது.

# சீனக் கடன் பொறியில் சிக்குகிறதா ஸ்ரீலங்கா?

**லம்போதரன்**



இன்று எம்மைச் சுற்றி நடந்த, நடக்கின்ற நடக்கவிருக்கும் செயல்கள் பற்றி அறிவதற்கான அளவுகோலாக சமூகவலைத்தளங்கள் அமைந்து காணப்படுகின்றன. அவற்றுள் முகநூல் போன்ற தனியாரால் செயற்படுத்தப்படும் வலைத்தளங்களால் எவ்வளவுக்கு எவ்வளவு தீமை உண்டோ அவ்வள வுக்கு அவ்வளவு நன்மைகளும் உண்டென்பதை மறுக்க முடியாது. அவற்றில் சில நிகழ்வுகள் பற்றிய பதிவுகளும், கருத்துக்களும் தன்னிச் சையாக இடப்பட்டாலும் அவற்றிற்குப் பின்னால் ஒரு பின்புலம் அல்லது அரசியல் இருப்பதைக் காணலாம். உடன் தென்படாவிட்டாலும் காலப் போக்கில் கண்டறியக் கூடியதாக இருக்கிறது.

அவ்வழியே கடந்த சில நாட்களாக சீனக் கடனுதவிகள் பற்றியும் அவ்வகைக் கடன்களால் மூன்றாந்தர நாடுகளைச் சீனா தனது இராஜதந்திரப் பொறிக்குள் எப்படிச் சிக்க வைக்கிறது எனவும் பல பதிவுகள் நேரடியாகவும், கருத்தியல் ரீதியாகவும், அனிமேசன் காட்சிகளாகவும், விவரணப்படங்களாகவும் பதிவிடப்பட்டு அவை இணையத்தளங்களில் வலம் வந்து கொண்டிருக்கின்றன. பலரால் ஆர்வத்துடன் பகிரப்பட்டும் வருகின்றது. பொதுவான பதிவுகளோடு இலங்கைக்குச் சீனா கொடுத்திருக்கும் கடன் பற்றியே எம்மவர்கள் பேசுகிறார்கள். எமது தேசத்தையும் தனது அதிகாரப் பொறிக்குள்

சிக்கவைப்பதுவும் சீனாவின் நோக்கமெனச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே 1500 ஏக்கர் நிலம் மற்றும் கடற் பரப்புகளைத் சீன தேசத்திற்குத் தாரை வார்த்துவிட்டோம். அத்துடன் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பழைய பார்லிமென்ட் கட்டடத்துக்கு முன்பாக எத்தனையோ கடற்பரப்பை உள்ளடக்கிய தேசத்தை நாட்டின் பிற பகுதியில் அழிக்கப்பட்டு எடுக்கப்படும் மண்ணும் கல்லும் கொண்டு நிரப்பி துறைமுக நகரமொன்றைக் கட்டி எழுப்ப அனுமதியும் வழங்கிவிட்டோம்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் எடுத்த கையோடு அந்தத் திட்டம் இடை நிறுத்தப்பட்டது. காரணம் சரியான ஆவணங்கள் தயாரிக்கப்படாமலும், உரிய உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படாமலும்

அத்திட்டத்தை நிறைவேற்ற ராஜபக்ஷ குடும்பம் சீனாவுக்கு அனுமதி வழங்கியுள்ளது என்று சொல்லப்பட்டது. பின்பு பல சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டு மீண்டும் அனுமதி வழங்கப்பட்டது.

இதேபோல காலிமுகத்திடல் கடற்கரையில் முன்பு இராணுவ தலைமையகம் இருந்த இடத்தை சீன முதலீட்டாளர் ஒருவருக்கு உல்லாச விடுதியுடன் கூடிய மாபெரும் கடைத்தொகுதி மற்றும் சகல சம்பத்தும் நிறைந்த கட்டடத் தொகுதி ஒன்றை நிர்மாணிக்க விற்கப்பட்டது. சீனாவுக்குக் கொடுத்த இடத்தில் தனக்கும் இடம் வேண்டுமென்ற இந்தியாவின் ஆசையை நிறைவேற்ற இந்திய புகையிலை கம்பனிக்கும் உல்லாச விடுதி அடங்கிய மாபெரும் கட்டடத்தொகுதி ஒன்றைக் கட்ட நிலம் விற்க்கப்பட்டது.

இராணுவ தலைமையக இடம் இரண்டாகப் பங்குபோடப்பட்டு இந்தியாவுக்கும் சீனாவுக்கும் தாரை வார்க்கப்பட்டன. இரண்டு திட்டங்களும் அந்தந்த நாட்டின் ஆசீர்வதத்தோடு நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. கொழும்பு துறைமுக நகரத்துக்குரிய கட்டுமானப் பணிகளில் அதிகம் சீனர்களே பணிபுரிகிறார்கள். அது மாத்திரமல்ல சீன முதலீட்டாளர்களால் வாங்கப்பட்ட நிலங்களில் நிர்மாணப் பணிகளைச் செய்வதற்குச் சீனப் பணியாளர்களே இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றனர். இதேபோல அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணப் பணிகளுக்காக சீனாவில் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளையே அதிகம் கொண்டு வந்திருந்தனர் என்ற பேச்சும் மக்களிடையே இருந்தது.

1970 களில் சீனாவுடனான உறவுகளை ஸ்ரீமாவோ அரசு பலப்படுத்தத் தொடங்கியிருந்தாலும் அப்போது இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் அமைந்துள்ள நாடுகளின்மீது இந்தியாவின் ஆதிக்கம் அதிகரித்திருந்ததனாலும் இரும்புப் பெண் என அழைக்கப்பட்ட இந்திராகாந்தியின் இராஜ தந்திரத்துக்கு முன்னால் ஸ்ரீமாவோ அரசினால் அதிக ஆழமான உறவைச் சீனாவோடு ஏற்படுத்த முடியவில்லை.

இந்திராகாந்தியின் மறைவுக்குப் பின்னர் இந்திய காங்கிரஸ் ஆட்சியாளர்கள் முன்னெடுத்த தவறான இராஜதந்திர நகர்வுகளால் இலங்கைக்கு முன்பாகத் தனது சுயத்தை இந்தியா இழந்து போய்விட்டது. இதற்கு இலங்கை விவகாரத்தைக் கையாளவென நியமிக்கப்பட்ட இந்திய இராஜதந்திரிகள் இலங்கை அரசிடம் விலைபோயிருந்ததே முக்கிய காரணம். அவர்களால் கொடுக்கப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம் திசைதிருப்பப்பட்ட இந்திய அரசு கொள்கைகளையும் மாற்ற வேண்டி இருந்தது. இந்திய அரசின் பலவீனமான நகர்வுகளே சீன அரசு இலங்கையில் வலு வேகமாகக் காலூன்றக் காரணமானது.

பொருள் மீது ஆசை கொண்ட ஒரு குடும்பம் இலங்கை அரசபீடத்தை எட்டிப்பிடிக்க நாங்களும் ஒரு விதத்தில் காரணமாக இருந்திருக்கிறோம். அவர்கள் ஆட்சிக்கு வந்ததுமே புலிகள் – போர் என்பதைக் காட்டிக் காட்டித் தமது குடும்பப் பொருள் பலத்தை அதிகரித்துக் கொண்டனர்.

இலங்கையில் மட்டுமல்ல சர்வதேசம் முழுவதிலும் அவர்களின் முதலீடுகள் அதிகரிக்கத் தொடங்கின. அவர்கள் ஆட்சி பீடத்தில் ஏறிய நாட்களில் இலங்கையில் லாபத்தோடு காணப்பட்ட எல்லா அரச நிறுவனங்களிலும், சில தனியார் நிறுவனங்களிலும் அவர்களின் கைகள்படத் தொடங்கின. இன்று நாட்டில் லாபகரமாக இயங்கிவரும் பல தனியார் நிறுவனங்களில் அவர்களின் முதலீடுகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் – பினாமிகள் மூலமும் உள்ளன. இதனால் பல கம்பெனி முதலாளிமார் பழிவாங்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இத்தகைய பழிவாங்கல்களுக்கெதிராக வழக்குகளும் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது.

அந்த நடவடிக்கைகளுக்குச் சமாந்தரமாக பாரிய முதலீடுகள், பெருந்தெருக்கள், அதிவேக நெடுஞ்சாலைகள் என்ற அபிவிருத்திப் பணிகள் என்ற போர்வையில் மக்களை ஒரு மாய வலைக்குள் சிக்க வைத்தனர். ஆழமாகச் சென்று பார்த்தால் அரசியல் பின்நோக்கோடு பெரும்பாலான விடயங்கள் சீன முதலீட்டோடும், சீனக் கடனோடும், இந்திய முதலீடுகளோடும் அரங்கேற்றப்பட்ட ஆரோக்கியமற்ற விடயங்களாகவே காணப்படுகின்றன. இவை அனைத்தும் முற்று முழுதான அரசியல் நோக்கங்களைப் பின்புலமாகக் கொண்டவையே.


உலக அரசியல் அரங்கில் சீனாவை பலமிழக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை சீன எதிர்ப்பு நாடுகள் மேற்கொண்டாலும் சீனாவுக்கிருக்கின்ற பொருளாதார பலத்தால் அது எத்தகைய சவால்களையும் எதிர் நோக்கக் கூடிய சக்தியாக இருக்கின்றது. இருந்தும் அவர்களால் ஒரு குறிப்பிட்ட தூரத்துக்கே பயணிக்க முடியலாம். அதற்கப்பால் உள்ள நடைமுறைகளைத் தீர்மானிக்கக் கூடிய பலமிக்க சக்தியும் பிரபஞ்சத்தில் உண்டென்பதை மறுப்பதற்கில்லை.

தற்போது மேற் சொன்ன வலைத்தளப் பதிவுகளின்படி அவை சீனாவை இலங்கையில் காலூன்றவிடாத செயற்பாடுகளை ஊக்குவிப்பதாகவே காணப்படுகிறது. கோட்டாபய தானே மஹிந்த அணியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளரென அறிவித்து அமெரிக்க பிரஜாவுரிமையையும் இழக்கத் தயாராகிறார். எனவே இவரோ அல்லது மஹிந்த அணியிலிருந்து வேறு எவரோ இந்த நாட்டு ஜனாதிபதியாக வந்தால் சீன ஆதிக்கம் இலங்கையில் இன்னும் வலு ஆழமாக வேரூன்றும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

பொதுவாக இந்த நாட்டின் வரலாற்றை எடுத்துக் கொண்டால் கால நோய்கள் புதிது புதிதாக உட்பிரவேசிக்கின்றனவே ஒழிய முற்றாக ஒழிக்கப்படவில்லை. ஒரு நாடு தனது இறைமையை இழந்து இன்னொரு நாட்டின் அதிகார வரம்புக்குட்பட்டு அடங்கிப்போவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. கந்து வட்டிக்காரன்போல கடன் கொடுத்துவிட்டு பின்னர் மிரட்டுவதைப்போல சீனாவும் இலங்கைக்குக் கடன் கொடுத்துவிட்டுப் பின்னர் மிரட்டலாம். எல்லாவற்றையும் எதிர்வரும் தேர்தல்களே தீர்மானிக்கும்!

எஸ்.கணபதி

# அந்த... ஒரு நிமிடம்



துரைராசா வழமைபோல தனது மோட்டார் சைக்கிளை கொண்டு வந்து வீட்டுத் தாழ்வாரத்தின் கீழ் நிறுத்தினான். ஆகாயத்தைக் காட்டி மழை வரும் என்றும், மோட்டார் சைக்கிள் பின் கரியரில் இருந்த தகரப்பெட்டியை மூடிக் கட்டுமாறும் துரைராசாவின் மனைவி சைகை மொழியால் அவனுக்குக் காட்டினாள். "ஆம்" என்று தலையை ஆட்டியபடி பொலித்தீனை விரித்துப் பெட்டியை மூடிக் கட்டிவிட்டு வீட்டுத் திண்ணையில் சற்று அமர்ந்து கொண்டபடி கைப் பெருவிரலை வளைத்து வாயருகே வைத்து அவளைத் தேநீர் கொண்டு வரும்படி சொன்னான் துரைராசா.

யுத்தத்துக்குப் பின்னால் இனிப்பு வியாபாரத்தைத் தேர்வு செய்து அதையே கடந்த பத்து வருடங்களாகச் செய்து வருகிறான். காணி, பூமி, வீடு வளவு கல்யாணம், பிள்ளைப் பேறு எல்லாமே இந்த இனிப்பு வியாபாரத்தால் நடந்த கதை. கொழும்பிலிருந்து வருவிக்கப்பட்ட பொதி செய்யப்பட்ட விதம் விதமான இனிப்பு வகைகளை ஊர் மனைகளிலுள்ள கடைகளுக்கு எடுத்துச் சில்லறையாகக் கொடுத்து வருகிறான் துரைராசா. அதற்கேற்றவாறு மோட்டார் சைக்கிள் ஒன்றையும் நன்கொடையாகப் பெற்றுக் கொண்டான். பின்பு அதற்குரிய சாரதி அனுமதிப் பத்திரத்தை வாங்குவதில்தான் சிரமப்பட்டுப் போனான்.

துரைராசா பிறப்பிலே செவிப்புலன் இழந்தவன். தனக்குத் தோதாகச் செவிப்புலன் அற்றதொருவரையே துணையாகத் தேடிக்கொண்டான். குடும்ப வாழ்க்கையின் பலனாக அவனுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. சில நாட்களுக்குப் பின்னரே அக்குழந்தையும் செவிப்புலனற்றுப் பிறந்ததை அறிந்துகொண்டான் துரைராசா. நம்பிக்கையோடு அவளுக்குக் கயல்விழி என்று பெயரிட்டான்.

**நேரம் மாலை**
**5:40:53**

மனைவி கொண்டு வந்த தேநீரைப் பருகியபடி முற்றத்து மாமரத்தில் கட்டப்பட்டிருந்த ஊஞ்சலில் முன்னும் பின்னும் ஆடிக் கொண்டிருந்த கயல்விழியைப் பார்த்துப் புன்னகைத்தான் துரைராசா. "எனக்கு என்ன வாங்கிக் கொண்டு வந்தீங்க...?" எனத் தன்னையே கண்கொட்டாது பார்த்துக் கொண்டிருந்த தனது தந்தையைப் பார்த்துக் கைவிரல்களை அசைத்துச் சைகை மூலம் கேட்டாள் கயல்விழி. தனது கைப்பையிலிருந்த தோதல் துண்டை எடுத்துக் காட்டினான் துரைராசா. ஓடி வந்து துரைராசாவின் கழுத்தைக் கட்டித் தழுவி முத்தமிட்டாள் கயல்விழி. "நல்ல அப்பா" எனச் சைகை காட்டினாள் அவள்.

போன வாரம் கயல்விழியின் ஆசிரியை துரைராசாவை வந்து தன்னைப் பார்க்கும்படி சொல்லி கடிதம் கொடுத்து அனுப்பி இருந்தாள். பாடசாலையின் சிபார்சின்பேரில் கயல்விழிக்கு அரசாங்க உதவித்தொகை ஒன்று கிடைக்கப் போகும் செய்தியைச் சொல்லி அதற்குரிய ஆவணங்களைக் கேட்பதற்காகவே துரைராசாவை வரும்படி சொல்லி இருந்தனர். சமூக சேவைத் திணைக்களத்தினால் வலு விழந்தவர்களுக்காக் கொடுக்கப்படும் கல்வி உதவித்தொகை அது. சிறந்த மாணவி என்ற அடிப்படையில் கயல்விழி அதற்காகத் தெரிவு செய்யப்பட்டிருந்தாள்.

**நேரம்**
**மாலை 5:44:13**

கயல்விழி மீண்டும் ஊஞ்சலில் போயிருந்து வலு வேகமாக முன்னும் பின்னும் ஆடிக்கொண்டிருந்தாள். அவள் வழமையாக அப்படித்தான். ஏதாவதைக் கொறித்தபடி ஊஞ்சலில் இருந்து ஆடுவதுதான் அவளது பொழுது போக்கு. துரைராசா திண்ணை யில் இருந்தபடி கயல்விழியைப் பார்த்துக் கொண்டிருந்தான். எப்படியும் சில நாட்களில் அவள் பருவமடையக் கூடும். அதைச் சிறப்பாகக் கொண்டாடவேண்டும் என்பதுதான் துரைராசாவின் கனவு.

அதைப் பற்றிய பேச்சு வரும்போதெல்லாம் துரைராசாவுக்கும் மனைவிக்குமடையே சண்டை மூண்டுவிடும். கடன் பட்டு விழாச் செய்வதில் சிறிதளவும் உடன்பாடில்லாதவள் துரைராசாவின் மனைவி. "குருவி கூட்டுக்குத்தான் ஆசைப்படலாமே ஒழிய வீட்டுக்கு ஆசைப்படக் கூடாது" என்று சைகை மூலம் காட்டிச் சொல்வாள். "தனக்கு உள்ளது ஒரு பெண் குழந்தைதான்" என அதற்குப் பதில் சொல்லி துரைராசா விடமாட்டான்.

**நேரம்**
**மாலை 5:46:43**

துரைராசாவின் மனைவி ஆட்டுக்குக் குழை ஒடிக்க வீட்டுக்குப் பின்புறமாக உள்ள வேலிப்பக்கம் போய்விட்டாள். வியாபாரத்துக்குப் போய் வந்த களைப்புத்தீர இருந்தவன் எழுந்து உடைகளை மாற்றி சாரத்தை உடுத்தான். கையில் கொண்டு வந்த பில் புத்தகத்தையும், காசுப் பையையும் வீட்டுக்கு உள்ளே இருந்த பெட்டகத்தின் மீது வைத்துவிட்டு வந்தான். ஊஞ்சலில் இன்னும் ஆடிக்கொண்டிருந்தாள் கயல்விழி.

"இனிக் காணும்" எனச் சைகை காட்டி அவளைப் படிக்க ஆயத்தப்படுத்தும்படி சொன்னான் துரைராசா. அவள் அதைக் காணாதவளாய் பொலித்தீன் பையில் இருந்த தொதல் துண்டைச் சுவைத்தபடி ஆடிக் கொண்டிருந்தாள். முன்னும் பின்னும் ஆடினாள். இடமிருந்து வலம் எனவும் வலமிருந்து இடம் எனவும் சுழன்று சுழன்று ஆடினாள். கயிற்றைப் பின்னி விட்டு அது எதிர்திசையில் சுற்றுவதை கண்களை மூடி அனுபவித்துக் கொண்டிருந்தாள் கயல்விழி.

**நேரம்**
**மாலை 5:49:24**

பல் விளக்கியபடி கையில் துவாய்த் துண்டுடன் கிணற்றடியை நோக்கிப் போன துரைராசா திடீரெனத் திரும்பி வந்து கயல்விழி ஆடிக் கொண்டிருந்த ஊஞ்சல் அருகே போனான். கயிற்றைப் பின்னிப் பின்னி ஆடுவதை நிறுத்தச் சொல்லிச் சைகை காட்டி அடிப்பதுபோல அவளை அதட்டினான். கயல்விழி அவனைப் பொருட்படுத்தாது இன்னும் வலு வேகமாக ஆடிக் கொண்டிருந்தாள்.

ஆடு கத்திக் கொண்டிருந்தது. துரைராசாவின் மனைவி ஆட்டுக் கொட்டிலின் வளையில் தான் ஒடித்த குழைக்கட்டைக் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டிருந்தாள். மாலைச் செக்கலிலில் சூழ உள்ள காட்சிகள் எல்லாம் மெல்ல மெல்ல மறையத் தொடங்கின. துரைராசாவின் வீட்டுக்குச் சற்றுத் தொலைவில் இருந்த வீடுகளில் மின்குமிழ்கள் மெல்ல ஒளிரத்தொடங்கின. இன்னும் சில நேரத்தில் துரைராசாவின் வீட்டிலும் லாம்பு ஏற்றப்பட்டுவிடும். அந்த லாம்பு வெளிச்சத்தில் கயல்விழி இருந்து படிக்க வேண்டும்.

**நேரம்**
**மாலை 5:52: 53**

துரைராசா கிணற்றடியில் இருந்து எட்டிப் பார்த் தான். மம்மலில் காட்சிகள் தெளிவாக இல்லை. ஊஞ்சல் இன்னும் சுற்றிக் கொண்டிருந்தது. இடமிருந்து வலமாக வும், வலமிருந்து இடமாகவும் சுழன்று கொண்டி ருந்த ஊஞ்சலை அவனால் தெளிவாகப் பார்க்க முடியவில்லை. துரைராசாவுக்கு அவனையறியாமல் கயல்விழிமேல் கோபம் பொங்கிக்கொண்டு வந்தது. ஊஞ்சலை நோக்கி ஓடிவந்தான் துரைராசா.

**நேரம்**
**மாலை 5:53:17**

ஊஞ்சலுக்கு அண்மையில் நின்று ஊஞ்சலில் சுற்றிக் கொண்டிருந்த கயல்விழியை உற்றுப் பார்த்தான் துரைராசா. வார்த்தைகளற்றுக் கத்தத் தொடங்கினான் அவன். கயல்விழியின் நாக்கு வெளியே தொங்கிக் கொண்டிருந்தது. அவள் ஊஞ்சலில் இடம் வலமாகச் சுற்றும்போது கயிற்றின் இடுக்கில் தலை இறுகி மரணித்து சில நிமிடங்களாயிருந்தன.

எதுவும் நடக்காததைப் போல தொலைவில் இருந்த ஆட்டுக் கொட்டிலில் ஆடுகளுக்குக் குழையைக் கொடுத்துக் கொண்டிருந்தாள் துரைராசாவின் மனைவி.

☹

# தகவல் மறுக்கும் தொழிற்சங்கங்கள் துணைநிற்கும் தொழில் திணைக்களம்

மலையக தோட்டத் தொழிலாளர்களை அங்கத்தவர்களாகக் கொண்டிருக்கும் 6 தொழிற் சங்கங்கள் தொடர்பாக 'மாற்றம்' தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக தொழில் திணைக்களத்தில் தமிழ் மொழி மூலம் தகவல்கள் கோரியிருந்தது. அங்கத்தவர்கள் எண்ணிக்கை, ஒரு தொழிலாளியிடமிருந்து பெற்றுக்கொள்ளும் சந்தாத் தொகை, தொழிற்சங்கங்கள் மாதாந்தம், வருடாந்தம் பெற்றுக்கொண்ட சந்தா பணம், ஓராண்டுக்கு தொழிற்சங்கங்கள் செலவழித்த தொகை, எதற்காக? கடந்த 3 வருடங்கள் மேற்கண்ட தொழிற்சங்கங்களால் கிடைக்கப்பெற்ற ஆண்டு கணக்கறிக்கை போன்ற விடயங்களடங்கிய தகவல் கோரிக்கை விண்ணப்பத்தை மாற்றம் நேரடியாகவே சென்று தொழில் திணைக்களத்தின் தகவல் அதிகாரியிடம் கையளித்திருந்தது.

கேட்கப்பட்ட கேள்விகளுள் சிலவற்றுக்கு மாத்திரம் பதில் (தெளிவற்ற விதத்தில்) கிடைத்துள்ள போதிலும் ஒரு சில கேள்விகளுக்கு பதில் தரப்பட்டிருக்கவில்லை. அதற்கான காரணமும் குறிப்பிடப்படவில்லை. ஆனால், தொழிற்சங்கங்களின் ஆண்டு கணக்கறிக்கைகளை தொழில் திணைக்களம் தர மறுத்தது. "2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவல்களுக்கான உரிமைச் சட்டத்தின் 5(1) க பிரிவின் படி தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாமையை தங்களுக்குத் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று மேலதிக தொழில் ஆணையாளர் நாயகம் சி.என். விதனாச்சியின் கையெழுத்துடன் கூடிய பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'மாற்றம்' தனது முதல் தகவல் கோரிக்கை விண்ணப்பத்தை 2018 ஒக்ரோபர் மாதம் 12ஆம் திகதி கையளித்தது. இதற்கான பதிலை வழங்க சரியாக 2 மாதங்களை தொழில் திணைக்களம் எடுத்தது. தமிழ் மொழியில் விண்ணப்பித்ததால் மாற்றம் அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்க நேரிட்டது. தமிழ் தெரியாததால் ஏற்றுக்கொண்டதற்கான பத்திரத்தை உடனடியாக தரமுடியாது என்று தகவல் அதிகாரி குறிப்பிட்டார்.

ஒக்ரோபர் 25 ஏற்றுக்கொண்டதற்கான பத்திரம் எமக்குக் கிடைத்தது. 2018 டிசம்பர் மாதம் 12ஆம் திகதி கிடைக்கப்பெற்ற பதிலில் மாற்றம் கேட்டிருந்த 7 கேள்விகளில் 3 இற்கு மட்டுமே பதில் வழங்கப்பட்டிருந்தது. ஏனைய நான்கு கேள்விகளுக்கான பதில்களை தரமுடியாது என்றோ தகவல் அறியும் சட்டத்தை மீறுகிறது என்றோ பதிலில் குறிப்பிட்டிருக்கவில்லை. இந்த இரண்டு மாத காலப்பகுதியில் பதில் கிடைப்பதற்கு தாமதம் ஏற்பட்டதால் பல தடவைகள் தொலைபேசி மூலம் தகவல் அதிகாரியை தொடர்புகொள்ள நேரிட்டது. "இங்குள்ளவர்களுக்கு தமிழ் மொழி தெரியாததால் உங்களது விண்ணப்பத்தை சிங்களத்துக்கோ அல்லது ஆங்கிலத்துக்கோ மொழிபெயர்க்க வேண்டும். முழு திணைக்களத்துக்கும் ஒரு தமிழ் மொழிபெயர்பாளரே இருக்கிறார். எல்லோரும் அவருக்குத்தான் கொடுப்போம். அதனால்தான் தாமதமாகிறது" என்று தகவல் அதிகாரி குறிப்பிட்டார்.

| | CWC | LJEWU | NUW | JPTUC | UPF | SRFU |
|---|---|---|---|---|---|---|
| அங்கத்தவர்கள் எண்ணிக்கை (2017) | 383,007 (2017/2018) | 148,242 | 21,280 | 8 தொழிற் சங்கங்கள் | | |
| ஆண் | | 90,701 | 11,770 | | | |
| பெண் | | 57,541 | 9,510 | | | |
| மாதாந்த சந்தாப் பணம் | தொழிலாளர்கள் ஆயின் நாட் சம்பளத்தின் 1/3 பங்கு. தொழிலாளர்கள் அல்லாதோர் ரூபா 40 | சம்பளத்தில் 1/3 பங்கு | ரூபா 25 | ரூபா 300 | சம்பளத்தில் 1/3 பங்கு | ரூபா 100 |
| 01.04.2016 - 31.03.2017 மொத்த சந்தாப்பணம் | 77,751,933 | 22,437,558.53 | 34,524,328.41 | | | |
| 01.04.2017 - 31.03.2018 மொத்த சந்தாப் பணம் | | 24,702,439.33 | | | | |

தொழில் திணைக்களம் வழங்கிய பதில் திருப்தியளிக்காத காரணத்தினால் மாற்றம் 07.01.2019 மேன்முறையீடு செய்தது. இதற்கும் பதில் வழங்க திணைக்களத்திற்கு கிட்டத்தட்ட ஒன்றரை மாதங்கள் (20.02.2019) எடுத்துக்கொண்டது. இந்த இடைப்பட்ட காலத்தில் திணைக்களத்தின் மொழிபெயர்ப்பாளர் மாற்றத்தை தொடர்புகொண்டிருந்தார். "இங்கு நான் மட்டும்தான் இருக்கிறேன். விண்ணப்பத்தை ஆங்கிலத்தில் அனுப்பியிருந்தால் இலகுவாக இருந்திருக்கும். எனக்கு அவ்வளவாக சிங்களம் தெரியாது. தொழிற்சங்கங்களின் பெயர்களை நீங்கள் தமிழில் தந்திருப்பதால் அதனைத் தேடுவது கடினம்" என்று குறிப்பிட்டிருந்தார்.

மேன்முறையீட்டின்போது கிடைத்த பதிலுக்கும் முதல் விண்ணப்பத்தின்போது கிடைக்கப்பெற்ற பதிலுக்கும் இடையே பெரிதாக வித்தியாசத்தை காணமுடியவில்லை. தொழிற்சங்கங்களின் அங்கத்தவர்கள் விவரம், ஒரு அங்கத்தவரிடம் அறவிடும் மாதாந்த சந்தாப் பணம், ஒரு வருடம் பெற்றுக்கொண்ட சந்தாப் பணம் போன்ற தகவல்களை மாற்றத்தால் பெற்றுக்கொள்ள முடிந்தது.

அட்டவனையில் குறிப்பிடப்பட்டிருக்கும் தொழிற்சங்கங்களின் தமிழ் பெயர்கள்

CWC - இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்

LJEWU - இலங்கை தேசிய தோட்டத்தொழிலாளர் சங்கம்

NUW - தேசிய தொழிலாளர் சங்கம்

UPF - மலையக தொழிலாளர் முன்னணி

JPTUC - தோட்டத் தொழிலாளர் கூட்டமைப்பு

SRFU - இலங்கை செங்கொடி சங்கம்

மேலுள்ள அட்டவணையில் இடைவெளியாகக் காணப்படும் பகுதிகளில் திணைக்களம் "எங்களிடம் தகவல் இல்லை" என்று குறிப்பிட்டிருந்தது.

அட்டவணையில் காணப்படும் முக்கிய விடயங்கள்

தொழிற்சங்கங்களிடம் இருந்து இறுதியாக கிடைக்கப்பெற்ற ஆவணங்களின் அடிப்படையில் உறுப்பினர் விவரங்களை கேட்டிருந்தோம். 2017ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற அறிக்கையைக் கொண்டே திணைக்களம் மாற்றத்துக்கு தகவல்களைத் தந்திருக்கிறது. அதன்படி கிட்டத்தட்ட 4 இலட்சம் அங்கத்தவர்களை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கொண்டிருக்கிறது. இலங்கை தேசிய தோட்டத்தொழிலாளர் சங்கம் ஒன்றரை இலட்சம் அங்கத்தவர்களையும் தேசிய தொழிலாளர் சங்கம் 21,280 அங்கத்தவர்களையும் கொண்டிருக்கின்றன. இப்போது பெருந்தோட்டத்தில் ஒன்றரை இலட்சம் தொழிலாளர்களே வேலை செய்து வருகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டுவரும் நிலையில் திணைக் களம் வசமிருக்கும் 3 தொழிற்சங்கங்களின் தொகை மட்டும் ஐந்தரை இலட்சத்தைத் தாண்டுகிறது.

இணைக்கப்படாத அங்கத்தவர் விவரங் களை வருடா வருடம் தொழிற்சங்கங்கள் அனுப்ப அதனையே தொழில் திணைக் களமும் பராமரித்து வருவது இதன் மூலம் தெரிகிறது.

தேசிய தொழிலாளர் சங்கம் ஒரு தொழிலாளியிடமிருந்து 25 ரூபா பெறுவதாக தொழில் திணைக்களம் வழங்கிய பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அடிப்படை சம்பளம் 700 ரூபாவாக அதிகரிக்கப்படும் வரை குறித்த தொழிற்சங்கத்தில் அங்கத்தவர்களாக இருக்கும் தொழிலாளர்களிடம் மாதாந்தம் சந்தாப் பணமாக 150 ரூபா பெற்றுக்கொள்ளப்பட்டதை மாற்றம் உறுதிப்படுத்தியது.

நாம் பெற்றுக் கொண்ட தகவல்களின் அடிப்படையில் ஓர் ஆண்டுக்கு (01.04.2016 – 31.03.2017) இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஏழு கோடியே எழுபத்தேழு இலட்சம் (77,751,933) ரூபாவை தொழிலாளர்களிடமிருந்து சந்தா பணமாக பெற்றுள்ளது. அதேபோல, இலங்கை தேசிய தொழிலாளர் சங்கம் இரண்டு கோடியே இருபத்தி நான்கு இலட்சம் (22,437,558.53), தேசிய தொழிலாளர் சங்கம் மூன்று கோடியே 45 இலட்சம் (34,524,328.41) என தொழிலாளர்களிடமிருந்து சந்தாப் பணமாக பெற்றுள்ளது.

குறித்த தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் சந்தா பணத்தில் மேற்கொள்ளும் செலவுகள் என்னவென்று முதல் விண்ணப்பத்தில் கோரியபோது பதில் வழங்கப்படாததால், மேன்முறையீட்டின்போது செலவுகளை உள்ளடக்கிய ஆண்டு கணக்கறிக்கையை மாற்றம் கேட்டிருந்தது. அதற்கு தகவல்களுக்கான உரிமைச் சட்டத்தின் 5(1) f பிரிவின் படி தகவல் தரமுடியாது என்று தொழில் திணைக்களம் மறுத்துள்ளது.

இதனை எதிர்த்து மாற்றம் தகவல் அறியும் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யவுள்ளது.



# எந்தப் படை வெல்லும்?

இந்த வாரம் மேடையை அலங்கரித்தது "Fastlane" என்ற பெயரில் ஒரு முஷ்டி மோதல்! என்றோ உடைந்து விட்ட ஷீல்ட் என்ற கூட்டணி, பழையபடி முஷ்டியை மடக்கி, ஒன்றாக இணைந்திருந்தனர்.

இது றோமன் றெயின் தன் கூட்டாளி செத் றொலின்ஸிடம் "கடைசியாக ஒரு தடவை" என்று கேட்டதற்கிணங்க டீன் அம்பறோஸையும் இணைத்துக் கொண்டு பலமான ஒரு படை பிறந்திருக்கின்றது. இவர்களை அடிக்கடி சீண்டிக் காயப்படுத்தும் மக்கின் ரயரின் படை இலேசுப்பட்டதல்ல!

முதலில் றோமனை அடித்துத் துவைத்த மக்கின்ரயரிடம் சவாலுக்கு போன அம்புறோஸும் நன்றாக வாங்கிக் கட்டியுள்ளார். பிறந்த நாளைக் கொண்டாடிய றிக் பிளேயரை அடித்து இழுத்து வந்த பற்றிஸ்டா ஞாபகத்திற்கு வருகிறாரா? குத்துச்சண்டை வீரரும் ஹொலிவுட் நடிகருமான இவர், தன் பாதுகாப்புப் படையினருடன், எதிரியின் களத்தில் புகுந்து, றெஸ்ஸிள் மேனியாவில் றிபிள் எச்சுடன் மோத, அவரிடமே சவால் விட்டுப் போவது இந்த வாரத்தின் இன்னொரு பரபரப்பு.

இந்த மேடைச் சண்டைகளெல்லாம் வெறும் கேலிக் கூத்துகள், போலியானவை என்று கோபாவேசத்தோடு சாடிய றொண்டாவுடன் முட்டாள்தனமாக சவால் விட்ட டனா புரூக நன்றாக வாங்கிக் கட்டினார். தடுக்க வந்த நடுவர்களில் ஒருவரும் பலமான "அறை" வாங்கிக் கொண்டார். சார்லொட்டுக்கும் லிஞ்சுக்கும் இடையிலான மோதலை றொண்டா இடையில் குழப்ப, வெற்றி லிஞ்சுக்கு என்று அறிவித்தார்கள்.

றெஸ்ஸிள்மேனியா மோதல்களில், மூவரும் ஆளுக்கு ஆள் மோதுவது என்று முடிவாகி இருக்கின்றது. ஒலிம்பிக் பதக்க வீரரும், நீண்ட காலமாக இந்த அமைப்புக்காக விளையாடுபவருமான கேர்ட் அங்கிள், தன் "பதவி ஓய்வை" அறிவித்ததோடு, றெஸ்ஸிள்; மேனியா மோதல்தான் தனது இறுதி மோதலாக இருக்கும் என்பதையும் தெரியப்படுத்தினார். இன்னொரு சூடான செய்தியாக, "இன்டர்கொன்டினென்டல்" சம்பியன் பெல்ட் மீண்டும் பொப் லாஸ்லியின் கைக்குப் போயிருக்கின்றது... உபயம் லாஸ்லியின் வாலான லியோ றஷ் செய்த திருக்கூத்து!

# ஆனை விலை குதிரை விலை




உலக வெற்றிக் கிண்ணப் போட்டிகளுக்கு இன்னும் சுமாராக இரண்டு மாதங்களே எஞ்சிய நிலையில், இதற்கான நுழைவுச் சீட்டுகளின் விற்பனை ஆரம்பமாகி விட்டது. ஒரு நுழைவுச்சீட்டின் விலை என்னவாக இருக்கும்? தமது நாடுகள் விளையாடும் மோதல்களைப் பார்க்க இந்தியா, இங்கிலாந்து விசிறிகள்தான் அதிக பணம் கொடுக்க வேண்டி வரும் என்கிறார்கள். மிகக்குறைந்த நுழைவுச் சீட்டின் பெறுமதி 40 பவுண்ஸ் (சுமாராக 10,000 ரூபாய்)

இந்த நுழைவுச் சீட்டுடன் பங்களாதேஷ், ஆப்கானிஸ்தானுடனான மோதல்களை மட்டுமே பார்க் முடியும்.இங்கிலாந்து, இந்தியா விளையாடும் ஏனைய மோதல்களை நேரில் பார்க்க கட்டணம் 70 பவுண்ஸ் வரை உயர்கின்றது. சமீபத்தில் நடந்து முடிந்த ஒருநாள் ஆட்டத்தொடர்கள் மூன்று, எதிர்வரும் உலகக் கிண்ணப் போட்டிகள் எப்படி முடியப்போகின்றன என்ற ஆவலை நன்றாகவே தூண்டி விட்டிருக்கின்றன.



# மூன்றாவது தங்கத்துக்கு குறி!

35 வயதான மோ ஃ பாராவை (Mo Farah) உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? பிறப்பால் ஆபிரிக்கரான இவர், சேர் பட்டம் பெற்ற பிரித்தானிய பிரஜை. 10,000 மீற்றர் மரதன் ஓட்டத்தில் இரண்டு தங்கப் பதக்கங்களை வென்றவர், உலகளாவிய ரீதியாக வேறு பல போட்டிகளிலும் முதலிடத்தில் ஜொலித்தவர் இந்தத் தடகள வீரர். விளையாடுவதிலிருந்து ஓய்வு பெற்றவர், இப்போது மீண்டும் களத்தில் இறங்கவுள்ளார்.

ரோக்கியோ நகரில் 2020இல் இடம்பெறப்போகும் ஒலிம்பிக் போட்டியில், தனது மூன்றாவது தங்கப் பதக்கத்தைக் குறிவைத்துள்ளார். அதற்கு முன்பாக இலண்டனில் வருடா வருடம் இடம்பெறும்(ஏப்ரல் மாதத்தில்) 26.2 மைல் தூர மரதன் ஓட்டப்போட்டியில் இவர் கலந்து கொள்ளப் போகிறார். இந்தப் போட்டி அவர் எதிர்காலத் திட்டங்களுக்கு ஓர் அளவுகோலாக அமையப் போகின்றது, 2017 இல் ஓய்வு பெற்ற இவர், எதிர்வரும் ஒக்ரோபர் 6 இல் டோஹா(கட்டார்)நகரில் இடம்பெறப் போகும் 10,000 மீற்றர் மரதன் ஓட்டப்போட்டியிலும் கலந்து கொள்ளவுள்ளார்.

# அரவணைப்பும் அடிகொடுப்பும்



திடீர் திடீரென சர்ச்சைகளில் சிக்கி, பெயர் அடிபடுவது, பந்தோடு அடிபடும் றொனால்டோவுக்கு புதிதல்ல. இவர் Atletico Madrid என்ற ஸ்பானிய கழகத்திற்கு எதிராக ஜுவென்டஸ் கழகம் விளையாடியபோது "ஹெட்ரிக்" கோல்கள் அடித்துள்ளார்.

இப்படி ஹெட்ரிக் கோல்கள் அடிப்பது, இது இவருக்கு நான்காவது தடவை!

கழகங்களிடையே உள்ள பணக் கொடுப்பனவுத் திட்டங்களின் பிரகாரம், அட்லெட்டிக்கோ மட்ரிட்க்கு கிடைத்த தோல்வி, றொனால்டோ விளையாடிய பழைய கழகத்திற்கு சுளையாக 540,000 டொலர்கள் உழைப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. அதே சமயம் இந்த மோதலின்போது அட்லெட்டிக்கோ மட்ரிட் கழக முகாமையாளரை மோசமான "கை அசைவுகள்" மூலம் றொனால்டோ வசைபாடினார் என்ற காரணத்தால் 17,100 டொலர் தொகை தண்டத் தொகையாக செலுத்தவேண்டி வரலாம்.

இந்த முகாமையாளர் ஏற்கனவே றொனால்டோவின் இதே சேஷ்டையை மைதானத்தில் செய்யப் போய், இதே தொகையை தண்டமாகச் செலுத்தியிருந்தார்.

வேண்டப்படாத நிகழ்வுகள் அரங்கேறி இருந்தாலும், அட்லெட்டிக்கோ மட்ரிட் கழகத்தின் ஆர்ஜென்டீனா நாட்டு முகாமையாளர், உலகின் தலைசிறந்த வீரர்களுள் றொனால்டோவும் ஒருவர் என்று புகழாரம் சூட்டத் தவறவில்லை.



கிளிநொச்சி கரைச்சி புளியம்போக்கனை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

அனைவருக்கும் கிரடிட்கார்ட் உடன் Peoples's Wave Mobile Banking வசதி

PEOPLE'S Wave

குறித்த வர்த்த நிலையங்களில் கிரடிட் கார்ட்டுக்கு 50% கழிவு

Wiz credit மூலம் இப்போது Digital முறையில் கடன் வசதி ஒரே நாளில்

WiZCredit.

கணக்கு மிகுதியில் 90% வரை கடன் வசதி

தனிநபர் கடன் / வியாபாரக் கடன்
வீடமைப்புக் கடன் / வாகனக் கடன்
ஆகியவற்றுக்கு முன்னுரிமை சேவை

அதிகமாக சேமிக்கும் உங்களுக்கு அதிகமான பரிசுகள்...!

இப்போது மக்கள் வங்கியின் Digital புரட்சியின் காரணமாக அனைத்தும் விரைவாகியுள்ளது...

PEOPLE'S digital

PEOPLE'S BANK

The Bank of the People

Paranthan





KIRUBAA LEARNERS

கிருபா லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை

நல்ல சாரதி நாட்டுக்கு தேவை.

இன்றே கிருபா லேணர்ஸ் உடன் இணைந்து கொள்ளுங்கள்.

நாகதம்பிரான் வருடாந்த பொங்கல் உற்சவம் சிறப்புற வாழ்த்துகின்றோம்!

**யாழ்ப்பாணம்**

முதலாம் கட்டைச் சந்தி
பருத்தித்துறை
021 4923201
071 4546961

இல 227/6 கே.கே.எஸ் வீதி
சுன்னாகம் (மதவாடி அண்மையில்)
021 224 2022
071 454 6958

பிரதான வீதி, நெல்லியடி
(பொலிஸ் நிலையம் முன்பாக)
021 300 6550
071 454 6958

கண்டி வீதி, சாவகச்சேரி
(நீதிமன்றம் அண்மையில்)
021 492 3202
021 227 0700

யாழ்.கச்சேரியடி,
யாழ்ப்பாணம்
39, நல்லூர் வீதி
021 222 6699
076 722 5292

ஓம் பிளாசா
பருத்தித்துறை வீதி,
ஆவரங்கால்
021 222 6688
077 242 2622

**கிளிநொச்சி**

ஏ9 கிளிநொச்சி
(கச்சேரி முன்பாக)
021 228 5505
071 454 6955

வாடியச்சந்தி
பூநகரி
021 320 1818
070 333 7171

புளியடிச்சந்தி
முல்லைவீதி, விசுவமடு
021 320 1515
071 454 6955

**வவுனியா**

நாச்சிகுடா சந்தி
மன்னார் வீதி, முழங்காவில்
021 300 6544
070 333 6161

216, ஏ9 வீதி, வவுனியா
(வசந்தி திரையரங்கு முன்)
024 222 7777
077 710 0444

**மன்னார்**

இல 94, பிரதான வீதி
மன்னார்
023 225 1656
077 847 2732

பெண்களாலேயே பெண்களுக்கு பயிற்சி வழங்கப்படும்

தலைமைக் காரியாலயம்: 226, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
021 222 4353, 021 492 3200, 077 722 5292



உங்கள் கிணற்று நீர் பருகுவதற்கு உகந்ததா?

நீரில் உள்ள பிரச்சினைகளின் தீர்வாக நாங்கள்....

12 MONTHS WARRANTY

- இலவச நீர்ப்பரிசோதனை
- இலவச ஆலோசனை
- 24 Hours விற்பனைக்குப் பிந்திய சேவை
- Life Time service warranty





SPECIAL DISCOUNT 5% OFF SPECIAL DISCOUNT

நீங்கள் அருந்தும் நீர் Yarl Smart Water Filter நீர் ஆக இருந்தால் நீங்களும் SMART

உங்கள் வீடுகளில் / தொழிற்சாலைகளில்
வேறு நிறுவனங்களினால் பொருத்தப்பட்டிருக்கும்
நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களையும் எம்மால் சரிபார்த்து தரப்படும்.

Yarl Smart Water Solution (Pvt) Ltd

Hotline:- 021 430 0044 , 077 057 3684 , 077 473 9802 , 077 112 6410

No.319,K.K.S Road,Jaffna. / Karadippokku Junction,A9 Road,Kilinochchi.


இப்பத்திரிகை இல.10. வில்வம் தெரு. கொழும்புத்துறை. யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள நோர்சி மீடியா ( பிறைவேட் ) லிமிடெட் நிறுவனத்தால் 23.03.2019 அன்று வெளியிடப்பெற்றது.